**RAJA & CO SOLICITORS**
We provide following Legal Services:
Conveyancing:
Buying and Selling
Houses, Flats & Business
- Criminal Cases
- Civil Litigation
- Family
- Immigration

TOOTING
10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900

COLLIERS WOOD
2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ
Tel: 020 8543 4974

We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 08 ◆ ISSUE - 164 ◆ FRIDAY 24 FEBRUARY 2012

**LONDON ACCIDENT CLAIMS LIMITED**
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
- தனிநபர் அடைந்த நஷ்ட ஈடு (Neck, Back & Shoulder Pain)
- (Terms & Conditions Apply)
NO WIN NO FEE
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




**FAIRCUT BARBERS**
BEST TAMIL BARBER IN TOOTING

Excellent Cut or your Money Back 100% GUARANTEE
15, London Road, Tooting, SW17 9JR
(Next to Tooting British Rail Station)

**AKILAN ENTERPRISES**
உங்களுக்குத் தேவையானவை
- இசைக்கருவிகள்
- தெய்வீக வழிபாட்டுப் பொருட்கள்
- அழகுப் பொருட்கள்
- புத்தம் புதிய மதுரை மல்லிகைப்பூ
- கல்யாண மாலைகள்
அத்துடன்
Video & Photography
போன்றவற்றை பெற்றுக்கொள்ள உடன் அழையுங்கள்...
274 High Street North, Manor Park, London E12 6SA
Tel : 020 8548 0033/ FAX 020 8548 0300

**CASH LOANS**
தங்கம், நகைகள், கைக்கடிகாரம், கார்கள் மின்சாரப் பொருட்கள் மற்றும் பெறுமதியான பொருட்களுக்கு ஈடாகக் கடன் வழங்கப்படும்.
- நியாய விலைக் கடன்
- தனிப்பட்ட ரீதியான சேவை
- நட்பு ரீதியிலான சேவை
- மிகச் சிறந்த விலையில்!
1976 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது
www.maxcroft.co.uk
Maxcroft Tel 020 8518 1828
632 Eastern Ave, Ilford, Essex IG2 6PG (Near Gants Hill Tube)

குறைந்த வீத வட்டியில் அடைவு

அழையுங்கள்
020 8682 2233
Rathy Jewellers Tooting
209 Upper Tooting Road, Tooting SW17 7TG

**GAITHIRI NATHAN & CO.**
SOLICITOR & COMMISSIONER FOR OATHS
Practising Since 1983 in UK
FOR QUALITY LEGAL SERVICES
- COMMERCIAL & RESIDENTIAL CONVEYANCING
- LIQUOR LICENSING & PLANNING APPLICATIONS
- IMMIGRATION, NATIONALITY, ENTRY CLEARANCE APPLICATIONS, WORK PERMIT & HSMP
- WILLS & PROBATE
- DIVORCE & FAMILY (NON LEGAL AID) & MORE
சகல விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் உடன் தொடர்பு கொள்ளவும்
513a & 515a High Road, Wembley, Middlesex, HA0 2DH (by appointment only)
Tel: 0208 903 7217
Fax:0208 903 0052
72 Chestnut Drive, Pinner, Middlesex HA5 1LY
Mail : gaithirisolicitor@btinternet.com


**Affordable IT Support services for Businesses and medium size Companies**
உங்கள் கொம்பியூட்டர் பிரச்சனைகளை நாங்கள் கவனித்துக் கொள்ள... கவலைகளை மறந்து உங்கள் வியாபாரத்தில் வெற்றியடையுங்கள்.
Do what you're best at = Business
We are best at = IT support
Hassle free option
FREE Consultation
Call us on
020 7043 4318
IT SUPPORT
let us look after it.


**ஜாதகம்**
திருமணப் பொருத்தம், விசா, குடும்பப் பிரச்சினை, நோய்கள், பரிகாரங்கள் அனைத்துக்கும் இந்தியாவில் மதுரையில் இருந்து புகழ்பெற்ற
சோதிட வாக்கினி பிரேமலதா அவர்கள்
SKYPE மூலம் தீர்வு சொல்லுவார்
ஒரு முறை நேரில் பார்த்தால் வாழ்க்கையில் மாற்றம் காணுவீர்கள்
இலண்டனில் தொடர்புகளுக்கு
SAVITHRIYAMMA
Tel : 020 89044857
Mob : 07946 544 699 / 07405 944 815

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

## Prime Training College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்

**Our services:**

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு

£ 190 .00 மட்டுமே (பரீட்சைக் கட்டணம் உட்பட)

You Pay Only Once, We Train You until You Pass, Certificate with 20 Days

பிரித்தானியா மற்றும் விடயங்களை ESOL பயிற்சி ஆகவும் குடியுரிமை வகுப்புக்கள் ஆகவும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம்.

சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு.

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

Tel: 020 8150 9953 | Mob: 075 3893 3261

இங்கே ஞாயிறு 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு.

**Branches**
- Wembley
- Tottenham
- Hendon
- Manchester
- Coventry
- Birmingham
- Bradford

**Head Office**
14 Lombard Business Park,
2 Purley Way, Croydon
CR0 3JP.

இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு.

www.primetrainingcollege.co.uk

## Global fresh fish



**Billings gate market (Main branch)**

**Global fresh fish (Branch office in south Harrow)**

அனைத்து வகையான தரமான கடலுணவு வகைகளை மலிவாக நீங்கள் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள். உங்களின் எண்ணம் போல் வெட்டி சுத்தம் செய்தும் தரப்படும்.

Contact : Seenu

230 B, NorthHolt Road, South Harrow, Middlesex , HA2 8DU

Contact Tel : 020 8423 9938 ,07574 094 924

பிரியமானவர்களே...

**"உங்கள் துக்கம் சந்தோசமாய் மாறும்"**

இந்த தேசத்தில் உன் உள்ளம் எதை குறித்து கலங்குகிறது?

- கணவனின் குடி பழக்கத்தினால் நோகடிக்கப்படுகிறாயா?
- குழந்தையின் உடல் உள நிலையை குறித்து கலங்குகிறாயா?
- மரணத்திற்கேதுவான நோயா?
- கடன் தொல்லையா?
- பில்லி சூனியமா?
- பிள்ளைகளை குறித்து பாரமா?
- மன அழுத்தமா?
- கணவன் மனைவிக்கிடையில் பிரச்சனையா?
- திருமணமாகி குழந்தைகள் இல்லை என்று கலங்குகிறாயா?

*அருள்நாதர் இயேசு சொல்கிறார்:*
*"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னிடத்தில் (இயேசு) எல்லோரும் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."*
*வாருங்கள் ஜெபிப்போம் இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெறுவோம்.*

**ஞாயிறு ஆராதனை நடை பெறும் இடம்:**
19-21 Bellingham Estate, Bellingham,
Catford, Lewisham. SE6 3BX
நேரம் 2.30 pm
[Near Bellingham station]
[Bus Stop Catford Bus Garage]
[Bus route no: 47,54,136, 171 ,199, 208, 320]

தொடர்புகளுக்கு: நல்ல சமாரியன் தேவ சபை

**Bro. Edmond**
Mob: 07877 977 086 Tel: 020 8691 2705

## KALVIKOODAM TUITION CENTRE

லண்டன் வாழ் இலங்கைத் தமிழருக்கு ஓர் இனியசெய்தி.....!!!

FREE Basic Tamil Lessons

Tamil Lessons: Beginners, Intermediate, Advanced £5/hr

Maths, English, Science £10/hr per subject

தமிழ்மொழியை கற்க ஓர் சிறந்த இடத்தினை தேடிக்கொண்டிருக்கும் உங்களுக்காக ஓர் கல்விக்கூடம்

தமிழ்மொழி மட்டுமின்றி கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற இன்னும் பல பாடங்களை ஒரே கூரையில் கற்க நாடவேண்டிய ஒரே இடம்.

'கல்விக்கூடம்'

edexcel
advancing learning, changing lives

IGCSE தமிழ்மொழிப் பரீட்சைப் பாது அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தினூடாக வெளிவாரியாகத் தோற்றவும் முடியும்.

பிரதி ஞாயிறு தோறும்
10.00 மணிமுதல் - மாலை 08.00 மணிவரை நடைபெறும்

- தொடர்புகளுக்கு -
020 8090 3366
07738 056 950
www.kalvikoodam.co.uk

Harrow Branch
167, Imperial Drive
Harrow, HA2 7HD

Wembley Branch
24-28, London Road,
Wembley, HA9 7EX

Edgware Branch
2, Turner Road,
Edgware HA8 6BJ

## UK COOL AND SHOP FITTING

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

7 Days 24 HRS services & Repair

URGENT REPAIR? CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY

## SURREY PAWNBROKERS

உங்கள் நகை அடைவில் உள்ளதா ?

அதி கூடிய வட்டியா ?

கவலை வேண்டாம்!

நாம் நேரில் வந்து உங்கள் நகைகளை மீட்டு குறைந்த வட்டியில் (3.5%) மீள் அடைவு செய்து தரப்படும்.

- நகை அடைவும் மீள் அடைவு சேவையும்
- பழைய புதிய நகைகள் கொள்வனவு செய்யப்படும்
- வங்கிக் கணக்கு இல்லாதோருக்கு காசோலை மாற்றுதல்
- நாணய மாற்று சேவை

உங்கள் நகைகளுக்கு

பிரித்தானியாவில் அங்கீகாரமும், உத்தரவாதமும் பெற்ற ஒரே தமிழ் நிறுவனம் SURREY PAWNBROKERS

தொடர்புகளுக்கு: Surrey Pawnbrokers
94, TOLWORTH BROADWAY, TOLWORTH,SURREY, KT6 7HT
T: 0208 399 9176 M: 07947 579 682




## யார் இந்த சார்லசு அந்தனி?

ஒரு பேப்பர் ன் 161வது பேப்பரில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இந்தியபிரதிநிதிஎனசார்லசு அந்தனிஎன்பவரை செவ்வி கண்டு பிரசுரித்திருந்தீர்கள். இவர் யார்? இவரது உண்மையான பெயர் என்ன என்பது பற்றி தெரிந்து கொண்டுதான் அந்தச் செவ்வியை பிரசுரித்தீர்களா? இவர் ஈழத் தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட்டுக்கொண்டு, கட்டுரைகளில் ஈழத் தமிழர்களின் ஆதரவாகச் செயற்பட்டு வருகிறார் என உறுதியான தகவல்கள் கிடைத்துள்ளன. சவால் விடுகிறேன் உங்களால் முடிந்தால் அவரது படத்தை பிரசுரியுங்கள் பார்க்கலாம்.

*கண்ணன்*

## கூட்டமைப்பு அலுவலகத்துக்கு தும்புகட்டை...

கூட்டமைப்பிற்கு கொழும்பு அலுவலகத்தில் பணியாளர்களை அமர்த்துவதற்கு நிதி சேர்த்ததாக போஸ் அவர்கள் எழுதியிருக்கிறார். 'மரத்தை மறைத்த யானை' கதைகளை விட்டுட்டு அவரிடம் சில கேள்விகளை நேரடியாகவே கேட்கிறேன். சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகம் நடாத்தவும், செயலாளர்களுக்கு வேதனம் வழங்கவும் அந்நாட்டு அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது. ஆகவே கூட்டமைப்பிற்கு கொழும்பைத் தவிர வேறு எத்தனை அலுவலகம் இருக்கிறது? டெல்லியிலும் ஒரு அலுவலகம் திறக்க இருப்பதாக முன்பு செய்தி வந்தது? எப்போது திறக்கப்போகிறீர்கள்? அதற்கும் நிதி வசூலிக்க இருக்கிறீர்களா?

*அழகானந்தன்*

## ஊக்குவிப்புக்களே ஊட்டச்சத்து!

ஆசிரியர் அவர்கட்கு,

'வாழ்ந்து படிக்கும் பாடங்கள்' பத்தியில் திரு.என்.கணேசன் எழுதும் கருத்துக்கள் வாசகர்களைக் கவரத் தவறாது என்பது நம்பிக்கை. வாசித்து விட்டு 'கம்' மென்று இருக்காமல், நல்லதோ கெட்டதோ நாலு வார்த்தைகள் எழுதுங்கள். வாசகர்களின் விமர்சனம்தான் கட்டுரையாளர்களை ஊக்குவிக்கும் ஊட்டச்சத்து.

*உமா மகாலிங்கம்*

## காதுகிழியக் கத்தினாலும் கேட்பாரில்லை

'காலச்சுவடு' என்ற பார்ப்பனிய கும்பல் தங்களது புத்தகங்களை வெளியிடாதா என்று சில ஈழத்தமிழ் படைப்பாளிகள் தவிக்கிறார்கள். டெல்லியில் இந்தக் கும்பல் நடாத்தும் புத்தகவெளியீட்டுக்கு சிறப்பு விருந்தினராய் அழைக்கப்பட்டிருப்பவர் வேறு யாருமில்லை, தமிழ் இனப்படுகொலைகளின் பங்குதாரர்களில் ஒருவரான இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன். தமிழின அழிப்பில் ஈடுபடுவவர்கள் எல்லோரும் ஒன்றாகிறார்கள். நாங்கள் தான் ஆளுக்காள் அடிபட்டுக் கொண்டு அவர்கள் பின்னாலே திரிகிறோம்.

*சேதுநாதன்*

## இளைஞருக்கு தூண்டுகோல் வேண்டுமாம்

இதைச் சொல்பவர் வேறு யாருமல்ல ஒரு காலத்தில் தன் மனைவியையே கொலை செய்து தோட்டத்தில் புதைத்தவர் தான். அவர் அச்செயலை எப்படியான தூண்டுகோலால் செய்தார் என்பது தான் அவர் பலருக்கும் அறிவிக்க வேண்டிய விடயம்

*நரசிம்மன் - ஹறோ*

## சுயபுராணம் தொடர்கிறது...

சென்ற பூராயத்தில் சேயோனின் சுயபுராணம் பற்றி நாதன் குறிப்பிட்டார். ஆனால் அதுமேலும் தொடர்வது போல் உள்ளதே. 'மௌனகுரு படத்தைப் பார்த்தேன்' என்று எழுதாமல் 'பார்த்தான் சேயோன்' என்றால் அதன் அர்த்தம் என்ன? இப்படியான சுய புராணங்கள் ஒரு பேப்பர் இன் தரத்தைக் குறைக்கும் என்பது கூட சேயோனுக்கு இன்னும் புரியவில்லைப் போலும்

*காசி விஸ்வநாதன் - ஈஸ்ட்காம்*

## சாதிப் பிரிவுகள்

சாதி என்பது யாழ்ப்பாணத்து மக்களின் இரத்தத்துடன் சேர்ந்தது. விடுதலைப்புலிகள் எவ்வளவோ சிரமப்பட்டு அதில் ஒட்டியிருந்த தீண்டாமையை எடுப்பதில் ஓரளவு முன்னேற்றம் கண்டார்கள் அவர்களின் பின்னடைவிற்குப் பின் அது பழைய படியும் முருக்கு மரத்தில் ஏறும் வேதாளம் போல் செயல்படுகிறது. அந்த மக்கள் தங்களைக் காப்பாற்ற சிங்கள அரசுடன் சேர்வதை தமது வழிகளில் ஒன்றாக கொள்ள வைப்பார்கள் போல் உள்ளதே இந்தச் சாதி வெறியர்களின் செயற்பாடு.

*காந்தி - லண்டன்*

## தவறுகளையும் உணரவேண்டும்

முஸ்லிம்கள் தங்களை தனி இனம் என்று எண்ணிச் செயற்பட்டது தவறில்லை. எங்கள் இன்னல்களில் அவர்கள் குளிர் காய்ந்தது தான் தவறு தேவையற்று போராளிகளைக் காட்டிக் கொடுக்க முற்பட்டது தவறு. கருணாவை விட கூடுதலாய் என்னசெய்து விட்டார்கள்? ஆனாலும் காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலைகள் தவறு என்று சொல்பவர்களை நாங்கள் திரும்பச் சாடுவது தவறு. போராட்டத்தில் இப்படியான தவறு நிகழ்ந்துவிட்டதென்று சமாளிப்பது தான் மேலும் முரண்பாடு வளராதிருக்க ஏற்றவழி

*தங்கராஜா*

## சீனரில் உள்ள அன்பை சொந்த நாட்டு தமிழரில் காட்டுங்கள்!

சீனாவிற்கு எதிராக இந்திய செயற்படுவதை அனுமதிக்க முடியாது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கிட்டினா சொல்லியிருக்கிறார். தமது நாட்டு தமிழ் மீனவர்கள் சிறிலங்கா கடற்படையால் கொல்லப்டுகிற போது வராத பாசம் என்ன மாதிரி சீனர்கள் மீது வருகிறதோ தெரியவில்லை.

*மணிபாரதி*

## பாராட்டுக்கள் வாசனுக்கு...

ஆயிரம் வார்த்தைகள் சொல்லாததை ஒரு படம் சொல்லிவிடும் என்பார்கள். அந்த வகையில் வாசன் அவர்கள் கீறி வரும் கேலிச்சித்திரங்கள் உண்மையாகவே அருமை முயற்சி தொடர எனது வாழ்த்துக்கள்.

*மதுசூதனன்*

## நல்ல ஐடியா

கப்பல்களில் பெற்றோல் நாடுகளின் மண்ணைக் கொட்டி பெற்றோல் கிணறு தோண்டுவது நல்ல ஐடியா பரதேசியாரே. அந்த அமைச்சரின் பெயரைத் தாரும் நானும் பல ஐடியா அவரிடம் கேட்க வேண்டியுள்ளது. குறிப்பாக பச்சத்தண்ணியில் காரோடச் செய்வது எப்படி என்று ஐடியா பெற ஆசைப்படுகிறேன்.....

*ருத்ரன்*

ஒரு பேப்பர் தொடர்பான உங்கள் கருத்துக்களுக்கு.....
Tel : 020 7043 4314
www.facebook.com/orupaper
Email: editorial@orupaper.com

களத்தில் காவுகொள்ளப்பட்ட

# ஒரு ஊடகப் போராளி



'போர் முனையிலிருந்து செய்தி வெளியிடுவது என்ற விடயத்தில், இப்போது மாற்றம் எதுவுமில்லை. நீங்கள் களமுனைக்குச் சென்றுதான் செய்தி சேகரிக்க வேண்டும். மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும், அல்லது உங்களை நோக்கி துப்பாக்கிகள் நீட்டப்பட்டிருக்கும் இடங்களுக்கு செல்லாமல் அங்கு நடப்பவற்றை நீங்கள் அறிந்து கொள்ள முடியாது. நீங்கள் அனுப்பும் செய்திகள் செய்தித்தாள்களிலோ, அல்லது இணையதளங்களிலோ பிரசுரமாகும்போது அல்லது தொலைக்காட்சியில் காண்பிக்கப்படும்போது அதனையிட்டு போதியளவு மக்கள் அக்கறைப்படுவார்கள் என்ற நம்பிக்கையை தக்கவைப்பது சிரமமானதாக இருக்கும். மக்கள் என்னும்போது அவர்கள் அரசாங்கங்களைச் சேர்நதவர்களாகவோ, இராணுவத்தினராவோ அல்லது வீதியில் காணப்படும் சாதாரண மனிதர்களாகவோ இருக்கலாம் அவர்கள் இச்செய்திகளையிட்டு அலட்டிக் கொள்ளாமலிருக்கலாம்.' இவை கடந்த புதனன்று (பெப்பிரவரி 22) சிரியாவில் கொல்லப்பட்ட மூத்த ஊடகவியலாளர் மரி கொல்வின் 2010ம் ஆண்டு லண்டன் Fleet Street இல் அமைந்திருக்கிற சென்ற் பிரிட்ஜஸ் தேவாலயத்தில், சமர்க்களங்களில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.

மரிகொல்வினின் உரை வெறுமனே உணர்சியமயப்பட்ட சொல்லாடல் அல்ல என்பதை நிருபிப்பதாக் அவரது ஊடகத்துறை வாழ்வு அமைந்திருந்து. செச்சினியா, கொசோவா, கிழக்குத் திமோர், மத்திய கிழக்கு நாடுகள் என எங்கெல்லாம் போர் நடைபெற்றதோ அங்கெல்லாம் சென்று செய்தி சேகரித்து அங்கு நடந்தவற்றை உலகத்திற்கு அறிவித்த மரி கொல்வின் சிரியப்படைகளின் முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் ஏச்ஙுசூ நகரில் ஊடகவியலாளர்களுக்கென அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கொட்கையில் தங்கியிருந்த போது, சிரிய அரசபடைகளின் எறிகணை வீச்சில் கொல்லப்பட்டார். அங்கு அவரோடு பணியாற்றிய பிரஞ்சு படப்பிடிப்பாளர் Remi Ochlik அவர்களும் இத்தாக்குதலில் கொல்லப்பட்டார்.

பிரித்தானியாவிலிருந்து வெளிவரும் Sunday Times வாராந்தரியின் செய்தியாளராக 2001ம் ஆண்டில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இரகசியமாகச் சென்று, செய்தி சேகரித்துவிட்டுதிரும்புகையில் (ஏப்பிரல் 16ம்திகதி) சிறிலங்கா இராணுவத்தினன் ஒருவனின் எறிகுண்டுத்தாக்குதலுக்கு உள்ளாகியதில் தனது ஒரு கண்ணை இழந்த மரி பதினொரு வருடங்கள் கழித்து இன்னொரு போர்க்களத்தில் தனது உயிரை இழந்துள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தினனின் தாக்குதலில் ஒரு கண்ணை இழந்ததுடன் ஈழத்தமிழ் மக்களுடனான அவரது உறவு நின்றுவிடவில்லை, 2009இல் போரின் இறுதிக்கணங்களில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், சமாதானச் செயலகப் பொறுப்பாளர் சீ.புலித்தேவன் ஆகியோருக்கும் சர்வதேச அமைப்புகளுக்கும் இடையில் தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொடுத்தது வரை அது தொடர்ந்தது. அதனால் சிறிலங்கா அரசாங்கம் புரிந்த 'வெள்ளைக் கொடி' படுகொலைகளின் முக்கிய சாட்சியாகவும் அவர் இருந்தார். நண்பர்கள் சிவரஞ்சித், பரதன், இரவி அருணாசலம் ஆகியோர் தயாரித்த 'My Neighbour is a Sri Lankan Tamil' என்ற ஆவணப் படத்திலும் இதுபற்றி விரிவாகச் செவ்வி வழங்கியுள்ளார்.

மேற்குலகம் தமது போர்முனைகளில் உடன்படு ஊடகவியலாளர்களை (embeded journalists) பணிக்கமர்த்தி போரில் தமது பக்க மீறல்களை மறைப்பதும், போர்முனையிலிருந்து பலஆயிரம் மைல்களுக்கு அப்பால் பாதுகாப்பான இடங்களிலிருந்து பரப்புரை சாரந்த புனைவுகளைச் செய்தியாக வெளியிடுவதும் அதிகரித்துள்ள ஒரு காலத்தில், 'செய்தியாளர்களான எமது பணி போரின் கொடூரங்களை வெளியுலகத்திற்கு தெரிவிப்பது' என்ற கடமை உணர்வோடு செயற்பட்ட ஒரு துணிகரமான ஊடகவியலாளரை ஊடகப்பரப்பு இழந்து நிற்கிறது.

தமிழீழப் போரக்களங்களில் ஊடகவியலாளர்கள், படப்பிடிப்பாளர்கள எனப் பல விடுதலைப்புலிகளின் ஊடகப்போராளிகளை இழந்திருக்கிறோம். அது போன்ற ஒரு துயரத்தை மரி கொல்வினின் இழப்பு தருகிறது. எனினும் மைய ஊடகங்கங்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய நண்பர்களைக் கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களுக்கு இது இலகுவில் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாக அமைந்துள்ளது. ஒரு தலைசிறந்த ஊடக நண்பரை இழந்து நிற்கும் சக ஊடவியலாளர்களுக்கும், மேரி கொல்வின் அவர்களது குடும்பத்தினருக்கும் ஒரு பேப்பர் தனது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400



→ESOL with Citizenship
• British Passport/ Naturalisation
• Indefinite Leave to Remain
→International ESOL Diploma
• Student Visa / Extension Test
• Spouse Visa / Extension Test
• Work Permit / Extension Test

• Courses from £200
• Successfully trained over 35,000 students
• Certificates within 20 days
• Multilingual staff
• City & Guilds approved centre

Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400

National Centres

BIRMINGHAM
7 Washington Street
Birmingham
B1 1JR
01216339919

SHEFFIELD
Sorby House
42 Spital Hill, Sheffield
S4 7LG
01143034303

LEICESTER
Imperial House
St Nicholas Circle, Leicester
LE1 4LF
01163260248

LUTON
169 A, Dunstable Road
Luton.
Beds – LU1 1BW
01582723123

SLOUGH
18-24 Stoke Road
Slough, Berkshire
SL2 5AG
01753722056

NEWCASTLE
51-52 Victoria Avenue
Whitley Bay, Tyne & Wear
Newcastle Upon Tyne – NE26 2BA
01912525265

FREE INITIAL ASSESMENT

London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, FEBRUARY 24, 2012, ISSUE 164

## ஐ.நா.வில் தீர்மானம் நிறைவேற்றப்படுமா?

வரும் வாரத்தில் ஆரம்பிக்க இருக்கிற ஐ.நா. மனிதவுரிமைச்சபையின் கூட்டத் தொடர், இலங்கைத்தீவில் அக்கறைகொண்ட அனைவரினதும் கவனத்தையும் ஈர்த்துள்ளது. தமிழ்ச் செயற்பாட்டாளர்களைப் பொறுத்தவரை, சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதற்குரிய இறுதிச் சந்தர்ப்பமான இதனைப் பார்ப்பதனால், இக்கூட்டத்தொடரின் பெறுபேறுகள் தமிழ் அரசியலில் குறிப்பிட்டளவு மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம். இருப்பினும் இக்கூட்டத் தொடரில் சுயாதீன விசாரணை தொடர்பில் சாதகமான முடிவுகள் எட்டப்படும் என்ற முன்னைய நம்பிக்கையை தகர்க்கும் காரியங்கள் நடந்தேறிவருகின்றன.

சர்வதேச விசாரணைகளுக்கு பதிலாக, சிறிலங்கா அரசினால் உள்நாட்டில் அமைக்கப்படும் குழுக்கள் மூலமாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு சிறிலங்கா அரசு முயற்சிக்கிறது. இது ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்பதனை தெரிந்து கொண்டும் இந்த முயற்சிகளை ஒரு பொருட்டாக அமெரிக்க இராசதந்திரிகள் எடுத்து கொள்வதும், ஏற்கனவே வெளியான நல்லிணக்க ஆணைக்குழு என்ற அரைகுறை விசாரணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு கேட்பதும், ஆவை நிறைவேற்றும் வரை காத்திருக்குமாறு தமிழர்களை வேண்டுவதும் ஐயத்தை ஏற்படுத்தும் நகர்வுகளாகவே கருத வேண்டியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை, இந்த வேண்டுகோளுக்கு செவிசாய்ப்பது மட்டுமல்லாமல் அதனை நியாயப்படுத்தும் கைங்கரியத்திலும் இறங்கியுள்ளமை கண்டிக்கத்தக்கது.

சிறிலங்காவில் அவ்வப்போது அமைக்கப்படும் ஆணைக்குழுக்களும், அதன் பரிந்துரைகளும் விழலுக்கு இறைத்த நீர்போல ஆனமை அதன் கடந்தகால வரலாறாக இருக்கிறது. இதன் அண்மைய உதாரணம், 2006ம் ஆண்டு மூதூரில் Action Farm என்ற சர்வதேச தொண்டு நிறுவனப் பணியாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக நீதியரசர் பகவதி தலைமையில் அமைக்கப்பட்ட 'International Eminent Persons Group' விசாரணைக்குழு. சிறிலங்கா அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க பினனடிப்புச் செய்ததமையால் இவ்விசாரணைக்குழு கலைக்கப்பட்டது.

மனிதவுரிமைச்சபையில் இலங்கைத்தீவு விடயம் தொடர்பில் தீரமானம் ஒன்று கொண்டுவரப்படின், அங்கத்துவ நாடான இந்தியா அதற்கு ஆதரவு வழங்குமா என்பது தெரியவில்லை. ஆசிய ஆபிரிக்க நாடுகள் மட்டத்தில் ஒரளவு செல்வாக்குச் செலுத்தக்கூடிய இந்தியா, மனிதவுரிமைகள் பேணப்படுவதற்கு ஆதரவாகச் செயற்படவேண்டும் என்பதே ஈழத்தமிழர்களினதும், சர்வதேச மனிதவுரிமை அமைப்புகளினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*ஒரு பேப்பர் இன் Facebook பக்கத்தை லைக் போட்டிருக்கிறாக்கள் பற்றின விசயங்களைப் பார்த்தால் முப்பதேழு வீதம் 25-34 வயதுக்காரராய் இருக்கினம். எழுபத்தைஞ்சு வீதமான ஆக்கள் ஆம்பிளையள்?. இதுசரியோ தெரியாது, எண்டாலும் இது சம்பந்தமாய் கொஞ்சம் விசயங்களை அறிஞ்சால் பேப்பரை உங்களுக்கு பிடிக்கிற மாதிரி மாத்தலாம். ஒரு உதவி செய்யுங்கோ, உங்களிட்டை ஃபேஸ்புக் கணக்கிருந்தால் ஒரு பேப்பர் பக்கத்திற்கு போய் லைக் பட்டனை சொடுக்குங்கோ. புள்ளிவிபரம் சேர்த்தமாதிரியும் இருக்கும் உங்களோடை தொடர்பு வைக்கவும் வசதியாயிருக்கும்.*

*இன்னொண்டும் சொல்லோணும், லண்டனிலை இருக்கிறவை பேப்பரை கடையிலை காணேல்லை எண்டு புறணி பாடிக்கொண்டிருக்க, நாட்டிலை இருக்கிறவை இணையத்திலை வரிவிடாமல் வாசிச்சிட்டு கருத்துச் சொல்லயினம். அதுகள் இருக்கிற நிலையிலை, அவையின்ரை கருத்துகளை பிரசுரிக்க முடியாமல் இருக்கிறது எண்ட குறை இருந்தாலும், அவையளின்ரை கருத்துகளை நாங்கள் காதிலை போட்டுக் கொள்ளிறம்.*

*போன பேப்பரிலை 'வேக நடை போட்டிகள் வெற்றி யாருக்கு?' எண்ட ஆக்கத்தை எழுதினது சாத்திரி சிறி, அவற்றை பெயர் தவறுதலாக விடுபட்டுட்டுட்டுது. அவர் ஒண்டும் கோபிக்க இல்லை, ஆனால் அவருக்கு போடிறதை மாறி எங்களுக்கு போடக்கூடாது எண்டதாலை ஒரு முன்னெச்சரிக்கையாக சொல்லி வைக்கிறம்.*

*விடுதலைப் போராட்டத்திலை நாப்பதாயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்கள் வீரச்சாவடைந்திருக்கிறார்கள், அவையள் வேறையாருமில்லை எங்கடை உறவுகளும், கூட்டாளிகளும், தான் அவர்களை நினைவு படுத்திற மாதிரி, அவையளைப்பற்றின உங்கடை அனுபவங்களை ஒரு பேப்பர் மூலமாக பகிர்ந்து கொள்ளலாம். நீங்கள் எழுதிறது கட்டாயம் அரசியல் பற்றினதாயோ, போராட்டகாலத்திலை அவர்களின்ரை செயற்பாடுகளாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை, ஆனால் எதிர்மறையான விமர்சனங்களை தவிர்த்துக் கொள்ளுங்கோ.*

*எங்கடை பத்தி எழுத்தாளர்களைப்பற்றி சில கடிதங்கள் வருகுது. அவர் முந்தி அப்பிடியிருந்தார், இப்பிடியிருந்தார், இப்பிடிக் கொத்த ஆக்களை நீங்கள் ஏன் எழுத விடுகிறியள் எண்டு கேட்டு எழுதுகினம். பத்தி எழுத்தாளர்கள் விசயத்திலை அவையள் சொல்லிற கருத்துகள்தான் முக்கியமே தவிர அவையின்ரை தனிப்பட்ட விபரங்கள் முக்கியமில்லை. அவையள் எழுதிற கருத்துகளோ உங்களுக்கு உடன்பாடில்லை எண்டால் உங்கடை கருத்துகளை எழுதி அனுப்புங்கோ. அதை விட்டுட்டு அவர் முந்தி இப்பிடிச்செய்தார், அப்பிடிச் செய்தார் எண்டு எழுதினால் நாங்கள் இதை எங்கை போய் சரிபார்க்கிறது. இப்ப என்ன செய்யினம் எண்ட விசயம்தான் முக்கியம். அதிலைதான் நாங்கள் கவனம் செலுத்துறம்.*

*அப்ப சந்திப்பம் என்ன....*

*ஒரு பேப்பர் காரன்கள் + காரிகள்*

# Downgrade and Foreign Exchange Controls: A Probability or an Inevitable Certainty?



By Dr. Arujuna Sivananthan

With rating agencies being criticised for inertia, the contravening of terms of the IMF's standby facility by Sri Lanka's policy makers, and, their failure to consolidate both fiscal and current account deficits; the trajectory of its foreign currency credit rating remains uncertain.

Rating agencies were blamed for not being forward looking in their assessment during the sub-prime and Eurozone debt crisis. Remedial steps have now been taken and their future ratings actions are likely to be anticipatory.

On the face of it some of Sri Lanka's macroeconomic data is positive. Its inflation rate and nominal GDP growth are good. However, a reduction in the former was achieved through several changes in the basket of goods and services measuring it to reflect 'shifting' consumption patterns. GDP growth has been buoyant driven by post-war infrastructure development, which was financed through external borrowing.

Nevertheless, not all reasons cited for the positive rating action by rating agencies in July 2011 are present. Despite, the Central Bank (CB) relenting on its policy of soft-pegging the Rupee to the US dollar (USD) there has been no reform of its state owned utilities. State monopolies such as the Ceylon Electricity Board and Ceylon Petroleum Corporation were last projected to lose not less than 400 million and 700 million USD respectively in 2011. Recent price rises in electricity and distillates may not be sufficient to mitigate losses in 2012.

Fiscal consolidation is not visible. The budget deficit will remain high in 2011 at 8 percent of Gross Domestic Product (GDP) and little changed from 2010. Sri Lanka's public debt to GDP ratio will also remain unchanged at 82 percent of GDP, well above its single-B and double-B rated peer group of 41 and 40 percent respectively. Any reduction in both will be difficult to achieve while defence spending continues to account for 20 percent of government disbursements and post record highs each year.

There is a material deterioration in Sri Lanka's external position. Its Current account deficit will be 20 percent of GDP in 2011 and will increase in 2012. Geopolitical developments in the Middle-East have already taken their toll on its balance of payments and will continue to do so. Migrant worker remittances from the region are Sri Lanka's largest source of foreign exchange (forex). It is also the biggest market for Sri Lankan tea exports accounting for over 55 percent of sales; Iran, Iraq, Syria and Libya being large buyers. Both these sources have been adversely affected. Also, crude oil prices have surged on average 30 percent higher. With crude accounting for 25 percent of Sri Lanka's imports, its balance of payments is being squeezed from both ends.

Foreign Direct Investment (FDI) year on year has consistently been below budget for various reasons including poor infrastructure, a highly unionised labour force, lack of transparency and the recently passed expropriation law.

Sri Lanka's external indebtedness is approximately 40 percent of GDP; also well above its single-B and double-B rated peers. And, its external reserves at USD 5.3 billion now stand at less than 3 times average monthly imports; a level suggestive of a balance of payments crisis.

Fitch in a report published in December cites India and Sri Lanka as the only Fitch-rated emerging Asian countries to run deficits on their basic balance, i.e. inability to fund imports through exports and net FDI.

Moody states that "a deepening current account deficit and lower-than-expected foreign exchange reserve level projected for the end of 2011 suggests that external vulnerability event risk has not yet receded to a low level" and sees Sri Lanka's financial weaknesses as a key rating constraint.

What is apparent is that, unless we see a dramatic turnaround in Sri Lanka's metrics, its foreign currency ratings will be capped at their present level. Also obvious is that rating agencies have given its policy makers the benefit of the doubt despite lagging well behind their cohort on key metrics. How long they will do so without credible action to remedy prevailing imbalances is not clear. However, sooner or later they will address this discrepancy and the resultant consequences for Sri Lanka in capital markets will be harsh. Investors will demand higher yields and limit the extent to which it can borrow; not just on the nominal amount but also duration.

Perhaps, it was the risk of a negative rating action and the dissipation of its forex reserves which stopped the CB from defending the rupee. But, it is only the first of many steps which Sri Lanka's policy makers must take to redress the various imbalances. And, if they do not, then Standard and Poor's may be right in concluding that in their opinion "the government tends to be interventionist and may, in a severe downside scenario, use restrictions on access to foreign exchange needed for debt servicing as a policy tool".

That is, to impose controls on access to foreign exchange!

There is another and not altogether unlikely set of events which will also bring us to this terminus. It begins with a pre-emptive strike on Iran by Israel. The economic forces it will unleash on small open economies like Sri Lanka are such that they cannot be fathomed.

# பிரபாகரனின் பெயரால்.....

அமெரிக்கா இலங்கைக்கு வழங்கிய அழுத்தத்தில் ராஜபக்ச அரச அதிகாரம் ஆட்டம் காண ஆரம்பித்து விட்டது போன்ற அப்பட்டமான அரசியல் முட்டாள்தனம் முள்ளிவாய்க்காலின் அழிவுகளுக்கே காரணமாகியிருந்தது. உலகில் அதிகாரத்தை கையகப்படுத்தியிருக்கும் ஒரு சிறுபான்மையினர் மீது நம்பிக்கை கொள்ளுமாறு மறுபடி மறுபடி மக்களுக்குக் கற்பிக்கும் தமிழ்த் தேசிய வியாபாரிகள் ஒவ்வொரு முனையிலிருந்தும் மக்கள் விரோத அரசியலுக்குள் தம்மைப் புதைத்துக் கொண்டுள்ளனர்.

அழிக்கப்படுகின்ற ஒவ்வொரு மனிதனின் மரணத்தின் பின்னாலும் ஏறக்குறைய ஒரே அரசியல் அதிகாரமே செயற்படுகிறது என்பதை இவர்கள் சொல்லத் தயாரில்லை.

வன்னிப் படுகொலைகளின் பின்னால் இந்திய அரச அதிகாரமும், மேற்கும் அதன் ஒடுக்குமுறைக் கூறுகளான ஐக்கிய நாடுகள் நிறுவனமும் மனித உரிமை அமைப்புக்களும் செயற்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவாகத் தெரிந்தும் அயோக்கியத்தனமாக மக்களை ஏமாற்றும் 'புலிகளின் - பின்னான' பச்சோந்தி ஊடகங்களும் அதன் அடியாட்களும் தொடரும் இனச்சுதிகரிப்பிற்கும் ராஜபக்ச பாசிசத்திற்கும் துணைபோகின்றவர்களே.

ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ்ப் பேசும் மக்களின் போராட்டங்களின் ஒவ்வொரு திரும்பல் புள்ளியிலும் இந்திய அரசின் அழிப்பு அரசியலைக் கண்டுகொள்ளலாம். தனது பிராந்திய நலனுக்காகவும் இன்று பல்தேசிய முதலாளிகளின் தனிப்பட்ட நலனுக்காகவும் இலங்கையில் திட்டமிட்ட அழிப்பை நடத்திக்கொண்டிருப்பது ராஜபக்ச பாசிசம் மட்டுமல்ல. அதனை இயக்கும் சக்தியான இந்திய பார்பானீய அரச அதிகாரமும் கூடத்தான்.

அமெரிக்காவும் அதன் நேச அணிகளான ஐரோப்பிய ஏகபோகங்களும் மீள முடியாத பொருளாதாரச் சிக்கலுக்குள் சிக்கித் தவிக்கின்றன. தாம் பிரதிநிதித்துவம் செய்யும் பல் தேசியப் பண முதலைகளின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கான அரசியலிலிருந்தே பொருளாதார நெருக்கடி தவிர்க்க முடியாத அழிவை நோக்கி அழைத்துச் சென்றுகொண்டிருக்கின்றது. உலகின் பிச்சைக்கார நாடுகளைக் கூட ஒட்டாண்டி ஆக்கும் நோக்கோடு போரைத் திட்டமிட்டு நடத்திக் கொண்டிருக்கின்றன. சாரி சாரியாக மக்களைக் கொன்று குவித்துவிட்டு ஜனநாயகத்தை நிலை நாட்டுகிறோம் என்று மார்தட்டிக்கொள்கிறார்கள்.

உலகம் முழுவது போர் மேகங்களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் மனித விரோதிகளான இந்த அரசுகளை ஐரோப்பிய மக்கள் இனம் காண ஆரம்பித்துள்ளனர்.

குறைந்தபட்ச ஜனநாயக விழுமியங்களைக் கூட கொண்டிராத இந்திய அரசும் அதன் அடியாட்களும் தமது பல்தேசிய வியாபாரிகளின் நலனுக்காக அமெரிக்காவினதும் ஐரோப்பிவினதும் அடிமையாக சேவகம் செய்யத் தயார் நிலையில் உள்ளனர். அடிமைத் தனதிலிருந்து அவ்வப்போது தமது வியாபார நலன்களுக்காக சீனா போன்ற மாபியா அரசுகளோடும் இந்திய பல்தேசிய அரசு உடன்பட்டுக்கொள்கிறது.

மேற்கிற்கும் சீனாவிற்கும் இடையேயான ஊசலாடும் நிலையை உருவாக்கிக்கொள்வதனூடான இடைவெளியில் தனது மூலதனத்தின் சுயாதிக்கத்தை தக்கவைத்துக்கொள்ள முற்படுகின்றது.

இலங்கையில் மேற்குடனான புதிய போட்டியை இந்திய சீன அரசுகள் உருவாக்கியுள்ளன. இந்தப் போட்டியாளர்களில் அனைவருமே பேரினவாதத்திற்கு ஆதரவானவர்கள் தான்.

இந்தியாவிற்கு எதிராக சீனாவையும், சீனாவிற்கு எதிராக இந்தியாவையும், மேற்கையும் கையாள்கிறோம் என்று தமிழ் ராஜதந்திர ஜாம்பவான்கள் காட்டும் படத்தை வெளியிலிருந்து அவதானிக்கும் யாரும் 30 வருடப் போராட்டம் இவ்வளவு முட்டாள்களை உருவாக் கியுள்ளதா என்று வியந்து போவார்கள்.

இவர்கள் முட்டாள்கள் மட்டுமல்ல, அருவருக்கத்தக்க கோழைத்தனமானவர்களும் கூட. அதற்கு எல்லை கிடையாது. ராஜபக்சவின் பாசிச இராணுவ சாம்ராஜ்யத்திற்குள் இருந்து மக்கள் போராடும் போது கூட இவர்கள் அன்னியர்களை நம்பச் சொல்லி அழைப்புவிடுக்கிறார்கள்.

**இரவல் படையில் புரட்சி செய்யலாம் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். 'படித்துக்கிழித்த' யாழ்ப்பாண மேட்டுக்குடிகள் பள்ளிக்கூடத்தையே அறிந்திராத இந்தியப் பழங்குடி மக்கள் இந்திய இராணுவத்தை நெருங்க விடாமல் நடத்தும் போராட்டத்தை புத்தகங்களில் அறிந்திருக்க மாட்டார்கள் என்பது உண்மை தான்.**

இரவல் படையில் புரட்சி செய்யலாம் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். 'படித்துக்கிழித்த' யாழ்ப்பாண மேட்டுக்குடிகள் பள்ளிக்கூடத்தையே அறிந்திராத இந்தியப் பழங்குடி மக்கள் இந்திய இராணுவத்தை நெருங்க விடாமல் நடத்தும் போராட்டத்தை புத்தகங்களில் அறிந்திருக்க மாட்டார்கள் என்பது உண்மை தான்.

தேசியத் தலைவர் பிரபாகரனின் பெயராலும், தமிழ்த் தேசியத்தின் பெயராலும் இந்தியாவினதும் மேற்கினதும் அடிமைகளாகி மக்களை அழிக்கிறோம் என்பதே இவர்கள் கற்பிக்கும் தேசியம்.

*சபா நாவலன்*

*நன்றி : இனியொரு*

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER**
Bank: **HSBC**
A/C: **61429035**
S/C: **40-33-09**

# Marie Colvin's Death a Bad Omen for Tamils?

**By: Nadarajah Balasubramaniam (PFLT-UK)**

Just two days ago, on 22nd February, 2012, American correspondent Marie Colvin one of the foremost war correspondents of her generation, a price winning veteran and a French photographer was killed while covering the violence in the besieged Syrian city of Homs. The British based Colvin, a reporter for the Sunday Times, was famous for her eye-patch, which she then 44, wore after losing her left eye to a shrapnel wound while reporting on the Sri Lankan civil war in 2001.

This is what happened. An army patrol had spotted Marie being escorted by a group of Tamil Tiger rebels and demanded to see her papers. After she held up her press credentials, they lobbed a grenade at her. She was then arrested and tied up for 10 hours with out medical care before the US State Department could get her out. Her lung was supposed to be in such bad shape that she could not be flown out of the area for another three days.

Again in May 2009, during the Sri Lankan government's genocide of Tamils, she became an well meaning humanitarian intermediary in attempted surrenders that ended in the murder of those surrendering numbering at least 300, according to the Inner City Press.

It was somehow symbolic that having dodged so many bullets in her lifetime, she finally met her end We Tamils who hold her in high esteem will miss her. She is a martyr.

The UN Human Rights Council session is scheduled for 27 February to 23 March. Rajapaksa's government is ready with the final report of the LLRC and the National Action Plan and they are its two most potent lobbying weapons, as long as government officials continue to bend the truth or promulgate outright lies.

"By means of shrewd lies, unremittingly repeated, it is possible to make people believe that heaven is hell and ...and hell heaven. The greater the lie, the more readily it will be believed" Adolph Hitler(in Mien Kamp). Sri Lankan diplomats are masters in this game and are ready for their misinformation campaign.

Now attention is shifting from forcing an international investigation to encouraging implementation of the recommendations. This move was initiated by Hillary Clinton just to rescue desperate India. Cleaver Sinhala politicians have been successfully fooled Indians too long. That will continue at long as the Sonia Congress is in power.

All the right- minded personal, over the world wish that now is the time for the HRC to demonstrate its commitment to justice for victims and their families by taking effective action toward establishing an independent international accountability mechanism. The United Nation has failed to implement humanitarian law and prevent Tamil holocaust, at least now UN should accept the truth that Sri Lanka did not keep up the promises made to the UN Secretary General and stop the continuing genocide.

"Giving Rajapaksa's government a free pass on human rights empowers aspiring autocrats everywhere. It sends a clear signal to semi-authoritarian governments: Go ahead, do whatever you want; you will face no consequences for your actions." By Gibson Bateman (*http://www.jofr.org/2012/01/16/sri-lankas-game-of-diplomacy-and-deceit/*)

President Rajapaksa's stonewalling criticism of his regime's war crimes and his systematic denial of truth is working, all because the perpetrators of the genocide of Tamils are a team of world powers. This has made President Rajapase less vulnerable and the UN and the guilty world powers less powerful.

Mighty Washington may resort to some exercise like forcing action on some LLRC recommendations to safe guard India. That is like making a puppy out of the mad desperate brain-dead Sonia Congress government of India, with the wishful hope of teaching the puppy some sensible tricks to play games with great China, in the future.

The UK government had to give all the covert support plus to India and Sri Lanka to successfully complete the cruel premeditated and well monitored genocide of Tamils, even ignoring the collateral loss of innocent civilians who were armed with only their feeding bottles at the most, in their enthusiasm of finishing off the great Freedom Fighters, the LTTE who fought magnificently with both their feet planted in their motherland! Why? Mainly because of UK's economic dependence on India. The UK government has no other option other than simply supporting the US draft time- buying resolution.

British government's policy of pursuit of enduring peace and reconciliation is also naturally limited to work with the terrorist Sri Lanka government to buy time and accelerate the structural genocide of the Tamil Homeland. Even the very responsible and respective British politicians can't stop repeating quite often that they are helpless and have to carry on doing, at the campaign of violence, "...suicide bombings, the use of child soldiers and terrorism practised by the LTTE during the conflict.."

The world should know that the Tamils have shown again and again that the LTTE are their sons and daughters, the genuine freedom fighters, the suicide bombing is a sector in the natural armoury of Tamils and our armed struggle is sacred with hardly any foul act.

Arab spring has brought about good outcome but not in Sri Lanka, where the great Tamil fighters led by the great leader had a De facto government appreciated by many that count. The reason is simple;

India took revenge and the imperialist forces, could not stomach the series of successes of the Tigers; innovations and the three principles ( Three D's) viz. Determination, Darer and Devotion of the great freedom fighters , the LTTE.

If the British government means anything positive let it show that by starting with the alphabet that "North and East of Sri Lanka is the traditional homeland of Tamils". It is high time they stopped ridiculing the sacred course of the Tamils as, ".. Tamils genuine grievances", for a change at least!

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பிரான்ஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன்

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சுகன்யா

விளம்பரம்
சோபனா - அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூரன் - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
சோபனா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# சமதர்மமும் நாஸ்திகமும்

நாஸ்திகத்துக்குப் பயந்தவனானால், எந்த ஒரு காரியமும் செய்ய முடியாது. அதிலும் சமதர்மக் கொள்கையைப் பரப்ப வேண்டுமானால், நாஸ்திகனால்தான் முடியும். பவுத்தரையும் நாஸ்திகம் என்றதற்குக் காரணம் அவர் சமதர்மக் கொள்கையைப் பரப்ப முயற்சித்ததால்தான், நாஸ்திகம் என்பது சமதர்மக் கொள்கை மாத்திரம் அல்ல, சமுதாயத்தைச் சீர்திருத்த ஏதாவது பழைய கொள்கைகளை மாற்ற வேண்டுமானால், அந்த மாற்றத்தையும் ஏன் எவ்வித சீர்திருத்தத்தையுமே நாஸ்திகம் என்று தான் சமுதாயப் பிரியர்கள் (பழைமையை மாற்ற விரும்பாதவர்கள்) சொல்லித் திரிவார்கள்.

எங்கெங்கு அறிவுக்கு மரியாதை இல்லையோ - சமத்துவத்துக்கு இடமில்லையோ அங்கெல்லாமிருந்து தான் நாஸ்திகம் முளைக்கின்றது. ஏனென்றால் இப்போது வழக்கத்தில் இருக்கும் கொள்கைகளும், பழக்கங்களும் எல்லாம் கடவுள் கட்டளை என்றும், கடவுளால் சொல்லப்பட்ட வேதங்கள் சாஸ்திரங்கள் ஆகியவைகளின் கட்டளைகள் என்றேதான் சமயப்பிரியர்கள் சொல்லுகின்றார்கள். ஆகவே, நாம் இப்போது எதை எதை மாற்ற வேண்டுமென்கிறோமோ அவை எல்லாம் கடவுள் செய்ததாகவும் அல்லது கடவுள் தனது அவதாரங்களையோ, தனது தூதர்களையோ செய்யச் சொன்னதாகவுமே சொல்லப்படுவதால் அவைகளைத் திருத்தவோ, அழிக்கவோ புறப்படுவது கடவுள் கட்டளையை மீறினதாக அல்லது கடவுள் கட்டளையை மறுத்ததேயாகும்.

உதாரணமாக, மக்களில் நான்கு ஜாதிகள் கடவுளால் உண்டாக்கப்பட்டதென சொல்லப்படுகையில், மேற்படி ஜாதிகள் ஒழிய வேண்டுமானால், அவன் கண்டிப்பாக கடவுளை மறுத்தோ அலட்சியம் செய்தோதான் ஆக வேண்டும். எல்லா மதங்களும், மதக் கொள்கைகளும் கடவுளாலோ, அவதாரங்களாலோ, கடவுள் தன்மையாலோ ஏற்பட்டது என்று சொல்லப்படுகையில் அம்மத வித்தியாசங்கள் ஒழிய வேண்டும் என்றும் மதக் கொள்கைகள் மாற்றப்பட வேண்டும் என்றும் சொல்லும் போது, அப்படிச் சொல்லுபவன். அந்தந்தக் கடவுள்களை கடவுள்களால் அனுப்பப்பட்ட தெய்வீகத் தன்மை பொருந்தியவர்களை அலட்சியம் செய்தவனேயாகின்றான். அதனால்தான், கிறித்தவர் அல்லாதவர் அஞ்ஞானி என்றும், மகம்மதியரல்லாதவர் காபர் என்றும் இந்து அல்லாதவர் மிலேச்சர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

அன்றியும் கேவலம் புளுகும் ஆபாசமும் நிறைந்த புராணங்களை மறுப்பதே இந்து மதக் கொள்கைப்படி நாஸ்திகம் என்று சொல்லப்படும் போது ஜாதியையும், வர்ண தர்மத்தையும் மறுப்பதை ஏன் நாஸ்திகம் என்று சொல்ல மாட்டார்கள். ஜாதி உயர்வு - தாழ்வு செல்வம் - தரித்திரம் எஜமான் - அடிமை ஆகியவைகளுக்கு கடவுளும், கர்மமும்தான் காரணம் என்று சொல்லுவதானால், பிறகு மக்களுக்கு விடுதலையும், முன்னேற்றமும் எங்கே இருக்கின்றது?

கடவுளையும், கர்மத்தையும் (விதிச் செயல்) ஒழித்தால் ஒழிய, அதற்காக மனிதன் எப்படி பாடுபட முடியும்? மேடும், பள்ளமும் கடவுள் செயலானால், மேட்டை வெட்டி பள்ளத்தில் போட்டு சமன் செய்வது கடவுள் செயலுக்கு விரோதமான காரியமே யாகும். மனிதன் முகத்தில் தலையில் மயிர் வளருவது கடவுள் செயலானால், அதை சவரம் செய்து ஒழிப்பது கடவுள் செயலுக்கு எதிராகவே செய்யும், அதாவது, ஓரளவுக்கு நாஸ்திகமான காரியமேயாகும். அதிலும் சவரம் செய்யச் செய்ய மறுபடியும் அது வளர்வதை அறிந்தும் மீண்டும் சவரம் செய்வது வடிகட்டின நாஸ்திகமேயாகும். பிச்சைக்காரனுக்குச் சோறு போடுவதுகூட நாஸ்திகன் தானே! ஏனெனில், கடவுள் பார்த்து ஒருவனை அவனது கர்மத்துக்காகப் பட்டினி போட்டிருக்கும்போது நாம் அவனுக்குச் சோறு போட்டு அவன் பட்டினியை மாற்றுவது கடவுளுக்கு விரோதமான செயல் தானே? அதாவது, கடவுளை நம்பாத கடவுள் செயலை லட்சியம் செய்யாத தன்மையேயாகும். இப்படியே பார்த்துக் கொண்டே போனால் உலகத்தில் ஒரு ஆஸ்திகனும் இருக்க முடியாது!. ஆதலால், நம்மைப் பொறுத்தவரை நாம் பல மாறுதல்களை விரும்புவதால் அவை கடைசியாக நாஸ்திகமேயாகும். நாஸ்திகமும், சாஸ்திர விரோதமும், தர்மத்துக்கு விரோதமும் செய்யாமல் யாரும் ஒரு சிறிதும் உண்மையான சீர்திருத்தம் செய்ய முடியவே முடியாது. பொதுவாக நமது நாட்டில் உள்ள தரித்திரம் போக வேண்டுமானால், வேற்றுமைகளைப் போக்க முயற்சிக்கும் சமதர்வாதிகளை (வெள்ளையரை) வைவது மாத்திரம் போதாது, நாஸ்திகம் என்ற சொல்லுக்கு அஞ்சினாலும் முடியாது.பாமர மக்கள் கடவுள் செயல் என்று கருதிக் கொண்டு இருப்பதால், தினமும் ஏமாந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகையால், கடவுள் செயல்கள் ஒரு காரியத்திற்கும் மற்றொரு காரியத்திற்கும் மாறுபடுவது போலவே தர்மமும், நீதியும் கூட ஒரு சமயத்துக்கும் மற்றொரு சமயத்துக்கும் மாறுபட வேண்டியதேயாகும். மனுதர்மத்தில் சூத்திரனிடம் பொருள் சேர்த்து வைத்திருப்பதை பிராமணன் பலாத்காரத்தினால் பறித்துக் கொள்ளலாம் என்று இருக்கின்றதைத் இன்னமும் பார்க்கிறோம். இன்னும் கொஞ்சம் போனால் இதுமாமறி பார்ப்பான் பணம் வைத்திருந்தால் மற்றவர் பிடுங்கிக் கொள்ளலாம் என்று ஏற்படக் கூடும். அப்படி இருப்பது முன்னைய வழக்கத்துக்கு விரோதம் என்பதாக யாரும் சொல்ல முடியாது. கடவுளை மறுக்கத் துணிந்தவனே தர்மத்தின் பேரால் உள்ள இன்றைய கொடுமைகளை ஒழிக்க முடியும்.

அரசியல், சமூக இயல், பொருளாதார இயல்களில் உள்ள இன்றைய கொடுமையான நிலையும், முட்டாள்தனமான நிலையும், அயோக்கியத்தனமான வஞ்சகச் சூழ்ச்சியுமான எல்லாம் கடவுள் கட்டளையாலும், மோட்சகாரணங்களாலும், சாஸ்திர தர்மங்களாலுமே செய்யப்பட்டு ஏற்பட்டதாகும். ஆகையால்தான், இந்தக் கடவுள் நம்பிக்கை ஒழியாமல் சமதர்மம் கொண்டு வரமுடியாது என்று நான் அவ்வளவு உறுதியாகக் கூறுகிறேன்.

*திருச்சியில் சமதர்மமும் நாத்திகமும் என்ற தலைப்பில் தந்தை பெரியார் ஆற்றிய உரையின் சுருக்கம்*

*- குடிஅரசு 1930 - விடுதலை 3.12.1967*

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

## மாற்ற முடியாததை ஏற்றுக் கொள்ளுங்கள்!

பெரும்பாலான மனிதர்கள் ஒரு கற்பனை உலகில் வாழ்கிறார்கள். அவர்கள் நம்புவதும், எதிர்பார்ப்பதும் பெரும்பாலும் யதார்த்த வாழ்க்கைக்கு ஒத்துப் போவதாக இருப்பதில்லை. நிஜமாக முடியாத ஒருநேர்கோடான, சீரான வாழ்க்கைக்காக ஆசைப்படுகிறார்கள். அப்படி ஒரு வாழ்க்கை யாருக்குமே என்றுமே இதுவரை அமைந்ததில்லை. இனி அமையப் போவதுமில்லை. அதனால் அவர்கள் எதிர்பார்ப்புகளும், நடைமுறை நிஜங்களும் ஒன்றுக்கு ஒன்று முரணாகவே இருக்க, அவர்கள் வாழ்க்கை முழுவதையும் பிரச்சினைகளாகவே காண்கிறார்கள். அதன் காரணமாக தினசரி வாழ்வில் சீக்கிரமாகவே அமைதியை இழந்து தவிக்கிறார்கள்.

உலகம் தன்னிஷ்டப்படியே இயங்குகிறது. நிகழ்வுகள் பலதும் நம் கருத்துக்களை அனுசரித்துப் போவதில்லை. நம்மால் முழுவதும் உணர முடியாத ஏதோ ஒரு விதியின்படியே பலதும் நடக்கின்றன. அதை ஏற்றுக் கொள்கிறீர்களா, இல்லையா என்று உலகம் உங்களிடம் கேள்வி கேட்டு எதையும் நடத்துவதில்லை. பல சமயங்களில் உங்களுக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமை தரப்படுவதில்லை. அப்படி இருக்கையில் நம் கட்டுப்பாட்டில் இல்லாத, நம்மால் மாற்றியமைக்க முடியாதவற்றை எண்ணி வருந்துவதும், புலம்புவதும், கலங்குவதும் அந்த நிலைமையை எள்ளளவும் மாற்றி விடப் போவதில்லை.

ஒரு மரணம் நிகழ்கிறது. இறந்தவர் நம்மால் மிகவும் நேசிக்கப்பட்டவர், அவர் மரணம் நாம் சிறிதும் எதிர்பாராதது என்று வைத்துக் கொள்வோம். அந்த மரணம் நமக்குக் கண்டிப்பாக பெரும் துக்கத்தைத் தரும் தான். அதுவும் இறந்தவர், கணவனாகவோ, மனைவியாகவோ, பிள்ளைகளாகவோ, தாயாகவோ, தந்தையாகவோ இருந்தால் அந்த இழப்பு ஈடு செய்ய முடியாதது. அதுவும் அவரால் ஆக வேண்டிய காரியங்கள் நிறைய இருந்தால் மனரீதியாக மட்டுமல்லாமல் எல்லா வகையிலும் நாம் பாதிக்கப்படுவதால் சிரமங்களும் மிக அதிகமாகத் தான் இருக்கும். அதனால் அந்த துக்கம் இயற்கையானது. நியாயமானதும் கூட.

ஆனால் மரணம் ஒவ்வொருவரும் சந்தித்தாக வேண்டிய ஒரு நிகழ்வு. மரண காலத்தைத் தீர்மானிக்கும் சக்தி நம்மிடம் இல்லை என்கிற போது அதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். உடனே தோன்றுகிற இயல்பான துக்கத்தில் இருந்து விரைவாக நாம் மீண்டு எழத்தான் வேண்டும். நடக்க வேண்டிய காரியங்களை சரியாக கவனித்து செயல்பட்டே தீரவேண்டும். இறந்தவர்களுக்காக இருக்கிறவர்களை புறக்கணித்து விடக் கூடாது. அது நியாயமும் அல்ல, விவேகமும் அல்ல. ஆனால் பலர் இந்த துக்கத்தில் இருந்து மீள்வதில்லை. 'இந்த மரணம் நியாயமா? சரியான காலத்தில் தான் வந்திருக்கிறதா? சாவுக்காக எத்தனையோ பேர் காத்திருக்கையில் இவருக்கு ஏன் வரவேண்டும்?' என்பது போன்ற கேள்விகளிலேயே தங்கி விடுகிறார்கள். இந்தக் கேள்விகளுக்கு உலகம் பதிலளிப்பதில்லை.

மரணம் போன்ற இன்னும் எத்தனையோ பெரிய விஷயங்கள் இருக்கின்றன. விபத்துகள், நோய்கள், பெரும் நஷ்டங்கள், மோசமான மாற்றங்கள் எல்லாம் நம் சீரான வாழ்க்கையை சீர்குலைக்கக் கூடும். வந்ததை மறுப்பதால் பிரச்சினைகள் கூடுமே ஒழிய குறையாது. உண்மை நிலையை உணர்ந்து ஏற்றுக் கொண்டால் மட்டுமே தெளிவாக சிந்திக்கவும், செயல்படவும் முடியும். யார் காரணம் என்று ஆராய்வதிலும், குற்றப்பத்திரிக்கை தயார் செய்வதிலும், எனக்குப் போய் இப்படி ஆகி விட்டதே என்று சுயபச்சாத்தாபத்தில் மூழ்குவதிலும் எந்த விதத்திலும் ஒருவருக்கு பயன் கிடைக்காது.

இனிசின்ன விஷயங்களைப் பார்ப்போம். முக்கிய வேலையாகப் போகிறோம். வழியில் ட்ராஃபிக் ஜாம் ஆகிவிடுகிறது. வாகனங்கள் ஆமை வேகத்தில் ஊர்ந்து செல்கின்றன. இது சந்தோஷப்பட வேண்டிய சூழ்நிலை அல்ல தான். ஆனால் சிலர் அந்த நேரத்தில் படும் அவசரமும், அவஸ்தையும் கொஞ்ச நஞ்சமல்ல. புலம்பித் தீர்ப்பதும், குடியே மூழ்கிப் போய்விட்டது போல மன அமைதி இழப்பதும் பலரிடம் நாம் பார்க்க முடிந்த தன்மைகள்.

அந்தப் புலம்பலாலும், அவசரத்தாலும் அந்த நிலைமையை மாற்றி விட முடியுமா? சில நிமிட சில்லறை அசௌகரியத்திற்கு பலரும் அமைதியிழந்து தவிப்பதும், முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதும் என்னவொரு அறியாமை? மன அமைதியை இது போன்ற விஷயங்களுக்கெல்லாம் இழக்க ஆரம்பித்தால் மனம் அந்த அளவு பலவீனம் என்றல்லவா அர்த்தம். எது வேண்டுமானாலும் எவ்வளவு சீக்கிரமும் அதைப் பதட்டமடையச் செய்து விடும் என்றும், சுலபமாக அசைத்து விடும் என்றல்லவா பொருள்.

அதே போல் நிறைய சின்ன விஷயங்கள் பலரையும் தேவைக்கும் அதிகமாக மன அமைதி இழக்கச் செய்கின்றன. மழை விடாது பெய்தால் மன சங்கடம் வந்து விடுகிறது. அலுவலகத்திலும், அக்கம் பக்கத்திலும் ஒருசிலருடைய குணாதிசயங்கள் எரிச்சலைக் கிளப்புவதாக இருந்தால் மன அமைதி பறி போகிறது. எதிர்பார்த்தபடி அடுத்தவர்கள் நடக்கா விட்டால் மனம் குமுறுகிறது. இது போன்ற சின்னச் சின்ன இயற்கையான, நம்மால் மாற்ற முடியாத விஷயங்களில் மன அமைதியை இழப்பது அதிகம் நடக்கிறது. தினசரி வாழ்க்கையில் ஒவ்வொருவரையும் சீண்டிப்பார்க்கக் கூடிய இது போன்ற சின்னச் சின்ன விஷயங்கள் அதிகம் வருவது இயல்பே. இதைப்பற்றி அதிகம் நினைத்து, இதைப் பற்றியே அதிகம் புலம்பி தானும் வருந்தி சுற்றியுள்ளவர்களுக்கு அந்த மனநிலையை பரப்பி அமைதியை அந்த வட்டாரத்திலேயே இல்லாமல் செய்கிறவர்கள் நிறைய இருக்கிறார்கள்.

இந்தக் கூட்டத்தில் நீங்களும் இருக்கிறீர்களா என்று பாருங்கள். வாழ்க்கையில் சகிக்க முடியாதவற்றில் மாற்றக் கூடியவை நிறைய உண்டு. அதை மாற்றும் முயற்சியில் மனிதன் ஈடுபட்டதால் மட்டுமே உலகம் இந்த அளவு முன்னேறி இருக்கிறது. ஆனால் அதே போல மாற்ற முடியாத விஷயங்களும் நிறைய உண்டு. உதாரணத்திற்கு ஒரு சிலவற்றை நாம் இங்கு பார்த்தோம். இவை நாம் முகம் சுளிப்பதால் தவிர்க்க முடிந்தவை அல்ல. இவை நாம் புலம்பினால் வராமல் இருப்பவையும் அல்ல. இது போன்றவற்றை ஏற்றுக் கொள்ளும் போது மட்டுமே வாழ்க்கையை நாம் இலகுவாக்கிக் கொள்கிறோம். ஏற்றுக் கொள்ளும் போது நம் சக்தி வீணாவதைத் தடுக்கிறோம். மன அமைதியும் பெறுகிறோம்.

அப்போது 'ஐயோ இப்படி ஆகி விட்டதே!' என்ற ஒப்பாரிக்கு பதிலாக 'இனி என்ன செய்வது?' என்ற ஆக்கபூர்வமான சிந்தனை பிறக்கிறது. இப்படிப்பட்ட சிந்தனையால் எப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் இருந்தும் விடுபடும் வழியோ, அல்லது அந்த சூழ்நிலையைத் தாக்குப்பிடிக்கும் வழியோ பிறக்கிறது. இப்படி மாற்ற முடியாததை ஏற்றுக் கொள்ளும் போது உலகத்துடன் போராடுவதைவிட்டு விட்டு, உலகத்துடன் ஒத்துப் போய் சமாளித்து வெற்றி பெறுகிறோம்.

*- என்.கணேசன்*

# அடிப்படை உரிமைகளை ஏற்றுக் கொள்ளாத தமிழரின் "கூட்டாளிகள்"



கோபி
ஒரு பேப்பர்

பாக்கிஸ்தானின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கும் பலூச்சிஸ்தானின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கும் தீர்மானம் அண்மையில் அமெரிக்க கொங்கிரசில் நிறைவேற்றப்பட்டுள்ளது. பலூச்சிஸ்தான், பாக்கிஸ்தானின் மொத்த நிலப்பரப்பில் 44 விழுக்காடு பிரதேசத்தைக் கொண்ட (134,051 சதுரமைல்) அந்நாட்டின் மிகப்பெரிய மாகாணம். 1998ம் ஆண்டு நடைபெற்ற குடிசன மதிப்பீட்டின்படி அங்கு 66 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். ஒருபுறம் ஈரான், இன்னொருபுறம் ஆப்கானிஸ்தான், மறுபுறம் பாக்கிஸ்தானின் பஞ்சாப், சிந்து மாகாணங்களை எல்லைகளாகக் கொண்ட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்திலுள்ள பலூச்சிஸ்தானில் எரிவாயு, மற்றும் வேறு கனிம வளங்களும் காணப்படுகின்றன. இவ்வாறான பிரதேசம் அப்பிராந்தியத்தின் அரசியலில் இடம்பிடித்துக் கொள்வது தவிர்க்க முடியாதது.

பலூச்சிஸ்தான் விடயத்தை இத்துடன் நிறுத்தி விட்டு, ஈழத்தமிழர்கள் விடயத்திற்கு வருவோம். போரில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அடிக்கடி எமது அரசியல் தலைவர்கள் என்போரும், ஊடகங்களில் அரசியல் ஆய்வு செய்பவர்களும், வானொலி தொலைக்காட்சிகளில், தொலைபேசி மூலம் கலந்து கொள்ளும் பாமரர்களும், சர்வதேசம் இப்போது எங்கள் பக்கம் இருக்கிறது, எமது பக்க நியாயங்களை புரிந்து கொள்கிறது எனக் கருத்து வெளியிடுகிறார்கள். உலகத்தமிழர் பேரவையின் தலைவர் இமானுவல் அடிகளார், முன்னர் எமக்கு சர்வதேச அரங்கில் நண்பர்கள் இருக்கவில்லை, இப்போது சில நட்புகள் உருவாகியிருப்பதாக குறிப்பிட்டுகிறார். 'பொங்கு தமிழ்' இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டுரையொன்றில், அமெரிக்காவிற்கும் ஈழத்தமிழர்களுக்கும் நெருக்கம் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத்தீவிற்கு பயணம் மேற்கொள்ளும் அமெரிக்க இராஜாங்க திணைக்கள அதிகாரிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்திக்கிறார்கள். சில சந்தரப்பங்களில் மகிந்த இராஜபக்சவை சந்திப்பதற்கு முன்னர் சம்பந்தனை சந்திக்கிறார்கள். யாழ்ப்பாணத்திற்கு சென்று, அங்கு அரசியல்வாதிகளை மட்டுமல்லாமல் குடிசார் சமூகத்தின் பிரதிநிதிகளையும் சந்திக்கிறார்கள். இவற்றையெல்லாம் வைத்துப்பார்க்கையில் சர்வதேசத்திற்கும் தமிழர்தரப்பிற்கும், ஆகக்குறைந்தது பொங்கு தமிழ் கட்டுரையாளர் கருதுவதுபோல் அமெரிக்காவிற்கும் தமிழர்களுக்கும் இடையிலாவது நெருக்கம் அதிகரித்திருப்பதாகத் தோன்றுகிறது. மறுபுறத்தில் பலூச்சிஸ்தான் விடயத்துடன் இவ்விடயத்தை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது அரசியல் விவகாரங்களில் அக்கறையுடைவர்களின் கடமையாகவுள்ளது. தமிழர்களுக்கு புதிதாகத் தோன்றியுள்ள கூட்டாளிகள் தமிழர்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை ஏற்றுக் கொள்கிறார்களா என்ற கேள்வியை முன்வைத்து இந்தப்புதிய உறவுகள் பற்றி ஆராயந்தால், நெருக்கம் பற்றி பேசுபவர்களிடமிருந்து முறையான பதிலை பெற்றுக் கொள்ள முடியவில்லை. மாறாக இவ்வாறான விடயங்களைப்பற்றி பேசி கூட்டாளிகளின் உறவை முறித்துக் கொள்ளக்கூடாது என்ற உபதேசமே வருகிறது.

இவ்விடத்தில், அமெரிக்க-ஐரோப்பிய நாடுகள் தமிழ் மக்களை நோக்கி நெருங்கி வந்த முன்னைய அனுபவத்தை மீட்டிப்பார்க்க வேண்டியுள்ளது. பத்து வருடங்களுக்கு முன்னர் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களுக்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம், அதனைத் தொடர்ந்த பேச்சுவார்த்தைகள், சமாதான கால நடவடிக்கைகள் ஆகியவற்றில் முன்னரங்கில் நோர்வேயும் பின்னணியில் மேற்கு நாடுகளும் இருந்தன என்பதனை நாம் அறிவோம். பின்னர் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த நிலையில், சிறிலங்கா அரசாங்கத்தினால் வலிந்து திணிக்கப்பட்ட யுத்தத்திற்கு, மேற்படி நாடுகள் தமது முழு ஆதரவையும் சிறிலங்கா தரப்புக்கு வழங்கியிருந்தன. மேற்கு நாடுகளின் இந்நடவடிக்கைகளை சிறிலங்கா அரசாங்கத்தின் தவறான பரப்புரைகளால் ஏற்பட்ட விளைவு என எம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள முடியாது, 'விக்கிலிக்ஸ்' கேபிள்கள் வெளிவந்த பின்னரும் நாம் இத்தகைய கருத்தினை கொண்டிருக்க முடியாது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டபோதிருந்த சாதக நிலமை பற்றி, இலங்கைத்தீவில் மேற்கு நாடுகளின் தாராண்மை வாத சமாதான நடவடிக்கைகளை ஆராயும் ஒரு நூலில் (Liberal Peace in Question, Kristian Stokke and Jayadeva Uyangoda, 2011), ஒஸ்லோ பல்கலைக்கழக பேராசிரியர் கிறிஸ்ரியன் ஸ்ரோக்கே இவ்வாறு குறிப்பிடுகிறார், 'அமெரிக்காவோ, மற்றய முக்கிய நாடுகளோ தமிழ்த் தேசிய வாதம் ஒரு பெரிய பாதுக்காப்பு பிரச்சனையாக கருதவில்லை. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான கட்சிகளின் கூட்டணியான ஐக்கிய தேசிய முன்னணி அமெரிக்காவின் சுதந்திரமான சந்தைப் பொருளாதார கொள்கைகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தது.' மேற்படி கருத்தானது சந்தைப் பொருண்மியமே மேற்கு நாடுகளின் தலையீட்டிற்கு வழிகோலுகிறது என்ற அப்பட்டமான உண்மையினை வெளிப்படுத்துகிறது. இந்த அடிப்படையில், குறிப்பிடத்தக்களவு பொருளாதார பலமில்லாத ஈழத்தமிழர்கள், மேற்குலகத்திற்கு எவ்வாறு கூட்டாளிகள் ஆக முடியும் என்பதனை சம்பந்தன் - சுமந்திரன் குழுவினரோ அல்லது அவர்களை தூக்கி நிறுத்த முற்படும் உலகத் தமிழர் பேரவை, கனேடிய தமிழர் காங்கிரஸ் போன்றவையோ விளக்கினால் நன்று.

பிராந்திய மூலோபாய நலன், பொருண்மிய நலன் போன்றவற்றில் தமக்கு இடையூறாக இருக்கும் மகிந்த இராஜபக்சவின் அரசாங்கத்திற்கு அவ்வப்போது தட்டுக் கொடுத்து நிமிர்த்துவதற்கு, தமிழ் மக்களின் பிரச்சனையை மேற்கு நாடுகள் பயன்படுத்திக் கொள்கின்றன. இதனை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு ஈழத்தமிழர்களின் அடிப்படை உரிமைகளை வலியுறுத்துவதை விடுத்து தமிழர் அரசியல் தலைமைகள் எஜமான விசுவாசத்துடன் நடந்த கொள்கின்றன.

ஏற்கனவே அமுலில் உள்ள பதின்மூன்றாம் திருத்தச்சட்ட மூலத்தினை நிறைவேற்றுமாறு சிறிலங்கா அரசை வலியுறுத்துவதற்கு அப்பால், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் விடயத்தில் இந்தியாவோ, அமெரிக்காவோ அல்லது மற்றய மேற்கு நாடுகளோ அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதனை அவர்களுடன் பேச்சுகளை நடாத்தும் கூட்டமைப்பும், புலம்பெயர் அமைப்புகளும் நன்கறிவர். ஆனால் அதனையொட்டிய தமது நிலைப்பாட்டினை பொதுமக்கள் மத்தியில் வெளிப்படுத்தினால், தாம் மக்களால் நிராகரிக்கப்படுவதுடன், அரசியலில் தமது போட்டியாளர்களின் கை யோங்கி விடும் என அவர்கள் அஞ்சுகின்றனர்.

அண்மையில் கூட்டமைப்பிற்கும் தமிழ் குடிசார் சமூகத்தினருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில், பதின்மூன்றாம் திருத்தத்தினை எக்கட்டத்திலும், எந்தத் தேவைக்காகவும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழரது அரசியல் தீர்வு தொடர்பில் பயன்படுத்தக் கூடாது என குடிசார் சமூகத்தின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர். அதற்கு பதிலளித்த கூட்டமைப்பின் நியமன உறுப்பினர் சுமந்திரன் பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தை தாம் நிராகரிப்பதாகக் கூறினாலும், தற்போது தந்திரோபாய காரணங்களுக்காக 13 வது திருத்தத்தினை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என வலியுறுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளார். இக்கருத்தினை மறுதலித்த குடிசார் சமூகத்தின் பிரதிநிதிகள், தந்திரோபாய காரணங்கள் என்று ஆரம்பித்தாலும் இறுதியில் 13 ஆம் திருத்த கட்டமைப்பிற்குள் தமிழரை முடக்கும் திட்டமாகவே இது அமையும் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேற்படி கூட்டத்தில், அடிப்படைகளை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தெரிவித்திருந்தாலும், அங்கு உரையாற்றிய ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர்கூட தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றை தமிழரது அரசியலின் அடிப்படை என வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளவில்லை என அறிய முடிகிறது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணயம் போன்ற தமிழ் மக்களின் அடிப்படைக் கொள்கைகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொள்கைகள் எனகுறிப்பிட்டதாக குடிசார் சமூகப்பிரதிநிதி ஒருவர் இக்கட்டுரையாளரிடம் தெரிவித்தார்.

**அண்மையில் கூட்டமைப்பிற்கும் தமிழ் குடிசார் சமூகத்தினருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில், பதின்மூன்றாம் திருத்தத்தினை எக்கட்டத்திலும், எந்தத் தேவைக்காகவும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழரது அரசியல் தீர்வு தொடர்பில் பயன்படுத்தக் கூடாது என குடிசார் சமூகத்தின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.**

சர்வதேச நாடுகள் தம்மை நெருங்கி வருவதாகக் குறிப்பிடும் கூட்டமைப்பினரும், புலம் பெயர் தமிழ் அமைப்புகளும் எந்த அடிப்படையில் இந்த நெருக்கம் ஏற்பட்டுள்ளது என்பதனை வெளிப்படுத்த வேண்டும். சர்வதேச நாடுகள் எங்கள் பக்கமிருக்கின்றனவா அல்லது அவர்களது பக்கமிருப்பதற்காக தாம் எத்தகைய விட்டுக் கொடுப்புகளுக்கும் தயாரக இருக்கிறார்களா என்பதனையும் இவர்கள் தெளிவு படுத்த வேண்டும்.


கூட்டமைப்பினரும் அவர்களுடன் இணைந்திருக்கும் மற்றய கட்சிகளும் தமிழ் மக்களின் அரசியல் அடிப்படைகள் விடயத்தில் சிரத்தை காட்டாத நிலையில், குடிசார் சமூகத்தினர் இவ்விடயங்களில் உறுதியாக இருப்பது தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையினை ஏற்படுத்துகிறது.

பல்வேறு அழுத்தங்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் தமது கருத்துகளை துணிகரமாக முன்வைக்கும் அவர்களுக்கு, தமிழ் மக்கள் தமது முழு ஆதரவினையும் வழங்க வேண்டியது அவசியமாகிறது.

ஒரு பேப்பர்
கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| **New Malden** | |
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |
| **Tooting** | |
| Yhaal House | 020 8767 8585 |
| Rainbow Restaurant | 020 8640 4230 |
| Amman Kovil | 020 8795 4258 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Prime Foods | 020 8682 3777 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | 020 8540 8192 |
| Spice way | 020 8685 1122 |
| **Croydon** | |
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |
| **Lewisham** | |
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS | 020 8297 9432 |
| **Eastham** | |
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Akilan Enterprise | 020 8548 0033 |
| **Ilford** | |
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri Supermarket | |
| **Edmonton** | |
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |
| **Walthamstow** | |
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |
| **Harrow** | |
| Tsk food & Wine | 020 7622 4258 |
| Eelavan | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W. | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |
| **Wembley** | |
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |
| **Ealing** | |
| Amman kovil | 020 8810 0835 |
| **Greenford** | |
| Ambiha | 020 8813 0967 |
| **South hall** | |
| Thamilini C & C | 020 8606 9900 |
| Duvaraka C & C | 020 8813 9126 |
| Palm Palace | 020 8813 9663 |
| Spicy Palace restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |

# செல்வம் துன்பமா ? - சத்குரு



*"Spiritual process means, you do what life is longing for, to become more than what you are right now. The materialistic way, it will never work"*

*- Sadhguru*

பொருள்சேர்க்கத்துவங்கிவிட்டால்பிறகு வாழ்க்கையில் துன்பங்களும் சேர்ந்துவிடுமா? பணம் உங்களுக்குத் துன்பத்தை வரவழைப்பதில்லை. முட்டாள் தனம் தான் துன்பத்தை வரவழைக்கிறது. பணம் உங்கள் வாழ்க்கையில் நுழையும்போது, முட்டாள்தனமும், அதனால் துன்பமும் சேர்ந்து வரலாம். அதற்காக, பணம் வந்துவிட்டாலே துன்பமும் வந்தாக வேண்டும் என்று கிடையாது.

ஆனால், வசதிகள் ஏன் துன்பமாக மாற வேண்டும்? நாம்தானே வசதியை நாடினோம்? நாம் விரும்பியதே நமது துன்பத்துக்கு ஏன் காரணமாக வேண்டும்? மனிதர்களின் பெரிய பிரச்சினை இது. பல நேரங்களில் இரண்டு விஷயங்கள் சேரும்போதுதான் சமநிலை கிடைக்கிறது. ஆனால் நாம் ஒன்றை வைத்துக்கொள்கிறோம். அதனுடன் இணைந்த மற்றொன்றை முழுவதுமாய் மறந்து விடுகிறோம். காலையில் சாப்பிட உட்காருகிறீர்கள். ஊறுகாய் சுவையாக இருக்கிறது. மற்றவற்றை மறந்துவிட்டு, ஊறுகாயை மட்டுமே வயிறுநிரம்பச் சாப்பிட்டால், மாலையே பிரச்சினை ஆரம்பித்துவிடும்தானே. அதே போலத்தான் செல்வமும் செழுமையும்!

ஏராளமானோர் தினமும் கோவில், மசூதி, தேவாலயம் செல்கிறார்கள். அங்கிருந்து திரும்பி வரும்போது அவர்கள் முகத்தைக் கவனித்திருக்கிறீர்களா? அவர்கள் முகம் மகிழ்ச்சியாக மாறியிருக்கிறதா? நான் 11 வயதாக இருக்கும்போது இது என்னை மிகவும் குழப்பியிருக்கிறது. அந்த வயதில் நான் ஒரு பெரிய கோவில் வாசலில் நிறைய நேரம் உட்கார்ந்துகொண்டு கோவிலிலிருந்து திரும்பி வருபவர்களைப் பார்த்துக் கொண்டே இருப்பேன். கடவுளைப் பார்த்து வந்த பின் அவர்கள் முகம் பிரகாசமாக மாறியிருக்கிறதா என்று கவனிப்பேன். கோவிலிலிருந்துதிரும்பிவரும்போதுகடவுளைப்பற்றிபேசுவதைவிட கோவிலில் பார்த்த மற்ற மனிதர்களைப் பற்றிய வம்புகளுடன் வெளிவருவதைத் தான் நான் அப்போது கவனித்தேன். அல்லது அவர்கள் விட்டுச்சென்ற செருப்பு வேறு யாரோடாவது நடந்து போய்விட்டால் இந்த உலகத்தை, ஏன் கடவுளைக்கூட சபிக்க ஆரம்பித்துவிடுவதைப் பார்த்திருக்கிறேன்.

கோவிலிலிருந்து வெளிவரும் மனிதர்களின் முகத்தைவிட ஹோட்டலிலிருந்து வெளிவரும் மனிதர்களின் முகம் அதிகப் பிரகாசமாக இருக்கிறது. அதிக மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் வெளிவருகிறார்கள்.

இது மிகவும் வெட்கக்கேடானது இல்லையா? தெய்வீகத்தை விட தோசை அவர்களுக்கு அதிக திருப்தியைத் தந்திருக்கிறது. எனவே தெய்வீகமா, தோசையா என்பதல்ல கேள்வி. மனிதர்கள் விஷயங்களை மோசமாகக் கையாண்டால் எப்படியும் துன்பம் நிச்சயம் வருகிறது.

துன்பம் செழுமையால் வரவில்லை. பணம் அவர்களின் சட்டைப் பைக்குள் போவதற்கு பதிலாக அவர்கள் தலைக்குள் போனதால்தான் துன்பம். பணத்தை சட்டைப்பைக்குள் வைத்துக் கொண்டு இந்த உலகில் அற்புதமான பணிகள் பலவற்றைச் செய்ய முடியும்.

உலகில் மனிதர்களுக்கிடையே இதுதான் பெரிய போராட்டமாக இருக்கிறது. உலகின் மேற்குப் பகுதியையும், கிழக்கு பகுதியையும் பார்த்தீர்கள் என்றால், மேற்குப் பகுதியில் உள்ளவர்கள் உள்நிலையைச் சரியாகக் கையாள்வதில்லை. அமெரிக்க நாட்டில் உள்ளவர்களில் 40 சதவிகித மக்கள் அவர்களின் வாழ்க்கையில் ஏதாவது ஒரு முறையாவது மன அழுத்தத்துக்கான மருந்தை எடுத்துக் கொள்கிறார்கள் என்று அறிகிறோம். சமநிலையில் இருப்பதற்கு 40 சதவிகித மக்கள் மருந்து உட்கொள்கிறார்கள். இது மனித நலனுக்கு உகந்த விஷயமாக இல்லை. மேற்குப் பகுதியில் உள்ளவர்களோ, வெளியில்தான் அனைத்தும் இருக்கின்றன என நினைத்து உள்சூழ்நிலையைக் கவனிக்க மறந்துவிடுகிறார்கள். எனவே, அவர்களுக்கு வாழ்க்கையே குழப்பமாகிவிடுகிறது.

இங்கு. இந்தியாவில் வேறு விதமான தவறு நடக்கிறது. எல்லாவற்றையும் சொர்க்கமாக நினைத்து வாழ்க்கையை மறந்துவிடுகிறார்கள். இங்கு பெரிய கோவிலைக் கட்டுவார்கள், ஆனால், சரியான கழிவறை இருக்காது. இது இந்தியர்களின் பிரச்சினை. எல்லாமே சொர்க்கத்தில் இருக்கிறது என்று நினைத்து வாழும் உலகை மறந்துவிடுகிறார்கள், எனவே அதற்கான விலையைக் கொடுக்கிறார்கள்.

எனவே, இந்த இரண்டுக்கும் இடையிலான ஒரு சமநிலை இருந்தால், துன்பத்தின் கதவுகளை செல்வம் திறக்காது!


---

“ஆன்மீகம் என்றால், உயிர் எதற்காக ஏங்குகிறதோ அதைச் செய்வது, நீங்கள் இப்போதிருக்கும் நிலையிலிருந்து இன்னும் சற்று உயர்ந்த நிலைக்குச் செல்வது, பொருட் தன்மையின் வழியில் அதை எப்போதும் அடைய முடியாது ”

– சத்குரு

மேலதிக விபரங்களுக்கும் தகவல்களுக்கும்

- www.sadhguruinlondon.com
- www.facebook.com/SadhguruInLondon



# மெல்லப் பேசும் வல்லரசுகளும் உரத்துச் சொல்லும் தமிழர்களும்



பெரும்படை பரிவாரத்தோடு ஜெனீவா செல்கிறார் சிங்களத்தின் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்.அனேகமாக அவரின் இறுதியான இராஜதந்திரத் தோல்வி இதுவாகவே இருக்குமென நம்பப்படுகிறது.

தனது அதிகாரத்தைக் காப்பாற்ற பேராசிரியர்களையும், கலாநிதிகளையும் இராஜதந்திரப் போரில் மகிந்தர் களமிக்கினாலும், காலுடைந்த ஹெகலியரம்புக்வல போல், மகாவம்சமயக்கத்தில் இருக்கும் குணதாச அமரசேகர போல், சர்வதேச அரங்கில் திமிரோடு பேச முடியாதென்பதை பேராசான் பீரிஸ் அறிவார்.

றோகான் குணரெட்ன, தயான் ஜெயதிலக போன்ற சிங்கள கல்விமான்கள், மகிந்தர் காய்ச்சும் புலிப் பா(சி)யாசத்திற்கு முந்திரிவத்தலாக, ஏலம் கராம்பாக இருக்கலாம்.

ஆனால் வல்லரசாளர்களின் இராஜதந்திர நகர்வுகளின் முன், இந்தப் பருப்புகளெல்லாம் வேகாது என்பதை புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளார் மகிந்தர்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் சொல்லப்பட்ட பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென, மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் கொண்டு வரப் போவதாக அமெரிக்கா கூறியவுடன், இராணுவ நீதி மன்றமும், தேசிய காவல்துறை ஆணைக்குழுவும் திடீரென முளைக்கின்றன.

செனட்சபை, நாடாளுமன்றத் தெரிவுக்குழு வரிசையில் இந்த இரண்டும் சேர்ந்து கொண்டுள்ளன. ஆனாலும் இவையெல்லாம் கண் துடைப்பு நாடகங்களென்பதை தமிழ் மக்கள் நன்கறிவர்.

இறுதிப் போரில் ஒருவர் கூடக் கொல்லப்படவில்லையென்றும், சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப்படம் போலியானதெனக் கூறிய சிங்களம், இப்போது அதுபற்றி விசாரிக்க இராணுவ நீதிமன்றத்தை அமைக்கப் போகிறதாம்.

கொலைகாரர்கள், நீதிவிசாரணை நடாத்தும் வேடிக்கை இலங்கையில்தான் நடைபெறப்போகிறது.

இருப்பினும் செம்மணிப் படுகொலை விசாரணை போன்று இதுவும் காணாமல் போகடிக்கப்படலாம்.

அவ்வாறு விசாரணை நடந்தால் அது உலக அதிசயங்களின் பட்டியலில் நிச்சயம் இடம் பிடிக்கும். சிங்களம் நடாத்திய விசாரணைக் குழுக்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், கின்னஸ் உலகச் சாதனைக்கு பரிந்துரைக்கப்படும் வாய்ப்புக்கள் மிக அதிகம்.

இந்நிலையில், சிங்களத்தின் புதிய சதியைப் புரிந்து கொள்ளாமல், நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரையை நிறைவேற்ற முடியாமல் மகிந்தர் தடுமாறும் போது, நியமன எம்.பி. எம்.ஏ.சுமந்திரன் போன்றோரின் இணக்கப்பாட்டு அரசியலை தமிழ்மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

படிப்படியாக அழுத்தம் கொடுக்கும் உலக யதார்த்தம் தனது கருத்தல்ல என்று கூறும் சுமந்திரன், சுயாதீன விசாரணையே தனது நிலைப்பாடென்று சமாளிக்க முனைவது ஆச்சரியமாகப் படவில்லை.

அதாவது எல்லாப் பாதைகளும், இறுதியில் சர்வதேச சுயாதீன விசாரணை என்கிற ரோமை நோக்கியே செல்லுமென்கிறார்.

இலக்கு ரோமாக அமையுமா அல்லது கொழும்பாக அமையுமாவென்பதை தீர்மானிக்கும் சக்தியை வல்லரசுகளிடம் கொடுத்துவிட்டு, விடுதலை அரசியலை நடாத்த முடியாது.

ஏனெனில் மக்கள் சக்தி மீது நம்பிக்கையற்றவர்களே, ஏகாதிபத்தியத்தின் இராஜதந்திரத்திற்கு முண்டு கொடுப்பார்கள்.

இலங்கை குறித்தான வல்லரசாளர்களின் நகர்வுகளை, இவர்கள் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை போல் தெரிகிறது.

நாடு பிளவுபடுவதை சர்வதேச வல்லரசாளர்கள் விரும்பவில்லையென்பதால், ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண்பதையே தாமும் விரும்புவதாக தாளம் போடுவது அபத்தமாகவிருக்கிறது.

ஒரே நிலப்பரப்பிற்குள், இறைமையுள்ள இரண்டு தேசங்கள் இருப்பதையாவது இவ்வல்லரசாளர்கள் ஏற்றுக் கொள்ள முன்வருவார்களா?

சிறுபான்மை மக்களென்று, திரும்பத் திரும்பக் கூறும் இவர்கள், தமிழ் மக்கள் தனித்துவமான தேசிய இனமென்றாவது அங்கீகரிக்கிறார்களா?

தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்கிற விட்டுக் கொடுக்க முடியாத பிறப்புரிமைகளை, ஏகாதிபத்தியங்களின் இராஜதந்திரோபாயங்களுக்கு ஏற்ப, மாற்றிக் கொள்ள முடியுமா? அல்லது கிடப்பில் போட முடியுமா?

ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. 76இல் தமிழீழப் பிரகடனம் செய்தவர்கள் 81இல் மாவட்ட சபையை ஏற்றுக்கொண்ட இறங்கு நிலை, மறுபடியும் நிகழும் போலுள்ளது.

முள்ளிவாய்க்கால் பேரழிவிலிருந்து கடந்த மூன்று வருடங்களாக, வல்லரசாளர்கள் என்ன விதமான நகர்வுகளை மேற்கொண்டார்களென்று நோக்க வேண்டும்.

பான்கீ மூன் அமைத்த ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் அழுத்திக் கூறப்பட்ட சுயாதீன விசாரணை என்கிற முக்கிய விடயத்தை இவர்கள் கருத்திலெடுக்கவில்லை.

அதற்குப் பதிலளிக்க முடியாதென சிங்களம் திமிரோடு பேசியபோது, கண்டிக்கவில்லை.

ஐ.நா.சபையினால் இறைமையுள்ள நாடென அங்கீகரிக்கப்பட்ட ஒரே காரணத்தை சாட்டாக வைத்து, நீங்களே உள்நாட்டில் விசாரணைக்கான பொறிமுறை ஒன்றினை நிறுவகவென்று கூறி, இதுவரை காலமும் அமைதியாக இருந்தார்கள்.

அவ்வாறாயின் நிபுணர் குழுவின் அறிக்கை எதற்காக, யாரை ஏமாற்ற உருவாக்கப்பட்டதென்கிற கேள்வி எழுகிறது.

**அரசியல் பார்வை**

**இதயச்சந்திரன்**

நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்க வாருங்களென்று அனைத்துலக மன்னிப்புச்சபை, அனைத்துலக நெருக்கடிக் குழு மற்றும் மனித உரிமைக் கண்காணிப்பகத்திடம் மகிந்தர் கோரிக்கையொன்றினை முன்வைத்த போது, அதனை இம் மூன்று மனித உரிமை அமைப்புக்களும் நிராகரித்தன.

இவர்கள் நிராகரித்த ஆணைக்குழுவின் அறிக் கையில் சொல்லப்பட்ட, பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு அமெரிக்க பிரதிநிதிகளான றொ பேர்ட் ஓபிளேக்கும், மரியா ஒட்டேரோவும் வலியுறுத்துகிறார்கள்.

ஆகவே மனித உரிமைச் சங்கங்களின் கோரிக்கைகளை வல்லரசாளர்கள் ஏற்றுக் கொள்ள மறுப்பதோடு, தமது நிகழ்ச்சிநிரலின் வழியே மட்டும் அவை பயணிக்கின்றன என்கிற உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆசியப் பிராந்தியத்தில், உலக ஒழுங்குச் சமநிலை, சடுதியான மாற்றத்திற்கு உள்ளாகுகிறது என்பதை உணரும் மேற்குலகம், இலங்கை விவகாரத்திலும், புதிய நகர்வுகளை மேற்கொள்ள எத்தனிக்கிறது.

தென்சீனக்கடலாதிக்கத்தையும், இந்துசமுத்திரப்பிராந்தியமேலாதிக்கத்தையும், ஒரே நேரத்தில் கையாள முற்படும் சீனாவினது தந்திரோபாய காய் நகர்த்தலை, சாதுரியமாக எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் அமெரிக்கா, இலங்கை விவகாரத்தில் கடுமையான போக்கினை தற்போதைய நிலையில் மேற்கொள்ள விரும்பவில்லை போல் தெரிகிறது.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்படக் கூடிய ஏதுநிலைகளை உருவாக்க முடியுமா? அல்லது பொருண்மிய அழுத்தங்களினூடாக அதனை தனது வழிக்கு கொண்டு வர முடியுமாவென்கிற இருவழிச் சிந்தனையில் மேற்குலகம் தடுமாறுகிறது.

அதேவேளை ஈரான் மீதான பொருளாதாரத் தடையால் நிலைகுலையும் மகிந்த ஆட்சியை, தனக்குச் சாதகமான திசையில் நகர்த்தி, சீனாவின் ஆதிக்கத்தை குறைக்க முடியுமாவென இந்தியாவும் முயற்சித்துப் பார்க்கிறது.

ஆனால் ஆசியப் பிராந்தியத்தில் உருவாகும் இந்திய - அமெரிக்க இராஜதந்திரக் கூட்டிணைவு, தனது குடும்ப ஆட்சிக்கும், சீன சார்பு நிலைப் பாட்டிற்கும் அச்சுறுத்தலாகவிருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளும் மகிந்தர், இந்தியாவிடம் முற்று முழுதான சரணாகதியை மேற்கொள்ள மாட்டாரெனக் கணிப்பிடலாம்.

மகிந்தரின் இத்தகைய நழுவல் போக்கு இராஜ தந்திரத்தை புரிந்துகொள்ளும் அமெரிக்காவானது, ஆணைக்குழு பரிந்துரை அழுத்தம் என்கிற முதற்கட்ட ஆயுதத்தைப் பிரயோகித்து, தனது பிராந்திய நலன் சார்ந்த இராஜ தந்திர நகர்விற்குள் இலங்கையை வீழ்த்தி விடலாமாவென்று பரீட்சித்துப் பார்க்கிறது.

இவைதவிர தமது இராஜதந்திர நிகழ்ச்சி நிரலிற்குள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரும் சாத்தியப்பாடுகள் உண்டா என்பதை தெரிந்து கொள்ளவே, றொபேர்ட் ஓ பிளேக்கின் யாழ். பயணங்களும் நடைபெற்றன.

இருப்பினும் மேற்குலகம் மற்றும் இந்தியாவைப் பொறுத்தவரை, இலங்கையின் மையக் குவிமுக ஆட்சியை, தமது ஆளுமைக்குள் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபடுவதையே, முக்கிய நிகழ்ச்சி நிரலாகக் கொண்டு செயற்படும்.

அதேவேளை கம்போடியாவில் முப்பது வருடங்களிற்குப் பின்னரே, படுகொலைக்கான விசாரணை நடைபெற்றது என்று கூறி, அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலிற்கு வரலாற்றுப் பதிவு சார்ந்த வியாக்கியானங்களை நாம் வழங்கத் தேவையில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

30 வருடங்களிற்குப் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது தமிழினமோ இலங்கையில் இருக்குமா வென்பதை அறுதியிட்டுக் கூற முடியாது.

ஏனெனில் கிடைத்த கால அவகாசத்தை சரியாகப் பயன்படுத்தி, தமிழின அடியழித்தலை தீவிரமாக மேற்கொள்கிறது சிங்களம்.

இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ சிங்களத்தின் மீதான தமது அழுத்தங்களை மெதுவாக மேற்கொள்ளலாம்.

ஆனால் விடுதலையை விரைவுபடுத்தும் நிர்ப்பந்தம், ஒடுக்கப்படும் தமிழ்த்தேசிய இனத்தின் மீது சிங்களத்தால் திணிக்கப்பட்டிருப்பதை நாம் புறந்தள்ள முடியாது.

சுவை அருவி

- உங்கள் வீட்டு விஷேடங்களிற்கான சாப்பாட்டு ஓடரிற்கு எங்களை நாடுங்கள்.
- அறுசுவை உணவுடன் சற்று மாறுதலுக்காய் ஒரே கொண்டாட்டத்தில் 5 - 6 வகையான உணவுகள் பரிமாற இருக்கின்றோம்.
- சைவ சாப்பாட்டுடன், இட்லி, தோசை, இடியப்பம், உப்புமா, இன்னும் பலவும்.....
- அசைவ சாப்பாட்டுடன் மேற்கத்தைய உணவுகளான Pasta, Noodles போன்றவையும் இன்னும் பல வடஇந்திய தென்னிந்திய உணவுகளும்...
- விஷேடமாக குழந்தைகளுக்கான உணவும் தயாரித்து கொடுக்கின்றோம்
- சமையல்கலை பட்டம் பெற்ற பெண்களால் நடாத்தப்படுகிறது.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

சைவ உணவு 2.50 to 3.00
அசைவ உணவு 3.50 to 4.00

Harrow - Mobile No: 07980 386 431 (Winie / Richie)

Currency Trading gives you Financial Freedom

Would you like to make TAX FREE money from the comfort of your own home? All you need is a computer, an internet access and our vital training. We specialise in training people to trade currencies where you can MAKE MONEY by acquiring our lucrative skill.

The training is for a limited period only
so hurry and book your place and change your life for the better.

Venue: Knights of Harrow Seminar Room 164 Pinner Road, Harrow, HA1 4JJ.

Course: Mon – Thursday 10am to 2pm. Places are limited.

For further details please contact

Nthiran 0781 221 1663 s2pnet@yahoo.co.uk
Para 0795 850 7010 paramakumaran@hotmail.com

# பனையால விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது மாதிரி




**சுகி**
*(ஒருபேப்பருக்காக)*

இந்த நாட்டில் சில விடயங்களை மிகச் சாதாரணமாக ஒரு பத்திரத்தை பூர்த்தி செய்து அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அந்த சாதாரணமான பத்திரத்தை எப்படி பூர்த்தி செய்வது என்பது ஆங்கில அறிவின்மையால் எம்மில் சிலருக்கு வானைத்தை வளைப்பது போன்ற பிரமிப்பை ஏற்படுத்தும் செயல் போன்றது. அவ்வாறு அவர்களை நினைக்க வைப்பதில் எமது சட்டத்தரணிகளின் பங்கும் மிகவும் காத்திரமானது.

இது இப்படி இருக்க இதில் கொஞ்ச நஞ்சம் ஆங்கில அறிவும், கணனித்துவ அறிவும் உடையோர் முதலில், வாழ்க்கைக்கு தேவையான விடயங்களை, பிள்ளைகளின் உதவியோடு கொஞ்சம், கணனியில் தேடி பார்த்து விடங்களை கொஞ்சமாவது விளங்கிக்கொண்டு சட்டத்தரணியிடம் போனால் மிகுதி விளக்கத்தை அறிந்து கொள்ளலாம், அதைவிட்டு விட்டு 'அ' வில் இருந்து அவர்தான் தொடங்க வேண்டும் என்று இருந்து விட்டு, உங்களை ஏன் கையொப்பம் போடச்சொல்கிறா?, எதற்கு போடச்சொல்கிறா? என்று எதுவும் கேட்காது, தாருங்கள் வீட்டில் வாசித்து பார்த்துவிட்டு வந்து போடுகிறேன் என்றும் சொல்லாது, சொல்கிற இடத்தில் கையெழுத்து போட்டு விட்டு, வீட்டில் வந்து லங்காசீறி பார்பதற்கு மட்டும் கணனியைப் பாவித்துக் கொண்டு இருப்பார்கள். இதில் யாரையும் குறை சொல்லிப் பிரயோசனம் எதுவும் இல்லை.

இதில் கொடுமை என்ன வென்றால், விசா பிரச்சனை, வீட்டு திணைக்கழக (Home Office) பிரச்சனை என்பன, வாழ்க்கை பிரச்சனைகள், அதற்குசரியானசட்டத்தரணிவேண்டும். ஆனால்? மற்றவர்கள் செய்யும் குற்றவியல் செயல்களால் மனதாலும், உடலாலும் பாதிக்கப்பட்டவர்களின் காயங்களுக்கு இழப்பீடு செய்வதற்கென அரசாங்கத்தால் குற்றவியல் காயங்களுக்கான இழப்பீட்டு ஆணையம் நிறுவப்பட்டுள்ளது. (Criminal Injuries Compensation Authority) அதில் உள்ள சிறிய பத்திரத்தை நீங்கள் காவல்துறையில் பதித்த குற்றப்பதிவு இலக்கம், வைத்தியசாலையில் அல்லது உங்கள் பொது வைத்தியரிடம் காட்டியதற்கான சான்று. ( GP's certificate) அதற்கு அவர்கள் அறுபது பவுன்ஸ்கள் வரை கட்டணம் அறவிடக்கூடும். இதைத்தவிர உங்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி ஒரிரு பத்தியில் விளக்கம் அவ்வளவு தான். குறைந்த தொகை £1000 இருந்து கூடிய தொகை £500,000 வரை இழப்பீட்டு கேட்கலாம்.(www.justice.gov.uk/guidance/compensation)

வேலை இழப்பு, வருமான இழப்பு, மனப் பாதிப்பு, உடல் பாதிப்பு, வலிகள், வைத்தியச் செலவு, எதிர்கால வைத்தியச்செலவு என எல்லா இழப்புக்களும் இதில் அடங்கும். நீங்கள் பிரித்தானியாவின் நிரந்தர வதிவிட உரிமையுடையவராக இருந்து யூரோபியன் நாடு ஒன்றில் காயப்பட்டிருந்தால் Glasgowவில் இருக்கும் யூரோபியனுக்கான காயங்களுக்கான இழப்பீட்டு குழுவின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம். (EU Compensation Assistance Team (EUCAT) 0300 003 3601 or e-mail eucat@cica.gsi.gov.uk)

உங்களது நெருங்கிய உறவினர்கள் அதாவது கணவன், மனைவி, வாழ்க்கையைபகிர்ந்து கொள்பவர் மற்றும் குழந்தைகள் அவர்கள் ஈடுபடாத ஒரு குற்றவியல் செயலினால் அநியாயமாக கொல்லப்பட்டிருந்தாலும் இதன் கீழ் இழப்பீட்டுத் தொகையாக ஒருவருக்கெனில் £11,000மும் அல்லது ஒன்று மேற்ப்பட்ட குடும்பத்தினர் இறந்திருந்தால் £5.500 வரை ஒவ்வொருவருக்கும்என இழப்பீட்டுத்தொகையை பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் அவரது வருமானத்தில்? தங்கியிருப்பவராக இருந்திருந்தால் அதற்கெனவும், நீங்கள் அவரது இறுதி கிரிகைகளுக்கு செலவழித்திருந்தால் அதற்கும் கூட இழப்பீட்டின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.


இது பற்றிய உதவியைப் பெற விரும்பினால் உங்கள் பகுதியில் இருக்கும் Citizen Advice Bureau, Victim Support மற்றும் தமிழர்களால் நடாத்தப்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் (charity) போன்றவற்றில் இலவசமாக உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆனால் எம்மவர்களில் சில சட்டத்தரணிகள் இந்த உதவியை தாமும் செய்து தருகின்றோம். நீங்கள் ஒன்றுமே கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்று கரிசனமாகக் கூறிக் கொண்டு முதலில் தமக்கும் எமக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஒன்றை வலுகாட்டமாக வரைந்து கையொப்பம் வேண்டிவிடுவார்கள். அதில் இழப்பீடு வரும்போது அதில் 35 விகிதம் தமக்கு செலுத்தவேண்டும் என்றும், மேலும் இந்த ஒப்பந்தத்தை இழப்பீட்டு தொகை வர முன் முறிந்துக் கொள்வதாயின் தமக்கு அதற்கான அலுவலக வேலைக்குரிய பணம் செலுத்த வேண்டும் என்றும் அதில் ஒரு மணித்தியாலத்திற்கு £300 எனவும், ஒரு தொலைபேசி அழைப்புக்கு £30 எனவும், அந்த தொலைபேசி அழைப்பு 10 நிமிடத்திற்கு மேல் நீடித்தால் மணித்தியால வேலைக்குரிய பணத்தின் விகிதம் என்னவும் (உதாரணமாக15 நிமிடம் நீடித்தால் £75 ) ஒப்பந்தம் போட்டுக்கொள்கிறார்கள். அத்தோடு எவ்வளவு தொகையைக் கேட்கிறார்கள் என்று கூடச்சொல்வதில்லை. இழப்பீடாக கேட்கப்பட்ட தொகை உங்களுக்கு தெரியாவிட்டால், நீங்களே இழப்பீட்டு ஆவணத்தின் தொலைபேசி இலக்கத்திற்கு (0300 003 3601) நேரடியாகத் தொடர்பு கொண்டு உங்களின் பெயர் விபரங்களை கொடுத்து அறிந்து கொள்ளலாம்.

இச்சட்டத்தரணிகள் நன்றாக நடந்ததை விசாரித்துக் கேட்டு அதற்கு இழப்பீடு அதிகமாக வரும் என்று அறிந்து, அதிகம் பாதிக்கப்பட்டு நொந்து போய் உள்ளவர்களையே, இவர்களும், ஜெகோவா சமயத்தவர்கள் ஆள்பிடிப்பது போல, கெட்டியாகப் பிடித்துக்கொள்கிறார்கள். அப்போது தான் இழப்பீட்டுத்தொகையில், அவர்களுக்கு வரும் தொகையான, 35 விகிதம் கூட அதிகமாக இருக்கும் என்பதால் போலும். சில சமயங்களில் இவர்களின் ஒப்பந்தத்தைப் பற்றி பிற்பாடு விபரமாக விளங்கிக்கொள்ளும் சிலர், பனையால விழுந்தவனை மாடு ஏறி மிதித்த, வேதனையையும், விரத்தியையும் அடைகிறார்கள்.


> **உங்களை ஏன் கையொப்பம் போடச்சொல்கிறா?, எதற்கு போடச்சொல்கிறா? என்று எதுவும் கேட்காது, தாருங்கள் வீட்டில் வாசித்து பார்த்துவிட்டு வந்து போடுகிறேன் என்றும் சொல்லாது, சொல்கிற இடத்தில் கையெழுத்து போட்டு விட்டு, வீட்டில் வந்து லங்காசீறி பார்ப்பதற்கு மட்டும் கணனியைப் பாவித்துக் கொண்டு இருப்பார்கள்.**

பொதுவாகவே இந்த இழப்பீடு வருவதற்கு பத்து மாதத்திற்கு மேலே ஆகும். அப்படி வந்தால் கூட அதில் கணிசமான பங்கு இந்த மிதி புகழ் சட்டத்தரணிக்கு தாரைவார்த்துக் கொள்ளவேண்டும்!



# சிறுவர்கள் மீதான பாலியல் வன்முறை

**சாத்திரி**
*(ஒரு பேப்பர்)*



அண்மையில் என்னுடைய பதிவுகளில் சிறுவர்கள் மீதான பாலியல் விடயத்தினையும் எனக்கு சிறியவயதில் நடந்தொரு அனுபவத்தினையும் எழுதியிருந்தேன். அதனை படித்த பலரும் தங்களிற்கும் நடந்த சம்பவங்களை பகிர்ந்திருந்தனர். பொதுவாக இதனைப்பற்றி எமது தமிழ் சமூகத்தில் நாம் சிறந்தவர்கள். உயர்வானவர்கள் மேன்மையானவர்கள் என எம்மை சுற்றி நாமே கட்டியமைத்திருக்கும் ஒரு கட்டமைப்பினை தகர்ந்துவிடுமோ என்கிற ஒரு பயத்தினாலேயே வெளிப்படையாக எழுதுவதோ பேசுவதோ கிடையாது. அப்படி யாராவது எழுதினாலும் எழுதும் ஒருவரை சமுதாயத்தை அல்லது கலாச்சாரத்தினை கெடுப்பவன் என்கிற முத்திரையை குத்தி ஒதுக்கி விடுவதே எமது சமூகத்தின் சிந்தனைப்போக்கு. ஆனாலும் எமது சமூகத்தில் எமது குடும்ப உறவுகளாலோ அல்லது குடும்பத்தின் நெருங்கிய நட்புக்களாலோ சிறுவர்கள் மீதான பாலியல் வன்முறை நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கின்றது ஆனால் அது வெளியில் வருவதில்லையென்பதுதான் சோகமானது.

இதற்கு உதாரணமாக அண்மையில் நடந்த ஒரு சம்பவத்தையே விபரிக்கலாம்.வெளிநாடுகளில் எம்மவர்கள் பணம் சேர்ப்பதை மட்டுமே குறியாக நினைத்து பெரும்பாலானவர்களின் வாழ்க்கை ஒடுகின்றது. அதற்காக பெரும்பாலான குடும்பத்தவர்கள் தங்கள் வீடுகளில் தனியானவர்களை தங்கவைத்து வாடைகை வாங்குவார்கள்.

சில வருடங்களிற்கு முன்னர் பாரிஸ் புறநகர் பகுதியில் aulnay sous bois வசிக்கும் எனது நண்பன் ஒருவனிற்கு நடந்த சம்பவத்தையும் இங்கு எழுதுகிறேன்.நண்பனிற்கு ஒரேயொரு மகள் இருந்தாள். அவளிற்கு அப்பொழுது 11 வயது ஆகியிருந்தது நண்பன் தன்னுடைய மனைவியின் நெருக்கிய உறவுக்காரர் ஒருத்தரை தனது வீட்டில் தங்கவைத்திருந்து (அவரும் திருமணமானர் மனைவி பிள்ளைகள் ஊரில் இருந்தனர்) வாடைகைப்பணமும் அதைவிட சாப்பாட்டு காசும் தனியாக வாங்கிக் கொண்டிருந்தார். ஒருநாள் நண்பனும் மனைவியும் வேலைக்கு போயிருந்த நேரம் அந்த நபர் தண்ணியடித்து விட்டு கணணியில் நீலப் படத்தை போட்டுவிட்டு அந்த சிறுமியை பார்க்கும்படி வற்புறுத்தியதோடு பலாத்காரம் செய்யவும் முயன்றிருக்கிறார். சிறுமி அவர் கையை கடித்து விட்டு தப்பியோடி குளியலறையில் புகுந்து கதவை பூட்டிக்கொண்டு இருந்து விட்டாள். விடயம் பிழைத்துப் போனதால் அவர் வீட்டிலிருந்து ஓடிவிட்டார். பின்னர் வீடுவந்த தந்தையிடம் சிறுமி அழுதபடி விடயத்தை சொல்லவே என்ன செய்வதென்று தெரியாமல் அவர் எனக்கு போனடித்து ஆலோசனை கேட்டிருந்தார். உடனடியாக காவல்த்துறையில் முறையிட்டுவிட்டு மகளை வைத்தியரிடம் அழைத்துப் போகவும் மிகுதியை அவர்கள் பார்ப்பார்கள் என்று ஆலோசனை கூறியிருந்தேன். ஆனால் அவரது மனைவி அதற்கு உடன்படவில்லை காரணம் சம்பந்தப் பட்டவர் அவரது நெருங்கிய உறவினர்.சொந்தத்திற்குள் சண்டை வரும் என பயந்தார்.அடுத்தது போலிஸ் வழக்கு என்று போனால் மகளின்எதிர்காலம்கெட்டுவிடும்.

இந்த இரண்டு பயத்தாலும் அவர்கள் சரியான நடவடிக்கைகள் எடுக்காமல் மகளிடமும் இந்த விடயத்தை யாருடமும் சொல்லகூடாது என மிரட்டியதோடு பாடசாலைக்கு போனால் அவர்களிடம் மகள் சொல்லி விடுவாள் அல்லது அவர்கள் கண்டு பிடித்து விடுவார்கள் என்கிற பயத்தில் சிலநாட்கள் அவளை பாடசாலைக்கும் அனுப்பவில்லை. ஆனால் வழக்கு பதிவு செய்ததாகவும் போலிசார் சம்பந்தப்பட்டவரை தேடுவதாகவும் அவன் என்னிடம் பொய் சொல்லியிருந்தான். சிலநாள் கழித்து நான் அவனிற்கு போனடித்து என்ன நிலைமை என கேட்ட பொழுது போலிஸ் இன்னமும் ஆளை தேடுவதாக சொன்னான். உடனேயே நான் அவனிடம் சம்பத்தப்பட்டவனின் பெயர் விபரம் அதே நேரம் அவனின் படம் என்பனவற்றை எனக்கு உடனடியாக அனுப்பும்படி சொன்னதும் நண்பனிற்கு புரிந்துவிட்டது நான் எங்காவது எழுதிவிடுவேன் அல்லது வானலைகளில் கதைத்துவிடுவேன் என்கிற பயத்தில் வழக்கு பதியவில்லை என்கிற உண்மையை சொல்லியதோடு மகளும் இப்பொழுது வழமைக்கு திரும்பி பாடசாலை போகிறாள் பிரச்சனையில்லை பேசாமல் விடு என்றான். ஆனால் நான் விடாமல் நண்பனோடு சண்டை பிடித்தபொழுது எங்கடை பிள்ளையை கவனிக்க எங்களுக்கு தெரியும் உவர் ஏன் தேவையில்லாமல் எங்கடை பிரச்சனைக் குள்ளை தலையை விடுறார் என்று அவனது மனைவியின் குரல் எனக்கு கேட்டது. நீ தவறு விடுகிறாய் இதற்கான விலை பெரிதாய் இருக்குமெண்டு நான் நண்பனிடம் சொல்லிவிட்டு தொ.பேசியை துண்டித்துவிட்டேன்.

அதன்பின்னர் நானும் அவனுடன் தொடர்பு கொள்வது கிடையாது ஆனால் சம்பவம் நடந்ததன் பின்னர் மிகவும் கெட்டிக்காரியான அந்த சிறுமி பாடங்களில் கவனத்தை செலுத்தவில்லை தாய் தந்தை பொய் சொல்லு என்று சொல்லிக் கொடுத்த பொய்யை தாய் தந்தையருக்கே சொல்லத் தொடங்கினாள்.13 வது வயதில் பாடசாலை நேரம் வேறு சிலருடன் கஞ்சா பத்திக் கொண்டிருந்த அவளை காவல்துறை பிடித்து தந்தையிடம் ஒப்படைத்தது. கோபத்தில் தந்தை இடுப்பு பட்டியை கழற்றி மோசமாக அடித்ததில் அவளே காவல்துறையை அழைத்தாள். காவல்துறை அவனை கைது செய்தது மகள் பாராமரிப்பு நிலையத்தினால் பொறுப்பெடுக்கப் பட்டாள். அவனிற்கு ஒண்டரை வருசம் சிறை சிறையால் வெளியே வந்தவன் எனக்கு போனடித்துவிபரத்தை சொல்லிஎனக்குமகளைபாக்க வேணும் ஏதாவது உதவி செய்யடா என்றான். நானும் முயற்சித்தேன் ஆனால் மகள் மறுத்து விட்டாள்.நண்பனின் மனைவியும் மனநிலை பாதிக்கப்பட்டுவைத்தியசாலையில். நான் நண்பனிடம் சொன்னது நீ அதிக விலை கொடுத்து விட்டாய் ஒன்றுக்கும் உதவாத கௌரவம் பார்த்து நீ உன்னுடைய உற்றார் உறவினர்களிற்காகவும் போலியான மரியாதைக்காகவும் இன்று நடு றோட்டில்.

உளவியல் மருத்துவர்கள் இது “பீடோபிலியா” என்கிற நோய் இப்படியானவர்களை மருத்துவம் மூலமே குணப்படுத்தவேண்டும் தண்டனை கொடுக்கக்கூடாது என்கிறார்கள். உளவியல் மருத்துவர்களே இப்படித்தான் அண்மையில் நோர்வே நாட்டில் ஒரு தீவில் கூட்டத்தில் புகுந்து 80 பேரிற்கு மேல் சுட்டுக்கொன்ற ஒருவனை மனநோயாளி மருத்துவம் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். இதுவே மேலை நாடுகளால் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்ட அமைப்பில் உள்ள ஒருவர் செய்தால் வன்முறை தண்டனை கொடுக்கவேண்டும் என்கிறார்கள். உளவியலை விட்டுவிடுவோம். ஆனால் நாம் எமது குழந்தைகளை இப்படியானவர்களிடமிருந்து பாதுகாக்க என்ன செய்யலாம்.தங்கள் குழந்தைகளின் படிப்பிற்கு காட்டும் அக்கறையை கொஞ்சம் உங்கள் குழந்தைகளின் மேல் காட்டுவது மிக அவசியம்.

1. குழந்தைகளிற்கு மற்றையவர்களின் சாதாரண தொடுகை விபரீதமான தொடுகை இரண்டிற்குமான வித்தியசங்களை சொல்லிக் கொடுங்கள்.

2. அவர்கள் சொல்லும் எந்த சின்ன விசயத்தையும் காது கொடுத்து பொறுமையாக கேளுங்கள். எந்த குறை சொன்னாலும் அதற்கு திட்டாமல் உற்சாகபடுத்தி முழுமையாக சொல்ல வையுங்கள். முக்கியமாக குழந்தைகள் பொய் சொல்ல மாட்டார்கள் என்பதை நாம் மறக்க கூடாது.

3. ஆசிரியர்களை பற்றியும் கேளுங்கள்.

4. சக மாணவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதையும் கேட்டு அறிந்துகொள்ள வேண்டும்.

5. நெருங்கிய உறவினர்களாக இருந்தாலும் அவர்கள் அனாவசியமாக முத்தமிடுவதை தவிர்க்க சொல்லுங்கள்.

அண்மையில் இந்தியாவில் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் செய்த ஒருவர் மீதான வழக்கின் தீர்ப்பில் துஸ்பிரயோகம் செய்பவர்களின் ஆண்மையை நீக்கும் சட்டம் இந்தியாவில் கொண்டு வரப்படவேண்டும் என்று தீர்ப்பு கூறியிருந்தார். அதாவது ஊர் பாசையிலை சொல்லப்போனால் நலமடிப்பது. இது பல நாடுகளில் சட்டமாகவே உள்ளது. சிறுவர்களை பாலியல் துஸ்பிரயோகம் செய்யும் ஆண்களிற்கு இந்தச் சட்டத்தை போடலாம் ஆனால் பெண்களிற்கு யாமறியோம் பராபரமே...

## நீங்களும் நாங்களும்.....

உங்களிடம் எல்லாவுற்றிற்கும்
ஏதேனும் ஒரு சரத்தோ அன்றி
தீர்மானமோ அதுவுமின்றேல்
வார்த்தையோ இல்லாமலா போகும்.
நாங்கள் இனப்படுகொலை என்றால்
நீங்கள் மெதுவாக அழுத்தி
போர்க்குற்றம் என்று வாசிப்பீர்கள்.
சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்று
நாங்கள் ஒன்றாக ஓங்கி குரல் தந்தால்
நல்லிணக்க ஆணைக்குழுவே போதுமென
ஏதேனும் ஒரு தடித்த புத்தகத்தை
மேற்கோள் காட்டி தடுத்துவிடுவீர்கள்.

நாங்கள் சுதந்திர தமிழீழம் என்றால்
நீங்கள் மாநாணசபைக்குள்
முடங்கி போய்விடுங்கள் என்கிறீர்கள்.
நாங்கள் விடுதலைப்போர் என்று
வேள்வி வளர்த்தால்–நீங்களோ
பயங்கரவாதம் என்று பட்டம்சூட்டி
வேருக்குள் விசம் தெளிப்பீர்கள்.
எங்கள் இனம் அழிகிறதே என்று
நாம் ஓங்கி அழுது சொன்னால்
அன்டார்டிகாவில் சுறா மீன்கள்
அழிந்து போகிறது என்று
கவலைப்பட்டு மாநாடு போடுவீர்கள்.
இவை எல்லாம் தெரிந்தும்
இன்னும் உங்கள் கதவுகளையே
தொடர்ந்து தட்டுகின்றோம்.
ஏன் தெரியுமா..
இன்னும் இங்கும் ஏதேனும்
ஒரு மூலையில் மனிதம் சாகாத
இதயத்துடன் ஒரு மனிதன்
இருப்பான் என்ற நம்பிக்கையில்தான்.

துருப்பிடித்து போன உங்கள்
மனச்சாட்சி கதவை திறந்துவர
ஏதேனும் ஒரு ஆதரவுக்கரம்
நீளமலா போய்விடும் என்ற
கடைசி துளி நம்பிக்கையுடன்தான்
எல்லாமே செய்கின்றோம்.
உங்கள் நீண்ட மாநாட்டு மண்டபங்களில்
எதிரொலிக்கும் “வீட்டோ” களாலும்
கை உயர்த்தி காட்டும் எதிர் ஆதரவு
எண்ணிக்கைகளாலும் மட்டுமே
நியாயப்படுத்தபடும் மனிதத்தின்
இறுதி துடிப்பில் யாரோ ஒருவனின்
ஓங்கி ஒலிக்கும் தாமத்தின் குரல்
எங்களுக்காக உலக அரங்கில்
நியாயம் கேட்கும் என்ற
நம்பிக்கை இன்னும் சாகாமல்
இருப்பதால்தான்
கடும் குளிருக்குள் அவர்கள்
நீண்ட தூரங்கள் நடந்ததும்
நாங்கள் தெருக்களில்
பதாகை தாங்கி நிற்பதும்.
நம்பிக்கை வற்றிக்கொண்டே
போகிறது தான் –ஆனால்
இன்னும் செத்துவிடவில்லை

– ச.ச.முத்து

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?
தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcyயை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்



உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com


R3
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

# ஈரானின் அணு ஆயுத உற்பத்தி நிலைகளை இஸ்ரேலால் தாக்க முடியுமா ?




## வேல் தர்மா
*(ஒரு பேப்பருக்காக)*

ஈரான் அணுகுண்டைத் தயாரித்தால் அதனால் பெரிய ஆபத்தைச் சந்திக்கப் போகின்ற நாடு இஸ்ரேல். இஸ்ரேலாலும் அணுக்குண்டு தயாரிக்க முடிய்யும் அது அணுக்குண்டு தயாரித்தால் அது மத்திய கிழக்கில் ஒரு ஓர் அணு ஆயுதப் போட்டிக்கும் அணு ஆயுதப் பரவாலாக்கத்திற்கும் வழி வகுக்கும் என்று ஐக்கிய அமெரிக்கா இஸ்ரேலை அணு ஆயுதம் உற்பத்திசெய்யாமல் தடுத்துவைத்திருக்கிறது. இஸ்ரேல் ஏற்கனவே அணு ஆயுதங்களை உற்பத்தி செய்துவிட்டது ஆனால் அவற்றைப் பரிசோதித்துப் பார்க்கவில்லை என்றும் கூறப்படுகிறது. ஈரானால் இன்னும் ஒரு ஆண்டுக்குள் அணுக்குண்டைத் தயாரிக்க முடியும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ஈரான் தனது அணு ஆராய்ச்சி சமாதானத்தை நோக்கமாகக் கொண்டது என்று அடித்துச் சொல்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் பன்னாட்டு அணு சக்தி முகவரகத்தில் இருந்து ஈரான் அணு ஆயுத உற்பத்தி செய்யலாம் என்ற செய்தி வந்தவுடனேயே இஸ்ரேலில் பெரும் அதிர்வலைகள் ஏற்பட்டுவிட்டன.

### ஈரான் சிரியாவில் கைவைத்தால் நடக்கிறது வேறு என்பது போல் மிரட்டலையும் ஐக்கிய அமெரிக்காவிற்கு விடுத்துள்ளது.

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹூ அணு ஆயுத வல்லமை கொண்ட ஈரான் மத்திய கிழக்கு உட்பட முழு உலகுக்குமே பெரும் அச்சுறுத்தல் என்றும் இஸ்ரேலுக்கு நேரடி ஆபத்து என்றும் கூறினார்.

### வேட்டியை மடிச்சுக் கட்டிய ஈரான்

ஈரானியப் பொருளாதாரம் பலவீனமடைந்த நிலையில் இருக்கிறது. ஈரானியப் படைத்துறையில் அமைப்புரீதியான பிரச்சனைகள் பல இருக்கின்றன. ஈரானிய அரசில் பிளவுகள் இருக்கின்றன. ஈரான் ஆதரவு தீவிரவாத இயக்கங்களான ஹமாசும் ஹிஸ்புல்லாவும் இஸ்ரேலிற்கு எதிராக அடக்கியே இப்போது வாசிக்கின்றன. இஸ்ரேலிற்கு எதிரான ஒரு தாக்குதலைச் செய்ய அவை இப்போது விரும்பவில்லை பொருளாதாரத் தடையால் மேற்குலக நாடுகள் ஈரானை மிரட்டிக் கொண்டிருக்க ஈரான் தனது கடற்படையின் 18வது பிரிவை சிரியாவிற்கு அனுப்பி தனது சண்டித்தனத்தைக் காண்பித்துள்ளது. ஈரானின் போர்க்கப்பல்கள் சிரியாவில் ஒத்திகையும் சிரியப்படையினருக்குப் பயிற்ச்சியையும் மேற்கொள்ளவிருக்கின்றன. அத்துடன் ஈரான் சிரியாவில் கைவைத்தால் நடக்கிறது வேறு என்பது போல் மிரட்டலையும் ஐக்கிய அமெரிக்காவிற்கு விடுத்துள்ளது. ஈரான் தான் எவ்விதத்திலும் மசியப்போவதில்லை என்ற செய்தியை மேற்குலகிற்கு தெரிவித்துள்ளமை இஸ்ரேலை ஒரு முன் கூட்டிய தாக்குதலுக்குத் தூண்டுமா? அது மட்டுமல்ல ஈரானை அதன் போக்கில் வளர விட்டால் 2015இல் அதனால் இஸ்ரேல் மீது பெரும் தாக்குதலை நடாத்திப் பெரும் அழிவை விளைவிக்கமுடியும்

### இஸ்ரேலால் ஈரானில் தாக்குதல் நடத்த முடியுமா ?

இஸ்ரேல் ஈரானில் தாக்குதல் நடத்துமா என்ற கேள்வியிலும் பார்க்க முக்கியமானதும் சிக்கலானதுமான கேள்வி இஸ்ரேலால் ஈரானில் தாக்குதல் நடாத்த முடியுமா என்பதுதான். முன்பு சிரியாவிலும் ஈராக்கிலும் இஸ்ரேல் இலகுவாக அங்குள்ள அணு ஆராய்ச்சி நிலையங்களில் தாக்குதல்களை நடாத்தியது. ஆனால் இப்போது நிலைமைகள் வேறு. ஈரான் தனது அணு ஆராய்ச்சி நிலையங்களை பல வேறு இடங்களில் அமைத்துள்ளது. அத்துடன் அவை 30 அடி ஆழமான கொன்கிறிட் பாதுகாப்புச் தடுப்புக்களுக்குக் கீழ் உள்ளன. அந்த அளவு ஆழமாக ஊடுருவிச் சேதம் விளைவிக்கக் கூடிய குண்டுகள் இஸ்ரேலிடம் இப்போது இல்லை. அது அவற்றை உருவாக்க வேண்டும் அல்லது அமெரிக்காவிடம் இருந்து பெறவேண்டும். அமெரிக்கா பொருளாதாரத் தடைகள் மூலம் ஈரானை வழிக்குக் கொண்டுவர முயல்கிறது. ஆனால் இந்தியாவும் சீனாவும் அமெரிக்காவின் பொருளாதரத் தடைக்கு உதவவில்லை. பன்னாட்டு நிதிக் கொடுப்பனவு முறைமையான SWIFTஇல் இருந்து ஈரானிய வங்கிகளை விலக்கியதால் ஈரானில் நிதி நெருக்கடி ஏற்பட்டது. இந்தியாவும் சீனாவும் ஈரானுடன் பண்டமாற்று முறைமை மூலம் வர்த்தகம் செய்யப் போவதாக அறிவித்து விட்டன. பொருளாதாரத் தடையால் ஈரான் அடங்காமல் போக வாய்ப்புண்டு. இது ஒரு இஸ்ரேல் ஐக்கிய அமெரிக்கா இணைந்து ஈரானில் தாக்குதல் நடத்தும் நிலைமையை உருவாக்கலாம். இதில் அமெரிக்கா திரைமறைவிலேயா இஸ்ரேலுடன் இணைந்து செயற்படலாம்.

### சவுதி அரேபியா ஈரானின் அணுத்திட்டத்தை விரும்பவில்லை

யதீந்திரா இன்னொரு நஞ்சையும் கக்கியிருக்கிறார். விடுதலைப்புலிகள், பிரேமதாசா அரசாங்கத்துடன் செய்து கொண்ட உடன்பாடு துரோகமில்லையா? என்பது ஒரு கேள்வி. 'சுட்டும்விழி' என்ற ஒரு சஞ்சிகையையே ஒழுங்காக நடாத்தத் தெரியாத யதீந்திரா அரசியல் விமர்சனக் கட்டுரை எழுதுகிற போதே அவரது 'ஆற்றல்' தெரிந்து விட்டது. இந்தக் கேள்வியினூடாக அந்த ஆற்றல் சுக்குநூறாக உடைந்து போயிற்று. 'ராஜதந்திரம்' என்ற சொல் அரசியலில் இருப்பது தெரியாதா? 'எதிரியின் எதிரி நண்பன்' என்ற தோழர் மாவோவின் கூற்று ஒன்றைப் படித்ததில்லையா? எப்பொழுதாயினும் தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற இலட்சியத்தை கைவிட்டிருந்தாரா நமது தேசியத் தலைவர்? எவருக்காகவாவது விட்டுக் கொடுத்தாரா? விற்றுவிட்டாரா? உருக்குப் போன்ற உறுதி, இரும்பு போன்ற இலட்சியம், இடையிடை தேவைப் பட்டது ராஜதந்திரம். அவ்வளவே தான்.

யதீந்திரா, கருணாகரன் போன்ற நாசகார சக்திகளுக்கு 'தீனி' போடுகின்ற எஜமானர்களுக்கு விசுவாசமாக இப்பொழுது குரைக்கிறார்கள். எஜமானர்கள் மாறினால் குரைப்பின் தொனி மாறுபடும். வரலாறு இவர்களை குப்பைக் கூடைக்குள் போட்டுவிடும். இதில் கவலைப்பட ஒன்றும் இல்லை.

- சேயோன்

## 'கற்க கசடற-2012' பரிசளிப்பு விழா



தமிழ் இளையோர் அமைப்பினால் நடாத்தப்பட்ட கற்க கசடற திருக்குறள் தொல்காப்பியம் மற்றும் ஆத்திசூடி போட்டிகள் வெகு சிறப்பாக லண்டனின் நான்கு திசைகளிலும் இடம்பெற்று இறுதிச்சுற்று போட்டிகள் மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வில் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன. அவைகள் கலைக்கூடங்கள், தமிழ் பாடசாலைகள் சார்பாகவும், தமிழ் இளையோர் அமைப்பினராலும் வழங்கப்பட்டிருந்தன.

இறுதிச் சுற்றுப் போட்டியில் பிரதம விருந்திராக புலவர் திரு.சிவநாதன் அய்யா அவர்களுடன் திருமதி. சிவநாதன் அவர்களும் கலந்து கொண்டனர். மற்றும் பல சிறப்பு விருந்தினர்களும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**FEB 28 TUESDAY**

*OFAAL Exam -2012*
*Oriental Fine Arts Academy of London (OFAAL) Exam (April 2012 Examination )*
*விண்ணப்ப முடிவு திகதி : 28-02-2012*
*தொடர்புகளுக்கு: 020 8872 4180*

**MAR 10 SATURDAY**

*Annual Cultural Evening*
*Croydon Academy of Eastern Arts நடாத்தும் கலாசார நிகழ்வுகள்*
*நேரம்: மாலை 06:00 மணி (Door Open - 5.30pm)*
*இடம்: Oasis Academy, Shirley Road, Croydon CR9 7AL*

**MAR 11 SUNDAY**

*A public talk with Sadghuru*
*isha presents Inner Engineering Technologies for wellbeing*
*நேரம்: காலை 11:00 மணி முதல்*
*இடம்: Troxy, 490 Commercial Road, London, E1 0HX*
*தொடர்புகளுக்கு: +44 (0) 776 556 7347*


**MAR 17 SATURDAY**

*வசந்தம்-2012*
*Kokkuvil Hindu College Old Students' Association (UK) நடாத்தும் வசந்தம்-2012*
*இடம்: Isleworth & Syon School, ridgeway Road, Isleworth, TW7 5LJ*
*தொடர்புகளுக்கு: 07841522514, 07824333507 , 07740088103*

**MAR 18 SUNDAY**

*நாவன்மைப் போட்டி*
*இலண்டன் தமிழ் நிலையம் நடாத்தும் தமிழ்ப் பாடசாலைகளுக்கிடையிலான நாவன்மைப் போட்டி*
*இடம்: Wembley High School, East Lane, Wembley, Middlesex, HA0 3NT*
*தொடர்புகளுக்கு: 07720046582*

# OBITUARY



Late
**Clement Dharmapalan Arnold**
(Jaffna – Manipay)

*March 31, 1932 - February 12, 2012*

Late

## Clement Dharmapalan Arnold

Clement D Arnold passed away peacefully, aged 79, in London. He is the son of Late Eurotus Arasaratnam Arnold and Late Emily Pavalam Arnold of Manipay. Husband of Anna and Father of Noel and Joel. Father-In-Law of Anchal and Grand Father of Sol and Jye, all of UK. Brother of Samuel, Rosamalar Mather, (Late) Joel, Ranee Rajendra, Stanley, Beatrice Sigamony, Edward, (Late) Irene Devendra, Gladys David, Chandrapalan and Sarojini Joseph.

Viewing and service on Saturday 25th February at Christ Church, Southgate, London at 9.00am, cremation at Golders Green Crematorium at 11.00am and fellowship lunch at 12.30pm at Anandan Arnold's residence.

**Contact details:** (Sons)

Joel 07961 804640 arnoldjs@gmail.com

Noel 07731 742431 noelarnold@gmail.com

23 Hollickwood Avenue, North Finchley, London N12 0LS

# பயணம்.......

சாத்திரி
(ஒரு பேப்பர்)

## பாகம்–13

1983 ம் ஆண்டின் இறுதியில் யாழ்பல்கலைக் கழகத்தில் மதி(மதிவதனி), அனோஜா,ஜெயா, லலிதா என நான்கு பல்கலைக்கழக மாணவிகள் இலங்கையரசின் அடக்குமுறைகளிற் கெதிராக உண்ணாவிரதப்போராட்டம் ஒன்றினை ஆரம்பிக்கின்றனனர்.

இலங்கையரசிற்கெதிராக எந்த அமைதியான எந்த சாத்வீகப்போராட்டமும் பிரயேசனமற்றது. ஆயுதப்போராட்டமே அவர்களிற்கான சரியான வழி எனவே உண்ணாவிரதத்தினை கைவிடும்படி புலிகள் அமைப்பால் அந்த மாணவிகளிடம் கோரிக்கை வைக்கப்படுகின்றது அதனை அவர்கள் மறுத்து உண்ணாவிரதத்தினை தொடர்ந்தபொழுது புலிகள் அமைப்பின் மூத்த போராளிகளில் ஒருவரான அருணா மேலும் இருவருடன் இணைந்து அவர்கள் நான்கு பெண்களையும் கடத்தி தமிழ்நாட்டிற்கு கொண்டு செல்கிறார்.

**...நீங்கள் எங்கடை மக்களுக்காவும் எங்கடை மண்ணை மீட்கவும்தான் போராட வந்தனீங்கள் எண்டிறது உண்மையெண்டால் இடையிலை பிரபாகரன் கலியணம் கட்டுறது பொன்னம்மான் இயக்கத்தை விட்டிட்டு போறது எண்டதெல்லாம் ஒரு காரணமே இல்லை. நீங்கள் உங்கடை இலட்சியத்திற்காக தொடர்ந்து போராடவேணும்....**

இவர்கள் தமிழ் நாட்டில் தங்க வைக்கப்பட்டிருந்த நேரம்,84 ம் ஆண்டளவில் அந்த நான்கு பேர் கொண்ட குழுவிலிருந்த மதிக்கும் பிரபாகரனிற்கும் காதல் என்கிற செய்தி அடிபடத் தொடங்கியிருந்தது.. ஆனால் அது வதந்தியாகவே இருக்கும் என புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் பலரும் நம்பினார்கள். காரணம் புலிகள் அமைப்பில் முன்னர் தலைவராக இருந்த உமாமகேஸ்வரன் அந்த அமைப்பின் உறுப்பிரான ஊர்மிளாவுடன் காதல் தொடர்பு ஏற்பட்ட காரணத்தினாலேயே புலிகளின் மத்திய குழுவைக்கூட்டி பிரபாகரன் உமாவை வெளியேற்றியிருந்தார்.

உமாவுடன் வேறு சிலரும் வெளியேற புலிகள் அமைப்பு சிதைவுபட்டு மீண்டும் ஒரு கட்டமைப்பாக உருவாகியிருந்தது. அந்த சம்பவத்திற்கு பின்னர் புலிகள் அமைப்பின் தலைமைப்பதவியை ஏற்ற பிரபாகரன் புலிகள் அமைப்பில் இணைபவர்கள் காதல் மற்றும் திருமண பந்தத்தில் இணையக்கூடாது அது புலிகளின் இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் தடையாக அமையும். எனவே அப்படி யாராவது காதலித்து திருமணம் செய்ய விரும்பினால் அமைப்பிலிருந்து வெளியேறி விடவேண்டும் என்கிறதொரு கடுமையான விதிமுறையையும் அறிமுகம் செய்திருந்தார். அதன் காரணமாக புலிகள் அமைப்பில் இணைந்த பலர் தங்கள் காதல்களை உதறிவிட்டு வந்த சம்பவங்களும் உண்டு. இப்படியான ஒரு விதிமுறையை ஏற்படுத்திய பிரபாகரனே காதலிப்பார் என்று புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் நம்பவில்லை. ஆனால் பிரபாகரன் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்ததும் புலிகள் அமைப்பின் மூத்த போராளிகள் மற்றும் மத்திய குழு உறுப்பினர்களை அழைத்து பாலா அண்ணர் கதைத்து சமாதானப்படுத்தியிருந்தார்.

ஆனால் 84 ம் ஆண்டு புலிகள் இயக்கமானது அடுத்த கட்டவளர்ச்சிக்குள் சென்று விட்டிருந்தது.

பலநூறு போராளிகள் உள்வாங்கப்பட்டு இந்தியாவிலும் இலங்கை வடக்கு கிழக்கிலும் பல பயிற்சி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு பயிற்சிகள் நடந்துகொண்டிருந்ததுமட்டுமல்லாமல் பலநூறுபேர் பயிற்சிகளை முடித்து புதிய முகாம்களை அமைத்துக்கொண்டு தங்கள் பணிகளை ஆரம்பித்திருந்தனர். பிரபாகரனின் திருமண விடயத்தில் மத்திய குழுவில் இருந்தவர்களை விட இரண்டாம் கட்டபொறுப்பாளர்கள் மற்றும் பின்னர் இணைந்த போராளிகளிடமே பெரும் எதிர்ப்புக்கிளம்பியிருந்தது.காரணம் அவர்கள் இயக்கத்தின் புதிய விதிகளிற்கு கட்டுப்பட்டு இயக்கத்தில் இணைந்திருந்தனர்.

அதே நேரம் மத்திய குழுவில் குலம், கிட்டு, காக்கா போன்றவர்கள் எதிர்ப்பு அணியிலும். இன்றைய புலம்பெயர் ஊடகங்களில் சர்ச்சைக்குரியவராக கருதப்படும் கே.பி, பேபி, சுப்பிரமணியம்,ராகவன் ஆதரவு அணியிலும் மற்றையவர்கள் அமைதியாகவும் இருந்தனர். ஆனாலும் மத்திய குழுவினரிற்கு புலிகள் இயக்கம் மீண்டும் ஒரு உடைவை சந்திக்கக்கூடாதென்பதே அவர்களது கவலையாகவும் ஆதங்கமாகவும் இருந்தது. அதேநேரம் உறுப்பினர்களிடம் விவாதங்கள் போய்க் கொண்டிருந்தது புதிய விதியின் படி பிரபாகரனை தலைவர் பதவியிலிருந்து நீங்கினால் புதியதலைவராக யாரை நியமிக்கலாம் என்பதே, அதில் முதன்மையாக ராகவன், மாத்தையா, பண்டிதர் என ஆராயப்பட்டது. பெரும்பாலனவர்கள் ராகவனையே முன்மொழிந்தனர். ஆனாலும் யாரும் ஒரு முடிவிற்கும் வரவில்லை. மத்திய குழு உறுப்பினர்களை பாலா அண்ணர் கதைத்து சமாதானப்படுத்தியபின்னர். அடுத்தகட்ட பொறுப்பாளர்கள் போராளிகளை சமாதானப்படுத்துவது பிரபாகரனிற்கு பெரும் பிரச்சனையாக இருந்தது.

அவர்களை சமாதானப்படுத்த பாலசிங்கத்தாரை அனுப்பமுடியாது காரணம் வேகம் மட்டுமே கொண்ட இளையவர் கூட்டம் அவர்களிற்கு அதிகமாகக் கதைத்தாலே அறிவுரைகளோ பிடிக்காது. எனவேதான் மிக தந்திரமான முறையில் இந்தியாவில் தங்கியிருந்தவர்களை சமாதானப்படுத்த பொன்னம்மானையும் நாட்டில் உள்ளவர்களை சமாதானப்படுத்த பண்டிதரையும் அனுப்பி வைத்தார். இவர்கள் இருவரைப் பற்றியும் அவர்களுடன் பழகியவர்களிற்கே நன்றாக தெரியும். இவர்கள் புலிகள் அமைப்பில் இருந்த போராளிகளிற்கு தாயைப் போன்றவர்கள்.

ஆரம்பகாலங்களில் பெரியளவு பொருளாதார வசதிகளற்றிருந்த இயக்கத்தில் இவர்களது பொறுப்பில் இருந்த முகாம்களில் அனைத்து போராளிகளும் சாப்பாடு.உடைகள் மருத்துவம் என எந்தக் குறைகளும் இல்லாமலும் சிக்கனமாகக் கவனித்துக்கொள்வார்கள். மற்றையவர்கள் உணவுப்பொருட்களை வீணாக்கி விடுவார்கள் என்பதால் பெரும்பாலும் இவர்களே சமைப்பார்கள்.பழகுவதற்கும் இனிமையானவர்கள் எனவே இவர்கள் பேச்சை மற்றையவர்கள் நிராகரிக்கமாட்டார்கள் எனபதும் பிரபாகரனிற்கு நன்றாகவே தெரியும். நான் அப்பொழுது எனது பயிற்சிகளை முடித்துவிட்டு நாட்டிற்கு போய்விட்டு மீண்டும் ஜொனி தலைமையில் ஒரு சிறப்புப் பயிற்சிக்காக செல்வதற்காக தமிழ்நாட்டில் நின்றிருந்தேன். இந்த திருமண விடயம் கேள்விப்பட்டபொழுது அதன் எதிர்ப்புக்குழுவில் நானும் முக்கியமானவனாகியிருந்தேன். பயிற்சி முகாம்களில் இருந்தவர்களை சந்தித்து சமாதானப்படுத்திய பொன்னம்மான் எம்மை சந்திக்க வருவதாக தகவல் அனுப்பியிருந்தார். வரசளவாக்கத்தில் ஒதுக்குப்புறமாக இருந்த பெரிய வீடொன்றில் அன்றிரவு அடுத்த கட்ட நிலையிலிருந்த முக்கியமான போராளிகள் நாற்பது பேரிற்கு மேல் கூடியிருந்தோம். தன்னுடன் வந்த மெய்பாதுகாவலர் இருவரையும் வெளியே தூரத்தில் நிறுத்திவிட்டு கையில் ஒரு ரேப்றைக்கோடரோடு பொன்னம்மான் தனியாக உள்ளே வந்தவர் சிரித்த படி என்ன பெடியள் எப்பிடி இருக்கிறீங்கள் என்றார். எல்லோரிடமும் இறுக்கமான மௌனம். கொஞ்சம் வார்த்தைகள் தவறாக வந்து விழுந்தாலே பெரியபிரச்சனையாகிப் போகும் நிலமை எல்லோரையும் ஒருதடைவை ஊடுருவிப் பார்த்தார். சிலர் அவரது ஊடுருவல் பார்வையை தவிர்ப்பதற்காக தலையை குனிந்து கொண்டனர். சில செக்கன் மொனம்...இஞ்சை பிரபாகரனிற்காக பிரபாகரனை மட்டுமே நம்பி போராட வந்தவையள் கையை தூக்குங்கோ என்றுவிட்டு எல்லோலையும் பார்த்தார்.

எவருமே கையைத்தூக்கவில்லை அனைவரிடமும் அந்த கேள்வி வந்த ஒரு செக்கனில் இறுக்கத்தை குறைந்திருந்தது. எனக்கு அருகில் நின்றிருந்த கலீசம்மான் எனது காதில் '...பொன்னன் கவித்திட்டான்ரா' என்று கிசுகிசுத்தான். அதை கவனித்த பொன்னம்மான் கலிசை தனக்கு பக்கத்தில் கூப்பிட்டு சொல்லுறதை எல்லாருக்கும் கேக்கிறமாதிரி சொல்லு என்றார். கலிசும் சத்தமாக நாங்கள் அண்ணைக்காக போராட வரேல்லை மக்களுக்காகத்தான் போராட வந்தனாங்கள் என்றான். பிறகென்ன பிரச்சனை முடிஞ்சுது இதுக்குப்போய் ஏன் இவ்வளவு ரென்சனாய் இருக்கிறீங்கள். நீங்கள் எங்கடை மக்களுக்காவும் எங்கடை மண்ணை மீட்கவும்தான் போராட வந்தனீங்கள் எண்டிறது உண்மையெண்டால் இடையிலை பிரபாகரன் கலியணம் கட்டுறது பொன்னம்மான் இயக்கத்தை விட்டிட்டு போறது எண்டதெல்லாம் ஒரு காரணமே இல்லை.நீங்கள் உங்கடை இலட்சியத்திற்காக தொடர்ந்து போராடவேணும் என்று விட்டு கையில் கொண்டு வந்திருந்த ரேப்றைக் கோடரில் இருந்த 3 நிமிடம் அளவிலான பிரபாகரனின் உரையை போட்டுக்காட்டினார்.

அதில் தான் திருமணம் செய்து கொளவதனால் தமிழீழம் என்கிற இலட்சிய போராட்டத்திற்கான பாதையில் இருந்து எந்தக்காலத்திலும் விலகிவிடப்போவதில்லையென்றும். அப்படி தமிழீழ இலட்சியப்பாதையில் இருந்து விலகி தமிழீழ இலட்சியத்தை கைவிட்டால் உங்களில் ஒரு போராளி என்னை சுட்டுக் கொன்று விட்டு போராட்டத்தை தொடரலாம் என்கிற பின் நாளில் பிரபலமான வசனம் அந்தத் தருணத்தில் தான் செல்லப்பட்டிருந்தது. சிலவேளை தமிழீழத்தை கைவிட்டுவிட்டு மாகாணசபையையோ. வேறு ஏதாவது ஒரு தீர்வை பிரபாகரன் ஏற்றிருந்தாலும் யாரோ ஒரு புலிப்போராளியின் குண்டென்று பிரபாகரனின் உயிரை குடித்திருக்கலாம். எனவேதான் பிரபாகரன் தனது கொள்கைகளில் ஒன்றை கைவிட்டாலும் மற்றொன்றில் இறுதிவரை உறுதியாக இருந்திருந்தார்.. அந்த ஒலிப்பதிவு முடிந்ததும் தங்களிற்கு இந்த சமாதானம் எல்லாம் வேண்டாம்.நாங்களும் காதலை கைவிட்டிட்டுத்தான் இயக்கத்திற்கு வந்தனாங்கள் என இருவர் மட்டுமே தாங்கள் இயக்கத்தை விட்டு போவதாக அடம்பிடித்தனர். அதில் ஒருவர் ஜெர்மனியிலிருந்து இயக்கத்திற்கு வந்திருந்தவர். போகிறவர்கள் எழுதித் தந்து விட்டு போகலாம். என்றவர்.தம்பி உங்களையெல்லாம் விரைவிலை சந்திப்பார் அதுவரை உங்களின்ரை வேலையளை தொடர்ந்து செய்யுங்கோ என்று விட்டு பொன்னமமான் போய் விட்டார். பின்னர் 1984ம் ஆண்டு ஜப்பசி மாதம் பிரபாகரனிற்கும் மதிக்குமான " திருமணத்தினை போருர் கோயில் ஒன்றில் எளிமையாக கே.பி முன்நின்று நடத்திவைத்திருந்தார்.

**சில வேளை தமிழீழத்தை கைவிட்டுவிட்டு மாகாண சபையையோ. வேறு ஏதாவது ஒரு தீர்வை ஏற்றிருந்தாலும் யாரோ ஒரு புலிப்போராளியின் குண்டென்று அவரின் உயிரை குடித்திருக்கலாம். எனவேதான் தனது கொள்கைகளில் ஒன்றை கைவிட்டாலும் மற்றொன்றில் இறுதிவரை உறுதியாக இருந்திருந்தார்**

இதனை நான் இங்கு எழுதியதன் காரணம் பிரபாகரன் இல்லாது போனதாலேயோ புலிகள் இயக்கம் அழிந்துபோனதாலேயோ. அந்த மக்களின் போராட்டமானது முடிந்துவிட்தாகவே பொதுவான புலம்பெயர் மக்கள் கருதுகின்றனர். ஈழத்தமிழர் லரலாற்றில் புலிகள் பல அத்தியாயங்களை மட்டுமே எழுதியவர்கள். ஆனால் ஈழத்தில் தமிழர்களிற்கான வாழ்வாதார பிரச்சனைகள் இருக்குமட்டும் போராட்டம் ஏதாவது ஒரு வடிவத்தில் தொடர்ந்துகொண்டேதானிருக்கும். அந்தப்போராட்டத்தில் தியாகிதுரோகிஎன்கிற பதங்கங்கள் என்னைப்பாதிக்காது எனது உயிர் இருக்கும்வரை என்னுடைய பயணமும் பங்களிப்பும் இருந்துகொண்டேதானிருக்கும். ஏனெனில் நான் பிரபாகரனிற்காக போராடப் போனவனல்ல...

*பயணம் நிறைவடைந்தது*

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை
தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா



# ஏனிந்தப் போட்டி

உத்தியோகம் புருஷலட்சணம். தொழில் செய்யாத எந்த ஒரு ஆண்மகனையும், குடும்பத்திலும் சரி, சமூகத்திலும் சரி எவரும் மதிப்பதில்லை. அதற்காக கண்டகண்ட தொழிலை எல்லாம் செய்யலாமா என்று ஏளனம் செய்பவர்களும் உண்டு. அந்தக் கதையெல்லாம் ஊரோடு போச்சு. புலம்பெயர்ந்த நாடுகளில், படித்தவர்கள், பட்டம் பெற்றவர்களெல்லாம் எரிபொருள் நிலையங்களிலும், மதுவிற்பனைக் கடைகளிலும், சுவையூட்டும் உணவகங்களிலும், பாதுகாவல் பிரிவிலும், சாரதிகளாகவும் கிடைத்த வேலையை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு, அதில் கிடைக்கும் வருமானத்துடன் திருப்தியடைவதை பார்க்கவும், கேட்கவும் முடிகிறது.

சமீபகாலமாக தமிழர்கள் மத்தியில் சில பல முன்னேற்றங்களைக் காண புதிது புதிதாக வெளிவரும் விளம்பரங்கள் நம்பிக்கையூட்டுகின்றன. கட்டிடக் கலைகளில், கார் விற்பனைகளில், பொறியியல் துறைகளில், கல்விக் கூடங்களில், விற்பனை நிலையங்களில், விளையாட்டுத் துறைகளில் புலம்பெயர் தமிழர்களின் முன்னேற்றம் பிரகாசிப்பதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

எல்லாம் சரிதான். ஒருவர் நகைக்கடை ஆரம்பித்தால் இன்னொருவர் அதற்குப் பக்கத்தில் இன்னுமொரு நகைக்கடை. ஒருவர் புடைவைக்கடை திறந்தால் இன்னும் பலர் அதே தொழில். இப்படியே ஏட்டிக்குப் போட்டியாக ஒவ்வொருத்தரும் ஆரம்பிக்கும் தொழில் இன்னுமொரு தமிழரை பாதிக்கும்படியாகத் தொடங்கப்படுகின்றன என்பதே என்னுடன் தொடர்பு கொள்ளும் நண்பர்களின் ஆதங்கம்.

சமீபத்தில் தொலைக்காட்சி சம்பந்தமான தொழில்நுட்ப வல்லுநர்கள் இருவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் ஈடுபட்டிருக்கும் தொழில்துறையில் மிகவும் அனுபவசாலிகளாகக் காணப்பட்டார்கள். அவர்களுடைய திறமையைப் பாராட்டிய அதேசமயம் அவர்கள் வாங்கும் கூலியைக் கேட்டபோது மிகவும் அசந்துவிட்டேன். அவர்கள் கையாண்ட அதே வேலைக்கு ஒரு பிரபலமான தொழில் நிறுவனம் நிச்சயம் மூன்று மடங்கு அதிக கூலியை அறவிடுவதோடு, மேலதிகமாக Call out charges என்று கூட வாங்குவது தான் இங்குள்ள தொழில் முறை.

இந்தமாதிரி தொழில்நுட்பம் தெரிந்தவர்கள், அவ்வாறு நிறுவனங்களை ஆரம்பித்து இங்குள்ள ஸ்தாபனங்களுடன் சரிநிகர் சமானமாகத் தொழில் செய்ய ஏன் இயலாதென அவர்களிடம் வினவியபோது, நாங்கள் 40 பவுண்கள் கூலியாகக் கேட்டால், எங்களைப் போன்று தொழில் தெரிந்த தமிழர்கள் 30 பவுண்கள் தந்தால் போதுமென்பார்கள். இதனால் தான் எங்களால் முன்னேற முடியவில்லை என்று அவர்கள் கூறியபோது, தமிழர்கள் மத்தியில்தான் போட்டியே ஒழிய வேறு எவரோடும் இல்லையென்று, இந்த மரமண்டைக்கு அப்போதுதான் புரிந்தது.

# போலி நாணயங்களின் புழக்கம்

நோட்டைக் கொடுத்து சில்லறை வாங்கும் போது கைகள் நடுங்காமல் என்னதான் செய்யும். 43 கோடி போலி பவுண் நாணயங்கள் தற்சமயம் புழக்கத்திலிருப்பதாக, வெகு சமீபத்தில் கிடைத்த செய்திகள் கூறுகின்றன. 1282ம் ஆண்டு தொடக்கம், றோயல் மின்ரினால் (Royal Mint) புழக்கத்திற்கு விடப்படும் பவுண் நாணயம், அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தின் பிரகாரம், சரியான எடையைக் கொண்டதாகவும், குறுக்களவு முறையாக இருக்கவும் ஊர்ஜிதம் செய்யப்படுவது நடைமுறையாகும். இவ்வாறு பரிசோதனை செய்யும்போது ஒவ்வொரு வருடமும், போலி நாணயங்களின் புழக்கம் அதிகரித்துவருவதை அவதானித்துள்ளனர்.

பிரித்தானியாவின் சட்டத்தின் பிரகாரம் போலி நாணயத்தை ஒருவர் தன்வசம் வைத்திருப்பதும், அதை இன்னுமொருவருக்கு கையளிப்பதும் பாரதூரமான குற்றமாகக் கருதப்படும். அதனால், கையில் வைத்திருக்கும் பவுண் நாணயம் உண்மையானதா அல்லது போலியானதா என்று கண்டுகொள்வது இயலக்கூடிய காரியமா என்ன? புழக்கத்திலிருக்கும் 36 பவுண் நாணயங்களில் ஒன்று நிச்சயம் போலியாக இருக்கு Stagecoach என்ற பிரபலமான நிறுவனம் ஒரு பெரிய குண்டைத் தூக்கிப் போடுகிறது.

2003-04 ஆண்டு கிடைக்கப்பட்ட அறிக்கையின்படி 85,000 பவுண் போலி நாணயங்களை றோயல் மின்ற் அழித்துவிட்டதாகவும், ஐந்து வருடங்களுக்குப் பின்னர் இந்த எண்ணிக்கை 1 கோடியாக உயர்ந்துவிட்டதாகவும், கடந்த வருட முடிவில் 2 கோடி நாணயங்களை அழித்துவிட்டதாக அறிக்கைகள் கிடைத்துள்ளன. இந்த நிலைமை நீடித்தால் புழக்கத்திலுள்ள நாணயங்களை மீளப்பெற்று, புதிய வடிவிலான நாணயங்களை வெளியிட வேண்டியது, நாணயத்தின் பெறுமதியையும், நம்பிக்கையையும் உறுதிப்படுத்தும் செயலாக எண்ணப்படுகிறது.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

போலி நாணயங்களை கண்டுபிடிப்பதில் பொதுமக்களுக்கு அதிக சிரமத்தை உண்டு பண்ணாமல் நம்பிக்கையான நாணயங்களை புழக்கத்தில் விடுவதே நல்லதென நலன்விரும்பிகள் குரல் எழுப்புகின்றனர். எதற்கும் கையில் கிடைக்கும் பவுண்களை பார்த்து பார்த்து வாங்குவது நல்லதல்லவா!

# விமானத்தில் யன்னலோர இருக்கையைத் தவிர்க்க வேண்டியவர்கள்

ஆகாயவிமானப் பயணங்கள் சர்வசாதாரணமாகிவிட்ட இந்த காலகட்டத்தில் தூரப்பயணங்களை மேற்கொள்பவர்கள், அனேகமாக யன்னலோர இருக்கைகளை முன்கூட்டியே பதிவு செய்வது வழக்கம். விமானம் மேல் எழுந்து ஆகாயத்தில் குறைந்தது 35,000 மைல்கள் உயரத்தில் பயணம் செய்யும்போது, யன்னல்கள் அத்தனையையும் மூடிவிடுவது விமான சிப்பந்திகளின் கடமை. அதன் பின்னர், விமானம் தரையில் இறங்கும்போதுதான் யன்னல்கள் திறக்கப்படும். இது இப்படி இருக்க, யன்னலோர இருக்கைகளுக்கு ஏன்தான் முண்டியடித்து முன்பதிவு செய்தோமென்ற ஒரு ஏமாற்றம் வரத்தான் செய்யும். அதுபோகட்டும் சமீபத்தில் கிடைத்த ஒரு முக்கிய செய்தியின்படி, யன்னலோர இருக்கைகள் உடல்நலம் குன்றிய சில பயணிகளுக்கு கூடவே கூடாதென எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இருதயம் சம்பந்தமான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்க மருத்துவக்கல்லூரி வயது முதிர்ந்தவர்கள், கர்ப்பிணிகள், கருத்தடை மாத்திரைகளை உட்கொள்பவர்கள், நீண்டதூரத்துக்கு விமானத்தில் பயணம் செய்யும்போது, யன்னலோர இருக்கைகளை உபயோகித்தால், இவர்களுடைய இரத்த ஓட்டத்தில் மாறுதல்கள் உண்டாகி, Deep Vein Thrombosis (DVT) என்ற உடல்நலக்கெடுதல் வர ஏதுவாக அமைந்துவிடுமென்று ஆதாரபூர்வமாக அறிவித்துள்ளனர். இந்த நிலைமை சாதாரண வகுப்பு பிரயாணிகளை மட்டுமல்ல, விசேட வகுப்பு பயணிகளையும் பாதிக்கச் செய்யுமென கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

உடல் சம்பந்தமான ரண சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட சில நாட்களிலோ இரத்த அழுத்த குறைபாடுகள் காரணமாக அவதிப்படுபவர்களோ, பரம்பரையாக குடும்பத்தில் இரத்தக் கட்டியினால் பாதிக்கப்படும் குடும்பத்தைச் சார்ந்தவர்களோ விமானத்தில் யன்னலோர இருக்கையைத் தவிர்ப்பது புத்திசாலித்தனமென ஒன்ராறியோவைத் (Ontario) தளமாகக் கொண்டு இயங்கும் Mc Master பல்கலைக் கழகத்தின் வைத்திய கலாநிதி Dr.Mark Crowther பரிந்துரைக்கிறார்.

8 மணித்தியாலங்களுக்கு மேலாக, விமானத்தில் பயணம் செய்பவர்கள் மேற்கூறிய சுகாதாரக் குறைபாடுகள் இருப்பின், விமானத்தின் நடுப்பகுதியில் அமர்ந்து பயணம் செய்வதோடு, இடையிடையே எழுந்து நடக்கவும், கால்களின் பாதங்களை அடிக்கடி அசைத்துக் கொண்டால், உடல் நலம் நன்கு பேணப்படுமென்று ஆலோசனை தரப்பட்டுள்ளது. எனவே, யன்னலோர இருக்கைகளுக்கு இனிமேல் கிராக்கி இருக்காது என நம்பலாமா!


Language Line services



**Freelance Face to Face Tamil Interpreters Required**

Job Reference: OPDT001

**Language Line Services are currently recruiting!**

We are a market leading interpreting agency in the UK and currently have openings for freelance Face to Face Tamil interpreters to join our team and share in our success.

**Benefits of interpreting with us include:**

- An ever growing client base
- Excellent communication and support with our friendly team
- Remote Training

**In return we require our interpreters to:**

- Excel at customer service
- Have ongoing access to the internet and e-mail
- Be able to provide an accurate, confidential and impartial service
- Be eligible to be self-employed in the United Kingdom

**Apply Online:**

www.languageline.co.uk/page/careers
Select Apply today underneath 'Interpreter Careers'

**Email updated CV quoting job reference number in subject heading:**

lr.recruitment@languageline.co.uk

**Call our Recruitment Team for more details:**

0845 602 7769 (select option 2)


www.languageline.co.uk

Perma Shipping
பிரேமா விமான, கப்பல் பொதி சேவை
யாழ், வன்னி, வவுனியா, மன்னார், மட்டகளப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவான சேவை!
Air Freight World Wide
Collection, Packing & Crating
Urgent, Documents, Parcels Door Delivery
Customs Clearance By Sea/Air
Delivery to anywhere in Srilankaó
உங்களின் பொருட்களை இங்கு வந்து பொதி செய்து கொள்ளலாம். உங்கள் இல்லம் வந்து பெற்று அனுப்பும் சேவையும் உண்டு.
தொடர்புகளுக்கு : சிவம் (Sivam)
G14, Big Yellow,
1-3 Wyvern Industriial Estates,
Beverely Way, New Malden, Surrey KT3 4PH
Tel: 02086465222 Mob: 07939550397
Email: info@permainternational.co.uk
Web: www.permainternational.co.uk

வெளிவருகிறது!
தமிழ் ஓலைகள் 2012
வழமைபோல் தமிழ் புத்தாண்டு அன்று தமிழ் ஓலைகளின் 19வது பதிப்பு வெளிவருகிறது. தங்கள் விபரங்கள், விளம்பரங்களை இணைக்க விரும்புவோர் தயவுசெய்து உடனடியாக தொலைபேசி, தொலைநகல், தபால் அல்லது மின்அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.
தொடர்புகளுக்கு
020 8543 2126 / 01792 202 682 / 020 8942 8745
Mobile: 0771 800 3838 / 07986 429 848 / 0771 800 3839
52 Kingsley Road, Wimbledon, London SW19 8HF
Fax: 020 8540 3442
email:editor@tamilpages.com web:www.tamilpages.com
தமிழரின் சேவைக்கு தமிழ் ஓலைகள்

# சந்தனத்தின் நறுமணம்....

பழைய காலத்திலிருந்தே சந்தனம் பல சிறப்புத் தன்மைகளடங்கிய இயற்கையான பொருள் என நம்பப்பட்டு வந்துள்ளது.



நூற்றுக்கணக்கான வருடங்களாக ஒரு அழகு சாதனப் பொருளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சந்தனத்தின் சுகந்தமும், மனச்சாந்தியை ஏற்படுத்தித் தூய்மைப்படுத்தும் தன்மையும் 21ம் நூற்றாண்டின் வாழ்க்கை முறைக்கு ஏற்றதென மிகவும் வரவேற்கப்பட வேண்டியதொன்று.

பாடல்களிலும் இலக்கியங்களிலும் இதன் சுகந்தவாசனை புகழப்பட்டதுடன், இதன் எண்ணெய் மிகவும் விலையுயர்ந்ததும் எல்லோராலும் விரும்பப்படுவது மான ஒரு பொருளாகும்.

சந்தனத்தின் உலகளாவிய புகழ் அதன் நோய் தீர்க்கும் தன்மைக்காகவும், பாதுகாப்பானதெனவும் எல்லோராலும் விரும்பப்படும் ஒரு பொருளாகியது. கடந்த 5 வருடங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட எமது விடாமுயற்சியும், ஆராய்ச்சியும் எமது தனித்துவமுள்ள அயூரி (Ayuuri) என்னும் அழகுசாதனப் பொருட்களை உருவாக்கியுள்ளது.

தற்கால வாழ்க்கை முறைகளினால் ஏற்படும் தீங்குகளிலிருந்து பாதுகாப்பதற்கென பழமை பொருந்திய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட அயூரியின் அழகுப் பொருட்கள் தலைமயிர், உடல், சருமம் ஆகியவற்றிற்கு சத்தூட்டி, பாதுகாப்பையும் புத்துணர்வையும் அளிக்கிறது. பரவலான கருத்துக்கணிப்பிலிருந்து அறிந்தபடி இதனுள் அடங்கிய பொருட்களின் விகிதாசாரம், விளைவுகள், சுகந்தம் ஆகியவை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. எமது சுகந்தரும் சந்தனப் பொருட்கள், அவற்றில் அடங்கியுள்ள சுகந்தத்தை வெளிப்படுத்தி ஒரு புது அனுபவத்தை அளிக்கிறது. நாம் இந்தியாவில் இருந்து பெறப்படும் நறுமணம் தரும், ஆற்றல் கூடிய சந்தனப் பொருட்களையே எமது தயாரிப்புகளில் உபயோகிக்கிறோம். எமது நறுமணப் பொருட்களிலிருந்து எண்ணெய் வரையிலானவை சருமத்திற்கு இதத்தையும், மெதுமையையும், தெளிவையும் அளிக்கிறது. நித்திரை அற்றவர்களும், மனஅழுத்தம் உள்ளவர்களும் இவற்றை உபயோகிப்பதன் மூலம் மனநிம்மதியையும், சாந்தநிலையையும் அடைகிறார்கள்.




இப்போது பலசரக்குக் கடைகளிலும், பார்மசிகளிலும், TESCO, ASDA களிலும் கிடைக்கிறது.

FUDCO
184 EALING ROAD
WEMBLEY, MIDDLESEX
LONDON.HA0 4QD

www.ayuuri.com

# நலன் சார் அரசியலும் அரசியல் சார் நலன்களும்.. சுயாதீன விசாரணையை தவிர்க்கும் திருகுதாளங்களும்

*மௌலி*

*(ஒரு பேப்பருக்காக)*

முதலில், எமது நலன்களுடன் இணைந்த மேற்குலகின் அரசியலும், மேற்குலக நலன்களுடன் இணைந்த எமது அரசியலும் என்ற இரு விடயங்களையும் நாம் குழப்பமின்றி புரிந்து கொண்டால் மட்டுமே சுயாதீன சர்வதேச விசாரணை என்ற விடயத்தில் சரியான பாதையில் பயணிக்க முடியும். இவை இரண்டும் ஒன்றல்ல.

இரண்டாவதாக , காய்தல், உவத்தல் இன்றி இந்தியா, சீனா, ரஸ்சியா , மேற்குலகம் உள்ளிட்ட தீர்மானிக்கும் சக்திகளின் தெரிவு தொடர்ப்பாக சமகால, வரலாற்று பின்னணிகளுடன், எதிர்கால மாற்றங்களை கவனத்தில் எடுத்து முடிவுகளை மேற்கொண்டால் மட்டும் சர்வதேச சமூகம் என்ற பேரலையில் அமிழ்ந்து விடாமல் நீந்திக் கரைசேர முடியும்.

மூன்றாவதாக, மிக முக்கியமானதாக எமக்கே உரித்தான குழுநிலைவாத போக்கை தவிர்க்க தவறுவோமாயின், எம்மிடையே உள்ள எல்லா அமைப்புகளுக்குள்ளும் ஊடுருவி இருகின்ற எதிரியின் ஆட்கள் எம்மை பலவீனப்படுத்த வழுநிலை விவாதங்களை (fallacious arguments) முன் வைப்பார்கள்.

மேற்கூறிய மூன்று அம்சங்களையும் மனதில் கொண்டு, இனி சர்வதேச சுயாதீன விசாரனை எப்படி நடக்க வேண்டும் என்பதனைப் பார்ப்போம். இதனைப் பார்க்க வேண்டுமாயின் எமது இலக்குகள் என்ன என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்

எமது இலக்குகள் தான் என்ன?

- தமிழீழத்தில் இனப்படுகொலை நடைபெறுகின்றது என்பதை நிரூபிக்க வேண்டும் .
- தமிழீழம் தான் ஒரே தீர்வு என்பதை நாம் நிறுவ வேண்டும்.

முதலாவது நிறுவப்பட்டால் மட்டுமே இரண்டாவது சாத்தியமாகும். ஜனநாயக வழியில் இவை மட்டுமே எம் முன்னுள்ள தேர்வுகளாகும்.

இறுதியானதும், எமக்கு நேரடியாக எந்த நலனையும் பெற்றுத் தரப்போவதுமல்லாத விடயம் போர்க் குற்றவாளிகளுக்கான தண்டனை என்ற விடயம். (போர் என்ற போர்வையில் அங்கு இனவழிப்புதான் நடந்தது எனவே அங்கு நிகழ்ந்த மானிடத்துக்கு எதிரான குற்றத்தினை நிரூபிப்பது தான் எமக்கு முதன்மையானது )

பனிப் போர் (Cold war) காலத்துக்கு முந்திய நிலைமைகளை, ஆழ்மனக் காயங்களை வைத்து நாம் முடிவுகளை எடுக்க முடியாது. அதுமட்டுமல்லாது இன்று தமிழீழ போராட்ட அரசியலில் முன்னணி வகிப்பவர்கள் , இந்திய ரஷ்சிய பக்கசார்புடைய அறிவு நிலை உடையவர்களாகவும், அந்த ஆழ்மனத் தாக்கத்துக்கு உள்ளானவர்களாகவும் இருக்கின்றோம் என்பதை மறவாது, ஒரு நீதிபதி போல், ஒரு ஜூரிபோல் ஆழ்மன காயங்களின் தாக்கமின்றி தரவுகளின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க வேண்டும் .

இந்த கட்டுரையை எழுதுகின்ற நானும் ஒரு காலத்தில் அதி தீவிர மேற்குலக எதிர்ப்பாளனாகவே இருந்தேன். இந்த கட்டுரையை வாசிக்கின்ற நீங்களும் நானும் ஏன் இந்த மேற்குலகுக்கு வந்தோம்? நீங்கள் எப்படியோ தெரியாது நான் பாதுகாப்புத் தேடியே வந்தேன். ஏன் நாங்கள் கியூபாவுக்கு செல்லவில்லை? ஏன் ரஸ்சியாவுக்கு செல்லவில்லை? ஏன் இந்தியாவுக்கு செல்லவில்லை? ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நாம் செயல்படவேண்டும் எனச்சொல்லும் மார்க்சியவாதி பி.ஏ.காதர் போன்றவர்கள் ஏன் அத்தகைய நாட்டுக்கு வந்தார்கள்? சிறீலங்காவில் ஜனநாயகம் இருக்கின்றது எனக் கூக்குரல் இடுபவர்கள் ஏன் இந்த நாடுகளுக்கு வந்தார்கள்? இந்த கேள்விகளுக்கு எல்லாம் ஒரே ஒரு பதில் தான் உண்டு அதுதான் எந்த மனிதாபிமானமும் அற்று கறுப்பர்களை அடிமைகளாக சங்கிலியால் கட்டிய அமெரிக்காவில் அது ஒழிக்கப்பட்டிருக்கின்றது. அதற்காக அங்கு கறுப்பர்கள் முழுச் சுதந்திரத்துடன் வாழ்கின்றார்கள் என்று சொல்ல வரவில்லை . முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்பதை தான் சொல்ல வருகின்றேன்.

'ஓரளவேனும் சட்டத்துக்கு உட்பட்ட (Rule of Law) விதிமுறைகள் இங்கு தான் ஒப்பீட்டளவில் சிறந்த வடிவில் உள்ளது'. அதனை பற்றி நின்று நாம் எமதினத்தின் விடிவைத் தேட செயல்படவேண்டும். இந்த சட்டத்துக்கு உட்பட்ட வடிவமைப்பு தான் இனப்படுகொலை சட்டமும், போர்க்குற்ற சட்டமும். ஹிட்லரால் படுகொலை செய்யப்பட்ட பல இலட்சம் யூதர்களின் அழிவு ஏற்படுத்திய விழிப்புணர்வால் மேற்குலகால் முன் மொழியப்பட்ட விடயங்கள் இவை. இந்த விசாரணை முறையை முதலில் எதிர்த்த முக்கியமான நாடு ரஷ்சியா என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

யூத இனப்படுகொலைக்காக ஜெர்மனியும், நோர்வேயும் மன்னிப்புக் கோரியதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அண்மைக்காலம் வரை தேசிய இனங்களை அதிக அளவில் அடக்கி வைத்திருந்த நாடுகளாக நாம் நேசித்த ரஷ்சியாவும், யூகோஸ்லாவியாவும் இருந்ததை அறிவோம். இந்தியா என்ற நாடு பிராமணிய வெறியில் சிக்கி இருப்பதையும் அங்கு தேசிய இனங்கள் ஒடுக்கப்படுவதையும் பார்க்கும் பொழுது, மேற்குலகில் இருக்கும் மனித உரிமைப் பொறிமுறைகள் ஒப்பீட்டளவில் சிறந்தே இருக்கின்றன.

விடுதலை அமைப்பின் அனுமதி இன்றி , அமெரிக்காவுக்கு விசுவாசாக இருப்போம் என நிபந்தனை எதுவும் இன்றி கிறிஸ்டினா ரோகாவுக்கு தகவல் அனுப்பிய உருத்திர குமாரன் . இப்பொழுது அரசுகள் நலன்சார் என வார்த்தைகளை அள்ளி வீசி குழப்பி விடுகின்றார். எந்த நாடும் தரும சத்திரம் நடாத்தவில்லை. அரசியல் சார் நலனும், நலன் சார் அரசியலும் என்ற ஆழிப் பேரலையில் நீந்திக் கரை சேர,உலக ஒழுங்கை நிர்ணயிக்கும் ஐக்கிய நாடுகள்சபையின் இனப்படுகொலைச் சட்டமும் அதனை எவர் தூக்கிப் பிடிக்கின்றாரோ அவரே எமக்கு துணை இருக்க முடியும்.

போர்க்குற்றம் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை சிறீலங்கா புரிந்திருப்பது ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழு அறிக்கை தெளிவாக குறிப்பிடுகின்றது .

சுயாதீன விசாரணை நடாத்தப்படுவதும், உலக அரசியல் வாதிகள் மத்தியில் இனப்படுகொலையை உணர வைக்க நாம் நடவடிக்கை எடுப்பதும் இணைந்து நடந்தால் எமது விடுதலை நோக்கி நாம் முன்னோக்கி நகரலாம்.

சுயாதீன சர்வதேச விசாரணை கோரும் பிரித்தானிய மனுவில் கையெழுத்து வைத்தால் மட்டும் உங்கள் கடமை முடியவில்லை அதனை வெற்றி பெற கூடிய வகையில் மற்றவர்களை ஊக்குவித்தலும் அதனைப் பேசுபோருளாக்கும் கடமையும் உண்டு .

பிரித்தானிய மனுவில் கையெழுத்து இடவும்

http://epetitions.direct.gov.uk/petitions/14586

# பரதேசியின்.... பதில்கள்....!

கேள்வி: வணக்கம் பரதேசியாரே புலம்பெயர் தேசத்தில் தமிழ் வானொலிகள் தொலைக்காட்சிகளில் இரவில் அரசியல் அலசல்.சமூகப் பிரச்சனைகள் என்று விவதங்கள் தூள் பறக்கிறது. ரி.விகளிலை வேறை கோட்டு சூட்டு போட்டவர்களெல்லாம் வந்திருந்து ஆய்கிறார்கள். இவையெல்லாம் எத்தனை வீதம் சென்றடைந்திருக்கும்.

*நிரஞ்சன் - ஈஸ்ற்காம்*

பரதேசி : எனக்குத் தெரிந்து புலம்பெயர் வானொலிகள் தொலைக்காட்சி தொடங்கி பதினைந்து ஆண்டுகளிற்கு மேலாகின்றது. இத்தனை வரிசமாய் யாராவது நிகழ்ச்சியில் பங்குபற்ற தொலைபேசியடித்தால் நிகழ்ச்சி நடத்துபவர் திரும்ப திரும்ப சொல்லும் விடயம் உங்கள் தொலைக்காட்சியின் அல்லது வானலையின் சத்தத்தை குறையுங்கள் என்கிற வசனம்தான். பதினைஞ்சு வருசத்துக்கு மேலாக இந்த ஒரு கருத்தே மக்களை சென்றடையவில்லையே இவர்கள் மணிக்ககணக்காய் செய்கிற அலசலா அவர்களை சென்றடையப் போகின்றது.

☠ ☠ ☠

கேள்வி: இந்தத் தடைவையாவது இலங்கை மீதான போர்குற்ற விசாரணையை மேற்கொள்ளும் தீர்மானம் ஜ.நாவில் கொண்டுவரப்படுமா?

*தீபன் - வெம்பிளி*

பரதேசி : வரும் ஆனால் வராது அவ்.........................

☠ ☠ ☠

கேள்வி: சாத்திரங்களில் எவ்வளவோ இருந்தாலும் கல்லுச்சாத்திரம்தான் சிறந்தது என்று பலர் கூறுகின்றனர். அதாவது நீலக்கல் மோதிரம் போட்டால் நன்மை கிடைக்கும் என்கின்ற மாதிரி. உங்களுக்கு கல்லுச்சாத்திரம் பற்றி ஏதாவது தெரிந்தால் இதற்குப் பதில் கூறவும். நான் திருமணம் முடித்து 20 வருடங்கள் ஆகின்றன. முதல் 3 வருடங்களின் பிறகு 15 வருடங்களாக மனைவியின் தொல்லை தாங்க முடியவில்லை. இருந்தால் அடி, நின்றால் உதை என்று தாங்கொணாத கொடுமை செய்கிறாள். பிள்ளைகளையும் சரிவரப் பராமரிப்பதில்லை. அவளை என்ன செய்வது என்று தெரியாமல் முழிபிதுங்குகிறேன். நான் என்ன கல்லைப் பயன்படுத்தினால் அவளது கொடுமையிலிருந்து நிவாரணம் கிடைக்கும்? சொல்லுங்கள் பரதேசியாரே?.

*பெயர் எதற்கு - ஈஸ்ற்காம்*

பரதேசி : உமக்குப் பொருத்தமான கல் அம்மிக் கல். அதனை நீர் போடக் கூடாது. அதாவது நீர் அணியக் கூடாது. உமது பாரியார் நித்திரையாக இருக்கும் சமயம் பார்த்து அவரது தலையில் அம்மிக் கல்லைப் போடவும். அதுவே உமக்கான சகலரோக நிவாரணி

☠ ☠ ☠

கேள்வி: பரதேசியாரே. காதலைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்...

*நந்தகுமாரன்-பிறைட்டன்*

பரதேசி : கண்ணா காதல் என்பது இரவில் கரண்டு போன நேரத்திலை வாற நுளம்புமாதிரி. துரத்தவும் முடியாது தூங்கவும் முடியாது

☠ ☠ ☠

கேள்வி: அண்மையில் உங்களை மகிழ வைத்த சம்பவம் எது? நெகிழ வைத்த சம்பவம் எது?

*கே. தவேந்திரன், நொட்டிங்ஹாம்*

பரதேசி : மகிழ வைத்தது ஐக்கிய நாடுகள் அமைதி காப்பு ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பங்கேற்ற போர்க் குற்றவாளியாகக் கருதப்படும் இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வா தடை செய்யப்பட்டமை. நெகிழ வைத்தது மண்ணிழந்த எம் துயர்பற்றிச் செய்தி சேகரிக்கப்போய் கண்ணிழந்த மேரி கொல்வின் அம்மையாரின் கொலை.

☠ ☠ ☠


கேள்வி: கடவுள், அறிவியல் இரண்டும் உங்கள் பார்வையில் எப்படி?

*கே.தேவசகாயம்*

பரதேசி : எந்த அறிவியல் கேள்விகளுக்கெல்லாம் விடை தெரியவில்லையோ அதுதான் கடவுள்....


அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

**seven** | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ




creative artwork from **concept to design**

# ஆயுதப் போரின் ஆரம்ப நாட்களில்....



சின்னச்சோதி



நடேஷ்

## போராட்ட முன்னோடிகள் – 04

கிடைத்த துணியைக்கொண்டு ஞானலிங்கத்தின் காயத்தைக்கட்டி ,ரத்தம் வழிவதை நிறுத்த முயன்றனர். படுகாயமடைந்த சின்னச்சோதியை என்னசெய்வது என தடுமாற்றமடைந்தனர். ஏறத்தாள இரவு பத்துமணி இருக்கும் அவ்வேளையில் ஊரடங்குசட்டம் காரணமாக எங்கும் நிசப்தமாக இருந்த நிலையில் குண்டுவெடித்த சத்தத்தைக்கேட்டு எவ்வேளையிலும் சிங்களப் படைகளின் கவனம் பாடசாலையை நோக்கித் திரும்பலாம் என்னும் நிலையில் அவ்விடத்தை விட்டு விரைவாக வெளியேறமுற்பட்டனர்.

படுகாயமடைந்த சின்னச்சோதியை ஒருவாறு துக்கிக்கொண்டும் காலில் காயமடைந்திருந்த ஞானலிங்கத்தை கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டும் வீரமாகாளியம்மன் கோவிலை மீண்டும் அடைந்தனர். குண்டு வெடிப்பு சத்தத்தின் காரணமாக வெளியேவந்த சிலஅயலவர்கள் குறிப்பாக அயலிலிருந்த வீடொன்றில் குழந்தையொன்றின் முப்பத்தியோராம் நாள் விழா நடைபெற்றிருந்தது. (இக்குறிப்பிட்ட தொட்டிலிடும் நாளை அடையாளம் கண்டே நாற்பதுவருடங்களிற்கு முந்தைய ஏப்ரல் 7ந் திகதியையும் அன்றையநாளான புதன்கிழமையையும் இன்றும் எம்மால் அடையாளம் காண முடிகின்றது) மற்றும் தங்கத்துரையின் சகோதரி மைத்துனர் ஆகியோருடன் உதவியுடன் தெரிந்த முதலுதவிச்சிகிச்சை எல்லாம் அளித்த பின்பும் சின்னச்சோதியின் நிலமை பயமூட்டுவதாகவே காணப்பட்டது. அதிகஇரத்தம் வெளியேறியதால் அவரின் உடல் நீர்ப்பிடிப்பை இழந்துபோகவே அவர் அம்மயக்கநிலையிலும் 'தங்கத்துரை தண்ணீர் தண்ணீர்' என கேட்டவாறிருந்தார். அவரை வைத்தியசாலைக்கு கொண்டுபோவதைத் தவிர வேறுவழியில்லை.

ஊரடங்குச்சட்டம் அதிலும் குறிப்பாக யாழப்பாணத்தில் எதிர்பாராதவிதமாக நடந்துவிட்ட சேகுவராத் தாக்குதலினால் எப்பொழுதும் உசார்நிலையில் வைக்கப்பட்டிருப்பதுடன் எந்நேரமும் வீதிரோந்துவரும் படையினரின் கண்ணில்படாமல் சின்னச்சோதியை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதெப்படி?.....

சிங்களப்படைகளை முதன்முதலில் திட்டமிட்டு தாக்கமுற்பட்ட போது ஏற்பட்டபாரிய பின்னடைவு அதனால் அவர்களை தாக்கமுடியாமற் போனது ஒருபுறம் கவலையளித்தது. அதனையும் விட தமதுநண்பனும் தமது இரகசிய இராணுவகுழுவில் ஒருவனுமாகிய சின்னச்சோதியின் உயிரை எப்படியும் காப்பாற்றவேண்டிய மிக இக்கட்டானநிலை.

எதிலும் சமயோசிதமாக முடிவெடுக்கும் தங்கத்துரை தமது குழுவின் இரகசியமா அல்லது நண்பனின் உயிரா எனத் தடுமாறிய போதும் அன்றைய நிலையின் இறுதியில் நண்பனின் உயிரைக்காக்கவும் அதன்முலம் ஏற்படப்போகும் பின்விளைவுகளையும் எதிர்கொள்ளத் தயாரானார். முடிவாக காயமடைந்து அரைமயக்கநிலையில் தண்ணீர் தண்ணீர் என அரற்றியவாறிருந்த சின்னச்சோதியை சாக்கு ஒன்றில் படுக்கவைத்து குட்டிமணி தங்கத்துரை அவரது மைத்துனர் மற்றும் அயலவர்களின் உதவியுடன் தூக்கிச்சென்று வல்வெட்டித்துறை காங்கேசன்துறை வீதியில் அமைந்திருந்த தொண்டைமானாறு பிள்ளையார் கோவில் சந்தியின் நடுவீதியில் வளர்த்தி(படுக்கவைத்து) விட்டு மறைந்துநின்று நிலமைகளை அவதானித்தனர். இவர்கள் எதிர்பார்த்தது போலவே பலாலிமுகாமிலிருந்து வந்த இராணுவத்தினர் நடுவிதீயில் குற்றுயிராக கிடந்த சின்னச் சோதியை கண்டு ஜீப்பினை நிறுத்தி சுற்று முற்றும் பார்த்துவிட்டு சின்னச்சோதியினையும் தம்முடன் எடுத்துச் சென்றனர். எந்த இராணுவஜீப்பினை தாக்கவென வெடிகுண்டுகளை சின்னச்சோதி செய்தாரே அதே இராணுவ ஜீப்வண்டியிலேயே சின்னச்சோதியினை சமயோசிதமாக இவர்கள் அனுப்பி வைத்திருந்தனர்.

காயமடைந்திருந்த சின்னச்சோதியினை எடுத்துச்சென்ற இராணுவத்தினர் அவரை நிச்சயமாக வைத்தியசாலையில்அனுமதிப்பர் என்னும் திடமான நம்பிக்கையுடன் வீரமா காளியம்மன் கோவிலடிக்கு மீண்ட குட்டிமணி தங்கத்துரை என்போர் ஞானலிங்கத்தின் காயத்திற்கு மேலதிகமருந்திடும் பணியில் ஈடுபட்டனர்.

1971 ஏப்ரல் 05ந்திகதி நண்பகல் முதல் நாடு தழுவிய ரீதியில் மூன்றுநாட்களும் தொடரான ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததனால் பகிரங்கமான மக்கள் நடமாட்டம் வீதிகளில் இருக்கவில்லை. எனினும் வல்வெட்டித்துறை ஊறணி இந்திராணி வைத்தியசாலைக்கு இராணுவத்தால் எடுத்துவரப்பட்ட சின்னச்சோதியினை அங்கு கடமையிலிருந்த சின்னச்சோதியின் உறவினரான இந்தியத்துரை என அழைக்கப்பட்ட காமாட்சிசுந்தரத்தின் மனைவியான திருமதி அலஸ் என்னும் தாதி அடையாளம் கண்டு கொண்டார். இவரின் மூலமாக சின்னச்சோதியின் ஆபத்தான நிலமையினை முன்னிட்டு யாழ் போதனா வைத்தியசாலைக்கு அதே ஜீப்பிலேயே அவர் அனுப்பிவைக்கப்பட்ட செய்தியினையும் அறிந்து கொண்டனர்.

ஏப்ரல் 09ந்திகதி அதிகாலையில் யாழ் வைத்தியசாலையில் இருந்து கிடைத்த தகவலின் மூலம் சின்னச்சோதியின் சகோதரன் விசியன் மாஸ்டர் மற்றும் நண்பர்களான ஜெயபாலி சிவக்கிளி மற்றும் சிலநண்பர்களும் வைத்தியசாலைக்கு சென்றுபார்த்தனர். அப்பொழுதும் அரைமயக்க நிலையிலேயே சின்னச்சோதி காணப்பட்டார். அதிகளவு இரத்தம் வெளியேறிய நிலையில் ஊரில் இருந்து சென்ற அனைவரும் இரத்தம் கொடுக்க தயாராகினர். பரிசோதனையின் பின்பு ஜெயபாலி மற்றும் சிவக்கிளியின் இரத்தங்கள் சின்னச்சோதிக்கு ஏற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஏறத்தாள இருவாரங்களிற்கு மேல் சின்னச்சோதி யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று ஓரளவுகுணமடைந்து வந்தார்.

குண்டு வெடித்தகாயங்களுடன் அரை மயக்க நிலையில் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட சின்னச்சோதியினை விசாரித்து என்ன நடந்தது எனப்புரிந்து கொண்ட பொலிஸார் தொடர்ந்து வந்தநாட்களிலும் இதனை நிதானமாகவே கையாளமுயன்றனர். காரணம் அன்றைய சேகுவராப்புரட்சியின் ஓர் அங்கமாக இக்குண்டுவெடிப்பு நிகழவில்லை என்பதுடன் அவர்கள் திருப்திப்பட்டுக் கொண்டனர் எனலாம்?. ஏனெனில் பின்வரும் நாட்களில் பெருவிருட்சமாக வளரப்போகும் தமிழ்ஈழவிடுலைப் போராட்டத்தின் வித்தாக இந்த குண்டுவெடிப்பு இருக்கலாம் என்றோ ஈழத்தழரின் ஆயுதப் போராட்டத்தை மூன்று தசாப்தத்திற்கு மேலாக தலைமையேற்று நடத்தப்போகும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் 'தமிழீழவிடுதலை' இயக்கமான இக்குழுவின் ஓர் அங்கமாக வளருகின்றார் என்பதையோ வல்வெட்டித்துறைக்கு வெளியே யார்தான் அன்று கனவு கண்டிருக்கமுடியும்?

இவ்வாறு சின்னச்சோதி சிகிச்சை பெற்றுவரும் நாளொன்றில் நெல்லிரசப்போத்தலுடன் தனது நண்பன் குமாரதேவனுடன் இணைந்து வைத்தியசாலைக்கு வந்த பிரபாகரன் இராணுவத்தை தாக்கும் முயற்சியைப்பற்றி சின்னச்சோதியிடம் விளக்கமாக கேட்டதுடன் அம்முயற்சியில் தன்னையும் இணைத்துக் கொள்ளாமையை கூறி மிகவருத்த முற்றார்.

தொடர்ந்துவந்தநாட்களில் சின்னச்சோதியின் காயங்கள் ஓரளவு குணமாகி சாதாரண நிலைக்கு வரவும் அவரைநாடிய பொலிசாரின் வரவு அதிகரித்தது. குண்டுவெடிப்பின் விபரத்தை பூரணமாக அறியும் நோக்கத்துடன் விசாரணை என்றபெயரில் அவர்களின் வரவு தொடர்ந்து அதிகரித்து வந்தது.

காயங்கள்மாறி சாதாரண்நிலைக்கு வந்தவுடன் சின்னச்சோதியை கைது செய்து மேலதிக விசாரணை நடைபெறலாம் எனும் அச்ச நிலமை ஏற்பட்டது. இதனால் வைத்தியரின் அனுமதியின்றியே வைத்தியசாலையை விட்டு வெளியேறுவது தவிர்க்கமுடியாததாகியது.

*-தொடரும்*

*வருணகுலத்தான் (காலம் இதழில்)*

Whitechapel College

பிரித்தானியக் குடியுரிமை விண்ணப்பங்கள், நிரந்தர வதிவிட விண்ணப்பங்கள், விடுமுறை விண்ணப்பங்கள் என்பவற்றை விண்ணப்பிக்க தரமான ஆலோசனைகளை உங்களுக்கு நாங்கள் வழங்குகிறோம்.

ESOL with Citizenship course

பரிசோதனை முடிந்து 10 நாட்களில் உங்களுக்குரிய சான்றிதழ்கள் கிடைக்கும்...

நாங்கள் A1, A2, B1, B2, C1, C2 ஐயும் வழங்குகிறோம்.

Whitechapel கல்லூரியானது UKBAஇனால் அங்கீகரிக்கப்பட்ட கல்வியை உங்களுக்கு வழங்குகிறது.



Contact: Whitechapel College
67, Maryland Square, Stratford, London, E15 1HF.
Tel : 0208 555 3355

BAC ACCREDITED edexcel City & Guilds Approved Centre

Email: info@whitechapelcollege.org.uk
Web: www.whitechapelcollege.org.uk

# ஆளும் கட்சி அரசியல் அல்லது 'அங்கிடுதத்தி' அரசியல்

இம்மாதம் பனிரண்டாம் நாள் ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தி அவர்களின் நினைவு தினம். பல்லாயிரம் தமிழ் உயிர்களைத் தின்றிருந்த 2009 ஆம் ஆண்டின் முற்பகுதிக் காலத்தில் பலியான ஓர் உயிர் அவர். ஊடகவியலாளர் என்பதனால் அவருடன் எனக்குத் தொடர்புகள் இருந்தன. அரசியல் கலந்துரையாடல் தொடர்பான அவரது நிகழ்ச்சிகள் சிலவற்றையும் பார்த்துள்ளேன்.

சிங்கள அரசு தமிழர் மீது நடாத்திய அடாவடி வன்முறையில், திகைத்து, தவித்து, எத்துப்பட்ட ஆயிரக்கணக்கான மனிதர்களுள் அவரது மனைவியும் மகளும் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் ஒதுங்கினர். அங்குள்ள U.N.H.C.R நிறுவனம் இவர்களை விசாரித்து, காரணம் சரியாக அமையும் பட்சத்தில், அகதி அந்தஸ்து கொடுத்து, அகதிகளை ஏற்றுக் கொள்கின்ற அமெரிக்கா, நெதர்லாந்து முதலான எட்டு நாடுகளில் ஏதாவது ஒரு நாட்டிற்கு வதிவிட அனுமதி கொடுக்கும். அப்படி அனுமதி கொடுப்பதற்கு எடுக்கும் வருடங்கள் நான்கிற்கு மேல்.

அதன் அடிப்படையிலேயே சத்தியமூர்த்தியின் மனைவியும் மகளும் பாங்கொக் வந்திருந்தனர். அவர்களுடன் அடிக்கடி தொலைபேசியினூடாக தொடர்பு கொள்வேன். எனவே சென்ற பன்னிரண்டாம் திகதி சத்தியமூர்த்தியின் நினைவு தினத்தை முன்னிட்டு அவர் மனைவி மற்றும் மகளுடன் உரையாடுவோம் என்று தொலைபேசியை எடுத்தேன். மணி விட்டு விட்டு அடித்துக் கொண்டிருந்தது. எடுப்பார் யாரும் இல்லை. ஒரு சந்தேகம் வந்து அங்கு இருக்கின்ற எனது மருமகனிடம் தொடர்பு கொண்டேன். மருமகன் சொன்னான் 'அவர்களை தாய்லாந்து போலீசார் பிடித்துக் கொண்டுபோய் சிறையில் போட்டு விட்டார்கள்'

அதுவும் தாய்லாந்தில் உள்ள கொடூரமான நடைமுறை. தாய்லாந்தில் இருப்பதற்கான விசா முடிந்தவுடன் அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அந்த நாட்டிற்கு திரும்பப் போய்விட வேண்டும் அவ்வாறு போகாவிடின் சிறைக்குள் தான் வாழ்க்கை. திடீர் திடீர் என போலீசார் சுற்றி வளைத்து அவ்வாறானவர்களை கைது செய்வார்கள். U.N.H.C.R எப்பொழுது அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புகிறதோ அதுவரை, பெண்கள், பிள்ளைகள், குழந்தைகள் யாராக இருந்தாலும் சிறையில் தான் தமது நாட்களை கழிக்க வேண்டும். மூன்று, நான்கு வருடங்களாக அவ்வாறு சிறையில் இருப்போரை நான் சந்தித்திருக்கிறேன்.

நிரம்பிய துக்கம் என்னை முட்டிக் கொண்டது. சத்தியமூர்த்தி வெறும் ஊடகவியலாளர் மாத்திரம் அல்ல. பேனா தூக்கிய ஓர் எழுத்துப் போராளி. ஊடகத்துறையில் அவர் பணிபுரிந்து கொண்டிருந்த போதும், எல்லைப்படை வீரராக, ஒவ்வொரு மாதமும் எல்லைப் புறம் சென்று காவல் புரிந்தார். அவரது சொந்தத் தம்பியே மாவீரனான கப்டன். சிந்துஜன். அந்த மாவீரனின் பெயரையே தனது மகளிற்கு 'சிந்து' ஆக சூட்டினார். அவர் பற்றிய தகவல்களை வாசிக்கின்ற போது, அவரது ஆளுமையில் பிரமிப்பும், அவரது இழப்பில் தவிப்பும், அவரது குடும்பத்தை எண்ணுகையில் துக்கமும் மேலிடுகிறது. எவ்வித நாதியும் அற்றுத்தானே அவரது குடும்பம் பாங்கொக் வந்து இப்பொழுது நிர்க்கதியாகி நிற்கிறது.

(சத்தியமூர்த்தி பற்றி தாயகத்திலிருந்து கண்ணன் எழுதிய கட்டுரை ஒன்று 07-13 பெப்ரவரி 2012 ஈழமுரசு இதழில் வந்துள்ளது. உங்களுக்கு இயலுமெனில் அதனை எடுத்து வாசித்துப் பார்க்கவும்.)

அப்பேர்ப்பட்ட சத்தியமூர்த்தி அவர்களுக்கு என் வணக்கத்தை தெரிவித்து மீதியைத் தொடர்கின்றேன். வன்னியில் சத்தியமூர்த்தி போன்ற மனிதத்தன்மை மிக்க தேசிய உணர்வு கொண்ட ஊடகவியலாளர்கள் பலர் இருந்த அதே சமயம் 'அங்கிடுதத்தித்' தனம் கொண்ட ஊடகவியலாளர்கள் சிலரும் இருந்திருக்கின்றனர். சீனாவில் கலாசாரப் புரட்சி நடந்த சமயம் தோழர் மாவோ சொன்னார் 'முதலாளித்துவவாதிகளையும் நிலப் பிரபுத்துவவாதிகளையும் நாங்கள் வெளியே தேடினோம் ஆனால் அவர்கள் எங்களுக்குள்ளேயே இருந்திருக்கிறார்கள்.' அது எமது ஈழத் தேசியப் போராட்டத்துக்கும் பொருந்தும்.

தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி (நிதர்சனம்) இன் பணிப்பாளராக இருந்த கருணாகரன் அவர்களே இப்பொழுது கிளிநொச்சி மாவட்ட ஈ.பி.டி.பி இன் அமைப்பாளராக இருக்கிறார். இன்னும் சில உதாரணங்களை இங்கு பதிய முடியும் அவற்றை தவிர்க்கிறேன்.

இதனால் தான் இவர்களது அரசியலை ஆளும் கட்சி அரசியல் அல்லது அங்கிடுதத்தி அரசியல் என்கின்றேன். அதாவது அதிகாரத்தில் யார் இருக்கின்றார்களோ அவர்களைச் சார்ந்து இயங்குவது. முன்னர் விடுதலைப் புலிகளின் அதிகாரம் தமிழீழ தேசமெங்கும் பரவி இருந்தது. விடுதலைப் புலிகளின் அதிகாரம் வீழ்ந்துபட்ட பின்னர் சிங்கள அரசாங்கத்தின் அதிகாரம் பரந்தபின் மிகச் சுளுவாக இவர்களால் இடம் மாறி, நிறம் மாறி, மனம் மாற முடிகிறது. இவர்களை 'மனிதர்' என் இலக்கணத்துள் அடக்க என்னால் முடியாது. யாழ்ப்பாணத் தமிழ் இப்பேர்ப்பட்டவர்களுக்கு ஓர் அழகான பேயர் வைத்திருக்கிறது. 'அங்கிடு தத்திகள்'

## இரவி அருணாசலம்

### எழுதுவது என்னவெனில்

ஊடகவியலாளர்களை மிகச் சுலபமாக மூன்று வகைக்குள் வகுத்து விடலாம். அது எல்லாவகை மனிதர்களுக்கும் கூடப் பொருந்தும். முதலாவது தாம் நம்புகின்ற கருத்துக்களை, வினைத்திறன் கொண்ட விதமாக மாற்ற தமது ஆற்றலைப் பயன் படுத்துதல். இது ஒரு வித சார்பு நிலை தான் ஆனால் தார்மீக நெறி வழி நிற்பது.

இரண்டாவது நடுநிலைமைக் கண் கொண்டு சகலவற்றையும் சீர் தூக்கிப் பார்ப்பது. இங்கு சார்புநிலை கிடையாது ஆனால் இதனுள்ளும் தார்மீக நெறி என்று ஒன்றுண்டு இதில் வேறொருஆபத்தும் உண்டு சார்புநிலை எடுக்காத நடுநிலைமை என்பது அதிகார வர்க்கத்துக்கு துணை போவதாக அமைந்துவிடும்.

மூன்றாவது வகையானோரே ஆபத்தான பேர்வளிகள் இவர்களுக்கு என்று ஓர் அரசியல் கருத்துக் கிடையாது. ஆனால் அரசியலில் தீவிர முனைப்பட்ட ஒரு முகத்தைக் காட்டுவர். அது ஒரு விதத்தில் தமது கபடத்தனத்தை மறைக்கின்ற போர்வை என்பதை அவர்கள் உணராதிருப்பது தான் இதில் வேடிக்கை.

வரலாறு இவர்களை எந்த இடத்தில் வைத்திருக்கப் போகின்றது? அந்தந்த நேரத்தின் உணவுக்கும், உடைக்கும் ஆக இவர்கள் இப்படித் தங்களை விற்று விடுகிறார்கள். உயிர் அச்சுறுத்தல் என்றால் அதை விளங்குவது கடினம் அல்ல. இப்படியான ஒருசிலர் எனக்கும் நண்பர்களாக இருந்தார்கள் என்பதுதான் என் தீராத வெட்கம்.

# அறிவியல் தகவல்கள்

சி.மாசிலாமணி
*(ஒரு பேப்பருக்காக)*

## முல்லைப் பெரியாறு அணை




இடுக்கி அணை

இந்த மூன்று சொற்களும் ஒரு நீர் அணையைக் குறிக்கும் சொற்கள் என்பதை விட தமிழ்நாட்டின் தேனி, மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் உயிரோட்டம் என்பதுதான் பொருந்தும். 116 ஆண்டுகளுக்கு முன் பெரியாற்றுக்கு குறுக்கே 1200 அடி நீளத்திலும் 176 அடி உயரத்திலும் கட்டி முடிக்கப்பட்ட இந்த அணையால், கடல் மட்டத்திலிருந்து 3,000 அடி உயரத்தில் மூன்றரை இலட்சம் ஏக்கர் அடி கொள்திறன் கொண்ட ஒரு பாரிய நீர்த் தேக்கம் உருவானது. (ஒரு ஏக்கரில் ஒரு அடி உயரத்திற்கு நிற்கும் நீரின் அளவுதான் ஒரு ஏக்கர் அடி.) இந்த அணை, பழைய முறையில் சுண்ணாம்புக் கலவை, சுட்டமண், கற்கள் ஆகிய கலவைகளால் ஆனது. முகடு 12 அடி அகலம் கொண்ட அழகிய பாதை. அடித்தளம் 132 அடி அகலம் கொண்டது. அன்றிலிருந்து கூறப்பட்ட மாவட்டங்களின் 1.7 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர் பாய்ச்சப்படுகிறது.

இந்த அணையும் நீர்த் தேக்கமும் பக்கத்து மாநிலமான கேரளாவில் உள்ளது. ஒப்பந்த அடிப்படையில் நீர்த்தேக்கத்தையும், அதன் கீழுள்ள நீர் மின் நிலையத்தையும் தமிழ்நாடு குத்தகைக்கு எடுத்துள்ளது. கடந்த சில தசாப்தங்களாக கேரள அரசு இந்த அணையின் உறுதித் தன்மையில் நம்பிக்கை இழந்துள்ளது. தமிழ்நாடு அரசு அதைச் சமன் செய்ய அணை நீரை 142ல் இருந்து 136 அடியாகக் குறைத்து திடப்படுத்தல் செய்து, 2006ல் ஆகக்கூடிய நீர் உயரமாக இருந்த 142 அடியை விடக் கூடுதலாய் உயர்த்தவும் மேல் நீதிமன்ற ஆணையைப் பெற்றது. திரும்பவும் 136 அடிக்குமேல் உயர்த்துவதை ஏற்காத கேரளம் 1979ல் குஜராத்தில் ஏற்பட்ட ஒரு அணை உடைப்பால் 15,000 மக்கள்வரை இறந்ததையும் அணைச் சுற்றாடலில் ஏற்பட்ட பூகம்ப நடுக்கங்களையும் எடுத்துக் காட்டி இப்போதைய அணைக்கு ஆயிரத்து நானூறு அடிக்கு அப்பால் புதிய உறுதியான தற்கால முறைக் கொங்கிறீற் அணை கட்டவேண்டும் என்கிறது.

இப்பிரச்சனை அரசியல்மயப் படுத்தப் பட்டதன் விளைவாக சரியென்று பட்டாலும் அதில் இறுதி முடிவு எடுக்க முடியாத நிலையில் இரு மாநிலங்களும் நடுவன் அரசும் உள்ளன. பெரியாற்றின் கீழ்ப்பகுதியில் கேரளா, குறவன் குறத்தி ஆகிய இரு மலைகளையும் இணைத்து இடுக்கி அணை என்ற பெயரில் 73ல் கட்டி நீர் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தும் பாரிய நீர்த் தேக்கத்திற்கு கூடிய நீர் கொண்டு செல்ல ஆடும் கபட நாடகம்தான் இந்த, அணை உடைக்கும், மக்கள் நீரில் மூழ்குவார்கள் என்ற கதை என்கிறது தமிழ் நாடு. 142 அடியாக இருந்த நீரின் உயரத்தை 136 அடியாகக் குறைத்து அணையை உறுதிப்படுத்திய 1980க்கும் 2005க்கும் இடைப்பட்ட காலத்தில் பயிர்ச் செய்கை குன்றி ஏற்பட்ட நட்டம் 40,000 கோடி என்னும் தமிழ் நாட்டின் கூற்றையே பொய் என்கிறது கேரளம். வல்லுனர்கள் வேறு இரு பக்கங்களாய்ப் பிரிந்து சுதப்புகிறார்கள். இப்போது சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் வாழ்வாதாரத்தை கேரளம் கவனத்தில் கொள்வதும், தமிழ்நாடு கேரளத்தின் அணைப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பயப்பாட்டை கவனத்திற்கு கொள்வதும் இன்றியமையாதவை.

116 ஆண்டு கழிந்த சுண்ணாம்புக் கலவை அணைக்கும் ஒரு காலஎல்லை உண்டு. அரசியல் இலாபத்துக்காக பக்கத்து மாநிலத்தில் உள்ள அணை நீரை உயர்த்துவதற்கு வாதாடி காலத்தைப் போக்குவது காலஓட்டத்தில் நன்மை தராது. நீர்வளம்தான் முக்கியம். அணையின் நீர் உயரம் 120 அடியாக இருந்தால் அணையின் ஆயுளை நீடிப்பதில் கேரளவுக்கு ஆட்சேபனை இல்லை தேவையான நீரை வழங்குவதிலும் ஆட்சேபனை இல்லை. நீர் செல்லும் வாய்க்கால்களை அகலமாக்கி இப்பொழுது உள்ள வினாடிக்கு 35 கன அடி என்ற வேகத்தைக் கூட்டி தமிழ் நாட்டிலேயே உரிய இடங்களில் நீர்த் தேக்கங்களை உருவாக்குவது தான் புத்திசாலித்தனம் காலப்போக்கில் அணையே நீரைத் திசை திருப்பும் ஒரு நடைமுறையாகிவிடும்.


- Friday Special -
Thali 12 Items £5.00
RAINBOW RESTAURANT
தாயகத்தில் கிடைத்த அதே சுவை....
Mutton Buriyani
Kothu rotti 2 for £6
4 Vadai.......... £1
WEDNESDAY SPECIAL OFFER
CHICKEN BRIYANI £1.99
Outdoor catering services
E.Mail : rainbow.mitcham@gmail.com
Web: www.rainbowmitcham.co.uk
Italy 25 pieceswith sambal & sambaar £10
100 String Hoppers with sothy & sambol Only £9.00
50 String Hoppers...... £6
25 String Hoppers ...... £4
205, Streatham Road, Mitcham, Surrey, CR4 2AJ
Call : 020 8640 4230 , 020 8640 1612

Maths, Science and English Classes
- KS1, KS2, KS3 and GCSE
- Experienced teachers
- Regular assessments and feedbacks
- Guaranteed improvement (முன்னேற்றத்துக்கு உத்தரவாதம்)
- Personal Licence (மதுபானம் விற்பதற்கான) course (சான்றிதழ் வழங்கப்படும்)

Only from £5 per Subject

- ESOL with Citizenship course: Pass guaranteed or money back
- for British Citizenship (Naturalisation)
- for Indefinite leave to remain (Permanent Residency)

London College of Management
Tel: 074 0342 7926 / 020 8683 6472
Accessible from Croydon/ Mitcham/ Tooting area

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com




## மணமகள் தேவை

1. 43 வயது, 5'8", Asylum seeker, பட்டதாரி, MBA holder தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3856

2. 31 வயது, 5'6",PSW visa in UK, BA பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3857

3. 31 வயது, 5'7", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3866

4. 31 வயது, 5'10", பிரான்ஸ் நிரந்தர வதிவுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3867

5. 26 வயது, 6'0", Student visa in UK, Studying BSc Computer Application, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3869

6. 26 வயது, 5'10", Student visa in UK, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3838

7. 25 வயது, 5'5", Student visa in UK, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3839

8. 34 வயது, 5'5", France, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3840

9. 29 வயது, 5'10", visa in Lithuania, Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3842

10. 31 வயது, 5'10", பிரித்தானிய பிரஜாவுரிமை, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3844

11. 32வயது,5'7",Asylumseekerதகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3845

12. 28 வயது, 5'3", Student visa in UK, Studying BA, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3846

13. 26 வயது, 5'8", Canada, Working in IT industry, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3851

14. 33 வயது, 5'10", பிரித்தானிய பிரஜாவுரிமை, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3852

15. 30 வயது, 5'5", Student visa in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3816

16. 25 வயது, 5'6", Student visa in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3830

17. 39 வயது, 5'6", Doctor born and brought up in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3831

18. 35வயது, 5'9", PR holder, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3834

19. 27 வயது, 5'6", Student visa in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3835

20. 33வயது,5'8",Permanentresidence, Engineer working in a company, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3836

21. 38 வயது, 5'8", British citizen currently running a business in Dubai , தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3605

22. 35வயது, 5'8", கனடியநிரந்தர வதிவுரிமை, Land Surveyor , தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3774

23. 29வயது, 5'10", Student visa in UK, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3784

24. 27 வயது, 5'5", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, IT sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3785

25. 31 வயது, 5'8", Asylum, BBA, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3786

26. 26 வயது, 5'6", Student visa in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3787

27. 28 வயது, 5'6", Student visa in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3788

28. 29 வயது, 5'6", பிரித்தானிய பிரஜாவுரிமை, Finance sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3789

29. 36 வயது, 5'7", பிரித்தானிய பிரஜாவுரிமை, Finance sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3797

30. 37 வயது, 5'8", Stuent visa in UK, Masters degree holder, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3805

31. 31 வயது, 5'8", Stuent visa in UK பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3807

32. 28 வயது, 5'7", பிரித்தானிய பிரஜாவுரிமை, Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 122

33. 31 வயது, 5'3", பிரித்தானிய பிரஜாவுரிமை, Service industry இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3616

34. 29 வயது, 5'5", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3690

35. 37 வயது, 5'9", Stuent visa in UK, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3581

36. 29 வயது, 5'8", PSW visa in UK, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3580

37. 32 வயது, 5'9", பிரித்தானிய பிரஜாவுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3574

38. 30 வயது, 5'6", PSW visa in UK, Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3352

39. 41 வயது, 5'6" பிரித்தானிய பிரஜாவுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref: 3765

40. 30 வயது, 5'8", Tier-1 migrant, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3766

41. 32 வயது, 5'7", இலங்கையில் வசிக்கும் Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3764

42. 33வயது, 5'10", பிரித்தானிய பிரஜாவுரிமை, Masters degree, IT sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3714

43. 35 வயது, 5'5", Student visa in UK, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3770

44. 33 வயது, 5'7", Student visa in UK, பட்டதாரி தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3768

45. 29 வயது, 5'6", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, Software Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 115

46. 33வயது, 5'7", Refugee status in UK, Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3773

47. 36 வயது, 6'0", பிரித்தானிய பிரஜாவுரிமை, Working as an Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3757

48. 36 வயது, 5'5", Stuent visa in UK, பட்டதாரி தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3292

49. 31 வயது, 6'5", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3758

50. 32 வயது, 5'6", பிரித்தானிய பிரஜாவுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1837

51. 29 வயது, 5'10", Stuent visa in UK பட்டதாரி தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3543

52. Age35, 5'11", British citizen doctor looking for a suitable bride Ref: 1006

## மணமகன் தேவை

1. 22 வயது, 5'0", இலங்கை, A/L Bio Science தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3732

2. 31 வயது, 5'2", அமெரிக்க பிரித்தானிய பிரஜாவுரிமை, Doctor, PhD qualified, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3855

3. 35 வயது, 5'6", அமெரிக்க பிரஜாவுரிமை, பட்டதாரி, Working in pharmaceutical company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3865

4. 27வயது, 5'4", கனடியபிரஜாவுரிமை, Computer degree holder தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3881

5. 34 வயது, 5'4", பிரித்தானியபிரஜாவுரிமை, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3841

6. 31 வயது, 5'4", பிரித்தானிய பிரஜாவுரிமை, Bio Chemist, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3793

7. 35 வயது, 5'5", பிரித்தானிய பிரஜாவுரிமை, Accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3853

8. 28 வயது, 5'6", இலங்கை, பட்டதாரி, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3803

9. 26 வயது, 5'4", பிரித்தானிய பிரஜாவுரிமை, Accountant working in a company, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3260

10. 28 வயது, 5'2", இலங்கை, பட்டதாரி, Working in IT field, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3502

11. 22 வயது, 5'5", பிரித்தானிய பிரஜாவுரிமை, Working in medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3575

12. 29 வயது, 5'1", இலங்கை, Working for export firm in Sri Lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3791

13. 27 வயது, 5'4", கனடிய பிரஜாவுரிமை, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3800

14. 31 வயது, 5'3", PSW visa in UK, Masters degree holder, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3806

15. 29 வயது, 5'5", Work permit visa in UK, BSc, MBA degree holder, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3810

16. 26 வயது, 5'3", தென்னாபிரிக்க பிரஜாவுரிமை, Engineer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3569

17. 24 வயது, 5'5", Denmark பிரஜாவுரிமை, பட்டதாரி, Working in Medical sector in UK தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3606

18. 36வயது, 5'7", பிரித்தானியபிரஜாவுரிமை, Finance sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3573

19. 32 வயது, 5'5", Malaysian citizen, Masters in UK, Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3763

20. 27 வயது, 5'8", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, Medical sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

21. 32 வயது, 5'2", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, Medical sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3772

22. Age 37, 5'2", British citizen working in a IT company looking for a suitable groom Ref: 3701

23. Age 25, 5'3", Permanent residence in uk graduate looking for a suitable groom Ref: 1243

24. Age 28, 5'2", British citizen accountant looking for a suitable groom Ref: 1348

25. Age 32, 5'4", British citizen doctor looking for a suitable groom Ref: 3711

26. Age 25, 5'3", graduate working in a bank in srilanka looking for a suitable groom Ref: 3717

27. Age 31, 5'6", British citizen graduate working in a bank looking for a suitable groom Ref: 3365

28. Age 32, 5'1", graduate working as a accountant in a company in srilanka looking for a suitable groom Ref: 3739

29. Age 33, 5'2", graduate divorced student visa in uk looking for a suitable groom Ref: 3745

30. Age 24, 5'4",Student visa in UK, looking for a suitable groom, Ref no: 3687

31. Age 34, 5'4", British Citizen, Doctor, looking for a suitable groom, Ref no:3694

32. Age 37, height 5'5" Student visa looking for a suitable groom Ref: 3667

33. Age 32, height 5'4" Sweden citizen divorced looking for a suitable groom Ref: 3653

34. Age 27, height 5'6", Canadian citizen student looking for a suitable groom Ref no 3674

35. Age 30, height 5'5", Graduate Teacher in srilanka looking for a suitable groomRef no 3660

36. Age 23, height 5'8" British citizen, graduate working in a company looking for a suitable groom Ref: 3635

37. Age 27, height 5'4" British citizen, a student looking for a suitable groom Ref: 3628

38. Age 29, height 5'2" Student visa looking for a suitable groom Ref: 3631

39. Age 28, height 5'7" British citizen graduate looking for a suitable groom Ref: 3637

40. Age 26 height 5'2" British citizen Doctor ,looking for a suitable groom ,Ref :3627

41. Age 40 height 5`5" working as a Teacher in Srilanka, graduate looking for a suitable groom Ref: 3568

42. Age 26 height 5`0" living in UK in a student visa, graduate looking for a suitable groom Ref: 3585

43. Age 31 height 5`1" in Srilanka a music teacher looking for a suitable groom Ref: 3588

44. Age 28 height 4`9" in Srilanka a graduate looking for a suitable groom Ref: 3590

45. Age 42 height 5`2" in Srilanka working as a Teacher , graduate looking for a suitable groom Ref: 2622

46. Age 26, 5' 3", British citizen, Accountant Looking for a suitable Groom Ref 3539.

47. Age 29, 5' 7", British citizen working in medical sector Looking for a suitable Groom, Ref 722.

48. Age 32, 5' 4", German citizen living in uk working as an Architect in IT Looking for a suitable Groom Ref 3227.

49. Age 28, 4' 8", student visa looking for a suitable Groom Ref 3553.

50. Age 28, 5' 4", British citizen working as a Architect looking for a suitable Groom Ref 3245.

51. Age 27, 5' 1", graduate living in srilanka looking for a suitable Groom Ref 3550.

52. Age 29, 5' 1", British citizen Doctor looking for a suitable Groom Ref 3496.

53. Age 35, 5' 5", graduate living in srilanka looking for a suitable Groom Ref 3558.

54. Age 32, 5' 1", working as a trainee in medical sector living in srilanka looking for a suitable Groom Ref 3557.

55. Age 27, 5' 1", British citizen Doctor divorced looking for a suitable Groom Ref 3556.

56. Age 30, 5' 2", British Citizen, Doctor, Looking for a suitable Groom Ref 3519.

57. Age 28, 5' 3", British Citizen, Engineer, Looking for a suitable Groom Ref 3520.

58. Age 29, 5' 2", British Citizen, Doctor, Looking for a suitable Groom Ref 3514.

59. Age 34, 5' 6", Sri Lanka, Accountant, Looking for a suitable Groom, Ref 3515.

60. Age 31, 5' 6", India, Graduate, working in HR, Looking for a suitable Groom Ref 3510.

61. Age 33, 5' 5", British Citizen, Graduate, working as a teacher, Looking for a suitable Groom Ref 3509.

62. Age 29, 5' 5", UK PR, Engineer, Looking for a suitable Groom, Ref 3525.

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# இடர் துடைக்கும் சிறார் இல்லங்கள்

ஓராண்டுக்கு முன் தமிழ் நாட்டில் காலமான மைத்துனர் சண்முகராஜா அவர்களுடைய திவச நிகழ்வு அறுபது பேருக்கு மேல் கலந்து கொண்ட உறவினர்கள் ஒன்று கூடிய ஒரு நிகழ்வு. உரையாடல் தாயகப் பக்கம் திரும்பியது. அதே தினம் வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்த சகோதரர்களால் அந்தந்த நாட்டிலே நினைவுக்காக மதியபோசனம் வழங்கப் பட்டிருந்தது தாயகத்திலும் தாயார் தொலைபேசி ஊடாக அன்று பல நூற்றுக் கணக்கான உறவினர்களையும் ஆதரவு குறைந்தவர்களையும் ஒன்றிணைத்து மதிய போசனத்தை கிளிநொச்சி குருகுலத்தில் வழங்கியதாகத் தெரிவித்திருந்தார்.

அந்த தகவல் பழைய நினைவுகளையும் இன்றைய காலத்தின் தேவை கருதி அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்ற சிறார் இல்லங்கள் பற்றிய உணர்வையும் எல்லோருக்கும் ஏற்படுத்தியது. தாயகப் போராட்டத்தின் விளைவால் எழுந்த வாழ்வியல் தாக்கங்கள் பல. முக்கியமானவற்றில் ஒன்றாக ஆதரவற்ற சிறுவர் நிலையும் உள்ளது. தாய் தந்தையரை அல்லது இவர்களில் ஒருவரை இழந்து பாச அணைப்புக்கு ஏங்கிப் பரிதவிக்கும் குருத்துக்கள், செஞ்சோலை முதல் பல்வேறு இல்லங்களால் ஏற்கனவே அணைக்கப் பட்ட சிறுவர்களும் பலர்.

இன்று இயங்கிக் கொண்டிருக்கும் இல்லங்கள் இதற்கான சேவையை வியாகுவமாக முடிந்தவரையிலே புலம்பெயர் நாட்டிலே உள்ள நல்ல இதயங்களுடைய உதவியோடும் ஒத்துழைப்போடும் செயற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இவ்வாறாக தாய், தந்தையரை இழந்த சிறார்களுக்கு பல்வேறு இல்லங்கள் இன்று இந்த ஒத்தடங்களைத் தந்து வருகின்றது. வெளிநாடுகளில் எம்மவர்கள் ஆலயங்கள், தனிப்பட்டவர்கள் என்று ஆதரவுக் கரம் இந்த பிஞ்சு நெஞ்சங்களை நோக்கி நீளுவதும் பாராட்டத்தக்கது.

வடக்கிலும் யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியில் சைவ வித்தியா விருத்திச் சங்க இல்லம் இன்றும் அது நிறைய சிறுவர்களைக் கொண்டதாக சிறப்பான சேவையை தொடர்ந்தும் இந்த போர் அனர்த்தங்களின் இடையேயும் ஆற்றி வருகின்றது. கிளிநொச்சியில் இன்றும் இயங்கிக் கொண்டிருப்பவை சில உருத்திரபுரம் காந்திசேவா சங்க இல்லம் இது ஜெயந்திநகரில் ஒரு கிளையையும் கொண்டிருந்தது. சிறுவர்கள் உருத்திரபுரம் காந்தி சேவா சங்க இல்லத்திலும் கஸ்தூரிபாய் இல்லத்தில் சிறுமிகளும் என பல நூற்று கணக்கானவர்கள் பராமரிக்கப்பட்டு வந்தார்கள் பெரியண்ணா என்று கதிரவேல் பிள்ளை உருத்திரபுரம் இல்லத்துக்கும் தன்னை இளம் துறவி ஆக்கிக் கொண்ட பெண்மணியான சிவமலர் அம்மையார் தருமபுர இல்லத்துக்கும் பொறுப்பாக இருந்தார்கள்.

இதே வேளையில் தம்பிராஜா போதகரின் நவஜீவனம் இல்லம் பரந்தனில் இயங்கியது. அதுவும் கானான் என்கின்ற ஒரு கிளையை புளியம்பொக்கனையில் கொண்டிருந்தது. தர்மபுரம் வெள்ளைக்கார கர்ஷன் அம்மா இயக்கிய கிளிநொச்சியில் அமைந்திருந்த கருணா நிலையமும் முக்கியமானது. அந்த நாட்களில் யாழ்ப்பாண சிறுவர் இல்லங்களுக்கு ஆதரவுக் கரம் நீள்வது அதிகம். கைதடியில் இயங்கிய சிறுவர் இல்லம் மிகச் சிறப்பான வசதியைக் கொண்டு இயங்கியது. நீத்தார் நினைவு, திவசம், திதி என உணவுகள் நன்கொடைகள் யாழ் மக்கள் கைக்கு எட்டும் தூரத்தில் உள்ள இல்லங்களுக்குத் தானே சென்றடையும். அந்தவகையில் கைதடி இல்லம் மூன்று வேளையும் வெவ்வேறான உணவைப் பரிமாறுகின்ற இல்லமாக ஜொலித்தது.

கிளிநொச்சி, பரந்தன் இல்லங்கள் நெற்செய்கை , காய்கறித் தோட்டம், கோழி வளர்ப்பு, ஆடு மாடு வளர்ப்பு என சுய முயற்சியில் சுய தேவையைப் பூர்த்திசெய்து நின்ற நிலையில் வளர்ந்தன. இத்தகைய இல்லங்கள் அனைத்திலும் தியாக சீலர்களின் உழைப்பு மூலதனமாக மிளிர்ந்தது. கிளிநொச்சி சைவ இல்லங்களின் நிலை கூடிய பணத் தாக்கம் கொண்டிருந்தது. பெரியண்ணா இயக்கிய காந்திஇல்லம் கஸ்தூரிபாய் இல்லம். வளர்வு தளர்வு சிறுவர் குறைந்தும் இயன்றவரையில் இழுத்துப் பிடித்து ஓடிக் கொண்டிருந்தது. இன்று இவற்றினுடைய செயற்பாடுகள் செயல் இழந்துள்ளது வேதனைக்குரியவையே. குருகுலம் தொடர்ந்தும் இயங்கி ஆயிரக்கணக்கான ஆதரவு குறைந்த சிறுவர்களை ஆளாக்கியது இன்றும் ஆளாக்கிக் கொண்டிருக்கின்றது. அப்பு கதிரவேலு இயக்கிய இல்லம் இது. அப்பு இல்லச் சிறுவர் முதல் அனைவரும் அழைக்கும் உறவுமுறை.

நாலுமுழ வேட்டி, போர்த்திய சால்வை , தும்பைப் பூ என வெளுத்த நீண்ட தாடி, வழுக்கை தலையின் ஓர மயிர்களை இணைத்துக் கட்டிய வெண் குடும்பி நெற்றி நிறைந்த வீபூதி , இறுகிய கறுத்த மெலிந்த தேகம். கையில் நீள குடை, தூர இடமானால் சைக்கிள் சவாரிதான். 1963 இல் குருகுலம் ஆரம்பம் கண்டது. வளர்வு வேகம் விரைந்தது. கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியிலிருந்து உருத்திரபுரம் நோக்கிய வீதியில் இல்லம் அமைந்திருக்கிறது. அப்பு கதிரவேலு ஒரு பாடசாலை அதிபர். இரயில் விபத்து ஒன்றில் உயிர் தப்பிய விழிப்பு அவர், தன்னையும் குடும்பத்தையும் இச் சேவைக்கு தாரை வார்க்க உதவிற்று.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

ஓடிக்கொண்டிருந்த யாழ்தேவி பயணத்தில் இறங்கும் கதவருகில் உட்காந்திருந்த அப்பு கதிரவேலு எப்படியோ வெளியே தள்ளுண்டார். தள்ளுண்டவர் பக்கக் கம்பியை இறுகப் பற்றியபடி தொங்க அவதானித்த ஒருவர் சங்கிலியை இழுத்து யாழ்தேவியை நிறுத்த அவர் காப்பாற்றப்பட்டார். அதிபர் கதிரவேலு அப்பு கதிரவேலாக தன்னை அன்றுமுதல் ஒப்புவித்தார். தன் இல்லத்திலேயே ஆறு சிறுவர்களுடன் குருகுலத்தை ஆரம்பித்தார். விரைந்து ஆசிரியர் சேவையில் ஓய்வு பெற்றார். அரசாங்கத்திடம் ஐம்பத்திரண்டு ஏக்கர் நிலம் பெற்றார் . இன்றைய குருகுலம் இவ்விடத்தில் 1963 இல் அமைந்தது

ஒன்றில் ஆரம்பமாகி மூன்றான கட்டடத் தொகுதி ஆண் பெண்களுக்கு தனியான தங்குமிட வசதி. சிறுவர்கள் பயிற்சியாளர்கள் ஆதரவில்லாத முதியோர்களென 150 பேர் வரை தங்க வசதி என்பன ஒருங்கிணைந்து இருந்தது. சர்வ சக்தி பீடமென சைவ கோவிலையும் இது கொண்டிருந்தது. காந்திய தொண்டர் பயிற்சி நெறி கலவரத்தால் இடம் பெயர்ந்தவர்களை பராமரிக்கும் அகதி சேவை 35 ஏக்கர் வரை வீட்டுப் பயிர் ஓரமாக இந்து மகா வித்தியாலயம் என குருகுலம் விரிவு கண்டது. மா, பலா, வாழையால் நிறைந்த முன்புறச் சோலை . சாணப் பசுமை ஒளிரும் முற்றத்தின் அழகுக் கோலம். எந்நேரமும் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய வழிபாடு.படிப்பு, விளையாட்டு என சுறு சுறுப்பாக இயங்கும் சிறுவர்கள், முழுப் பாவாடை வேட்டி என முகம் மலர்ந்த தோற்றம் சிறுவர்களிடம் காணப்படுவதும் ஒரு விசேடம். நடராஜா மாஸ்டர், டாக்டர் ராஜசுந்தரம், டேவிட் ஐயா என காலத்துக்கு காலம் பல தொண்டர்களைக் கண்ட நிறுவனம் இது.

எத்தனையோ சிறுவர்களுக்கு ஆதரவு தந்த அப்புவின் மரணம் விபத்துக்கானது வேதனைக்குரியது. ஒருநாள் கல்வியங்காட்டில் காரில் சென்ற அப்பு, அம்மா, லண்டனில் இருந்து சென்ற மகன் மருமகள் என எல்லோருமே இந்திய இராணுவ குண்டு வீச்சில் காரோடு சாம்பலாகினர்.

குருகுலத்துக்கு வருகை தந்த பலரும் அதனுடைய சிறப்பை எண்ணாமல் இருக்க முடியாது. இன்றும் அது முன்னாள் அரசாங்க அதிபர் இராசநாயகம் அவர்களுடைய இயக்கத்திலேயே தொடர்ந்தும் இயங்கி வருகின்றது.

இன்றும் 250 இக்கு மேற்பட்ட சிறுவர்களை அரவணைக்கின்ற இல்லமாக குருகுலம் சிறப்பாக இயங்கி வருவதும் ஆறுதல் தரும் ஒரு செய்தி காலத்தின் தேவை கருதி ஆற்றப்படுகின்ற சேவை.

இங்கிருக்கின்றவர்கள் திவசம் திதி என்று கொடுக்கின்றபோது தாங்களும் உறவினர்களும் உண்டு மகிழ்கின்ற அதே வேளையிலே ஊரில் இவ்வாறு தவிக்கின்றவர்களுக்கு ஆதரவு தருகின்ற இல்லங்களுக்கும் தர்மக் கரத்தை நீட்டுவது பொருத்தமானதல்லவா ?


## Middlesex Tamil Academy Mentoring Project (Harrow)

*MTA would like to offer all vulnerable Tamil Children and young people the opportunity to have a mentor*

**Are you a community minded person?**

**Do you have some time to spare as a volunteer for your own community?** (We will meet your volunteer expenses)

**Do you want to become a fully trained Mentor?**
(Once you have trained you have to work with us for minimum of one year)

**Would you like to help 11- 18 years old Tamil Children**

**from our community who have experienced war and trauma, separation from home and relatives and often arrive in UK unaccompanied after travelling through several countries, evidence suggests that these experiences put these young people at particular risk of the following**

- **Academic under achievement**
- **School exclusion**
- **Being NEET ( not in Education, employment or training)**
- **Radicalisation**
- **Involvement in gang and criminal activities including drug misuse**
- **Mental health and emotional problems**

**You must be available for five days training without missing any days!**

- **Saturdays 17th 24th and 31st March - (9.30 to 4.30pm)**
- **Thursdays 22nd and 29th March - (6.30 to 8.30pm)**

**The training venue will be informed once you have been selected**

***Person specification:***

- Fluency in Tamil and English with good communication skills both written and verbal
- Commitment to equal opportunities and confidentiality
- Experience of working with young people or the ability to relate to young people
- Volunteers will need to obtain police clearance via the criminal Records Bureau (CRB)
- Build up a portfolio detailing their activities and basic computer skills

**Closing date: 5th March 2012 at 5.00PM**

For further details and an application pack please contact by email
Middlesextamilacademy@gmail.com

Harrow COUNCIL LONDON








ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு **£35** மட்டுமே!

**SUBSCRIPTION FORM**

Name: ______

Address : ______

Postcode: ______

Telephone: ______

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# ரீமேக், ரீமிக்ஸ்

## சீரழிகிறதா சினிமாத்துறை



ஒரு படத்தை ரீமேக் செய்வது என்பது அத்தனை சுலபமான வேலை அல்ல. அதே போல ஒரு எழுத்தை ரீமேக் செய்வதும் அத்தனை சுலபமான வேலை அல்ல. சிந்தனை மட்டுமே இங்கே அதிகம் வேலை செய்வதில்லை. மற்றபடி பார்த்து எழுதுவதற்கான புலமை, பார்த்ததை மீண்டும் அப்படியே செய்ய கட்டாயம் திறமை வேண்டும்.

டப்பிங், ரீமேக் என்பதற்கு வேறுபாடு உண்டு. டப்பிங் படங்களில் வசனங்கள் மட்டுமே மொழிபெயர்க்கப்படும். ரீமேக் படங்களில் மொத்த விசயங்களையும் மாற்றி செய்யலாம், ஆனால் மூலபடத்தினை ஒட்டியதாக அமைய வேண்டும் எனும் நிர்பந்தனைகள் ரீமேக் படத்திற்கு உண்டு. இன்றைய தினத்தில் ரீமேக் படங்கள் மிகவும் அதிகம் தமிழ் சினிமாவில் எட்டி பார்த்து கொண்டிருக்கின்றன. பெரும்பாலும் 'பெரிய' நடிகர்கள் என சொல்லப்படுபவர்களே இந்த ரீமேக் கலாச்சாரத்தில் சிக்கி கொள்கிறார்கள்.

இவர்கள் ஆங்கிலப்படத்தை, இந்திப்படத்தை, தெலுங்கு படத்தை, மலையாள படத்தை ரீமேக் செய்வதோடு மட்டுமில்லாமல் பழைய தமிழ் படங்களை ரீமேக் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இதைபோல தமிழ் படங்களும் வேறு மொழிகளில் ரீமேக் செய்யப்பட்டு வருகின்றன. ஒரே நேரத்தில் குறிப்பிட்ட எல்லா மொழிகளிலும் எடுத்து வெளியிடப்படும் திரைப்படங்கள் வெகு சில உண்டு. இப்படி ரீமேக் செய்வது இவர்களிடம் சிந்தனைகள் வற்றி போய்விட்டன என்பதையே காட்டுகிறது என சொல்வோர் உண்டு. 'அரைத்த மாவை அரைக்கும் மசாலா, காதல் கதைகள்' எல்லாமே ஒரு விதத்தில் ரீமேக் படம் தான் என்பதை இந்த இயக்குனர்களும், தயாரிப்பாளர்களும் உணர்வது இல்லை.

ரீமேக் படங்கள் எல்லாமே வெற்றி பெற்றவையா என்றால் அதுவும் இல்லை என்றே சொல்லிவிடலாம். ஒரு மொழியில் உள்ள ரசனை மற்ற மொழியில் இருப்பது இல்லை. பொதுவாக மலையாள படங்களை தமிழில் அப்படியே ரீமேக் செய்தால் ஒரு படம் கூட ஓடாது என உறுதியாக சொல்லலாம். மலையாளத்தில் வெளியான சிறந்த படங்களை தமிழுக்கு என்றே மசாலா தடவி விற்றால் தான் வெற்றி பெறும் நிலைதான் தற்போது நிலவி வருகிறது.

ரீமிக்ஸ் பாடல்கள் அதைவிட மிகவும் கொடுமை என்போர் சிலர். மூல பாடலின் ஜீவனை ஒட்டு மொத்தமாக கொன்றுபோடும் அளவிற்கு 'டன் டன்' என இந்த காலத்து இசைக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டு அவை வலம் வந்து கொண்டிருக்கின்றன. தெய்வீக பாடல்கள் முதற்கொண்டு எல்லாமே இன்று ரீமிக்சியில் சிக்கி சின்னாபின்னமாகி கொண்டு இருக்கின்றன. ரீமிக்ஸ் பாடல்கள் வெகுவாக ஜனங்களால் ரசிக்கப்படுவது என்பது ஓரளவுக்கு உண்மைதான். பாரதியார் கவிதைகளை அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றி பாடிக் கொண்டே இருக்கிறார்கள்.

தனித்தன்மை என்பதை பொறுத்தே ஒருவரின் திறமை பெரிதளவு பேசப்படுகிறது. தனக்கென ஒரு அடையாளத்தை காட்டாத எவருமே உலகில் பெரிதாக சாதித்தது இல்லை. ஒரிஜினாலிட்டி, நாவல்டி என சொல்கிறார்கள். ஆனால் இதை எல்லாம் எல்லா துறைகளுமே கிட்டத்தட்ட மூட்டை கட்டி வைத்துவிட்டதாகவே தெரிகிறது. எதற்கு கிடந்து *மெனக்கெடுவானேன். சிம்பிளா ஒரு விசயத்தை* செய்றதை விட்டுட்டு எதுக்கு காம்ப்ளிகேட் பண்ணனும் என்றே பலரும் நினைக்கிறார்கள். உடனடி வெற்றிதான் இப்போதைய இலக்கு. உடனடி வெற்றி உடனடியாக மறைந்து போய்விடுகிறது, அது காலத்திற்கும் நிற்பது இல்லை.

அதைப்போலவே இணையத்தில் மற்றும் பத்திரிகைகளில் எழுதும் பலரிடம் ஒரிஜினாலிட்டி இருப்பது இல்லை என்கிற குற்றச்சாட்டு நிலவி வருவது தவிர்க்க இயலாதது. அவசர உலகில் நின்று நிதானமாக எழுதும் நிலை எல்லாம் வெகு குறைவானவர்களிடமே இருக்கிறது என்கிற ஒரு கருத்து நிலவி வருகிறது.

> ரீமிக்ஸ் பாடல்கள் அதைவிட மிகவும் கொடுமை என்போர் சிலர். மூலப் பாடலின் ஜீவனை ஒட்டு மொத்தமாக கொன்றுபோடும் அளவிற்கு 'டன் டன்' என இந்த காலத்து இசைக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டு அவை வலம் வந்து கொண்டிருக்கின்றன. தெய்வீக பாடல்கள் முதற்கொண்டு எல்லாமே இன்று ரீமிக்சியில் சிக்கி சின்னா பின்னமாகி கொண்டு இருக்கின்றன.

நாவல்கள், கவிதைகள், உபநிடதங்கள், வேதங்கள் என முன்னோர்கள் எழுதியவற்றை பிற மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிட்டு இருக்கிறார்கள். இங்கே மூலத்தினை சிதைக்காமல் எழுதுவது மிகவும் அவசியம் ஆகிறது. இப்படி பல காலத்திற்கு முன்னாள் எழுதியவைகள் திரும்பவும் எழுதுவதால் எழுத்துகள் சீரழிந்து கொண்டிருக்கின்றன, சிந்தனைகள் சீரழிந்து கொண்டிருக்கின்றன என்று அர்த்தம் ஆகிவிடாது. அதைப்போலவே ரீமேக், ரீமிக்ஸ் போன்றவைகள் ஒரு துறையை சீரழித்து கொண்டிருக்கின்றன என்பது ஆகாது. பழையனவாகிய அவை எல்லாம் புதுப்பிக்கப்பட்டு கொண்டு வருகின்றன என்றுதான் அர்த்தம் கொள்ளலாம்.

*-இராமகிருஷ்ணன்*

திரை விமர்சனம்

# The Artist



117 வருடங்களுக்கு முன்பு லூயி லூமியும் அகஸ்தா லூமியும் பாரிஸில் முதல் முறையாக அசையும் படத்தை திரையிட்டு காட்டிய போது ஏற்படுத்திய வியப்பில் முழுமையாக இல்லை என்றாலும் ஒரு குறிப்பிடும்படியான அளவையேனும் இன்றும் ஏற்படுத்துவது தான் சினிமா. இத்தனை ஆண்டுகளுக்கு பிறகும் சினிமா காலாவதி ஆகாமல் இருப்பதற்க்கான பெருங்காரணங்களில் இதுவும் ஒன்றாகும். அன்று அசைய தொடங்கிய சினிமா பின்னர் கதை சொல்ல தொடங்கியது, பேச தொடங்கியது, வண்ணமாகியது இன்னும் பல மாயங்கள் புரிய தொடங்கியது. இந்த பரிமாண வளர்ச்சியில் மௌன திரைப்படங்கள் வேறொரு காலத்தின் கலாச்சார பதிவுகளாகவும், கலை பொக்கிஷங்களாகவும் எஞ்சி நிற்கின்றன. நீங்கள் Charlie Chaplinயும் Buster Keatonயும் உங்கள் கணினியிலோ டி.வி.யிலோ பார்த்து இருக்கலாம் சிரித்தும் ரசித்தும் கூட இருக்கலாம் ஆனால் அன்றைய மக்களிடம் அது ஏற்படுத்திய உணர்வுகளை உங்களால் அனுபவிக்கவே முடியாது. கொலைக்களத்தில் வெடித்த துப்பாக்கியை இன்று மியூசியத்தில் பார்ப்பவனுக்கும் அன்று வெடிக்கும் போது பார்த்தவனுக்கும் உள்ள வித்தியாசத்தை போன்றதாகும். இப்படி கால சக்கரத்தில் பின்னால் சென்றால் மட்டுமே நிகழ கூடிய அதிசியத்தை நிகழ்காலத்தில் நடத்தி காட்டும் ஒரு முக்கியமான முயற்சி தான் The Artist.

1927 , மௌன பட சூப்பர் ஸ்டாரான ஜார்ஜ் வாலண்டின் அவருடைய ஒரு படத்தின் ப்ரீமியர் காட்சியை முடித்து விட்டு வரும் போது ஒரு ரசிகையால் முத்தமிடப்படுகிறார். அது 'Who's That Girl?' என்ற தலைப்போடு முதல் பக்க செய்தியாகிறது. மறுநாள் அந்த ரசிகை சினிமா வாய்ப்பு தேடி வருகிறார் ஒரு சிறு வாய்ப்பு கிடைக்கிறது அப்போதுஅவர் பெயர் பெப்பி மில்லர் என்று தெரிய வருகிறது. அப்போது ஜார்ஜை மறுபடி சந்திக்கிறார் அவர்களுக்கு இடையில் ஒரு நட்பு உண்டாகிறது. பெப்பி மில்லர் கொஞ்சம் கொஞ்சமாக திரை உலகில் முன்னேறி கொண்டு இருக்கிறார்.

1929, சினிமா பேச தொடங்குகிறது ஆதலால் இதுவரை ஜார்ஜை வைத்து படமெடுத்து கொண்டிருந்த ஸ்டுடியோ மௌன படங்களை இனி தயாரிக்க போவதில்லை என அறிவிக்கிறது. கோபமடைந்த ஜார்ஜ் சொந்தமாக ஒரு மௌன படம் தயாரிக்கிறார் அதே நேரத்தில் ஸ்டுடியோ பெப்பியை கதாநாயகியாக போட்டு பேசும் படம் ஒன்றை தயாரிக்கிறது. இரண்டும் ஒரே நாளில் வெளியாகிறது. பெப்பியின் பேசும் படம் பெரும் வெற்றி பெற ஜார்ஜின் மௌனப் படம் படுதோல்வி அடைகிறது. அதே நேரத்தில் Wall Street பங்கு சந்தை கடும் பின்னடைவை சந்திப்பதால் மொத்தமாக திவாலாகிறார் ஜார்ஜ். ஜார்ஜின் நிலைமை மேலும் மோசமாகி கொண்டே போகிறது. அதற்கு நேர் மாறாக தொடர்ச்சியாக வெற்றி படங்களில் நடித்து ஹாலிவுட்டின் உச்ச நட்சத்திரமாகிறார் பெப்பி. இருவரும் சந்தித்தார்களா, ஜார்ஜ் மீண்டும் உச்சத்தை அடைந்தாரா என்பதெல்லாம் தான் மீதிக் கதை.

கதையை படிக்கும் போது வெகுசாதாரணமான படம் போல தோன்றலாம் ஆனால் எடுக்கப்பட்ட விதம் அசாத்தியமானது. முழுப்படத்தையும் மௌனப் படமாக எடுத்தோடு மட்டுமல்லாமல் அந்த காலத்தில் இருந்த டெக்னிக்கல் விசயங்களும் (4:3 Aspect ratio , 22fps etc.) பயன்படுத்தப்பட்டு உள்ளது. இந்த படத்திற்கு சிறந்த படத்திற்கான ஆஸ்கர் கிடைப்பதற்கான வாய்ப்புகள் நிறையவே இருக்கிறது ஆனால் ஆஸ்கர் விருதே அரசியல்களால் ஆனது எனவே Tree of Lifeக்கோ அல்லது மொக்கை படமான War horseக்கோ கூட விருது கொடுக்கப்படலாம். விருது கொடுக்கப்பட்டாலும் கொடுக்காவிட்டாலும் இது ஒரு அற்புதமான படம் தவறாமல் பாருங்கள்.

*- ஆனந்த்*



✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Company Formation
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# சினிமா

திரை விமர்சனம்

## முப்பொழுதும் உன் கற்பனைகள்....



விண்ணைத்தாண்டி வருவாயா, கோ போன்ற சூப்பர் ஹிட் படங்களை கொடுத்த நிறுவனத்தின் தயாரிப்பாளர் இயக்குனராக அவதாரமெடுத்திருக்கிற படம். காதலர் தின வாரத்தில் வந்திருக்கும் இன்னொரு இளைமையான படமாய் இருக்கும் என்ற எதிர்பார்ப்பை தொடர் விளம்பரங்களால் ஏற்படுத்தியிருந்தாலும் சொதப்பியிருப்பாரோ என்ற ஒரு எண்ணம் உள்ளுணர்வாய் தோன்றிக் கொண்டேயிருந்தது. அதை உறுதிப் படுத்தியிருக்கிறார்கள்.

அதர்வா மென்பொருட் துறை இளைஞன். அலுவலக பெண்கள் எல்லாம் அவனையே மொய்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஐ.டி. துறையில் வேலை பார்ப்பவர்கள் எப்படி பேசுவார்கள், என்ன செய்வார்கள் என்பதை பற்றி எப்போதுதான் சரியாக எடுக்க போகிறார்களோ கோடம்பாக்க சிற்பிகள். இங்கும் அப்படி சில சொதப்பல்கள்.

சரி கதைக்கு வருவோம்... அதர்வாவோ சாரு என்கிற பெண்ணை காதலிப்பதாகவும், அவளுக்காகத்தான் வார இறுதியில் பெங்களூருக்கு போய் வருவதாகவும் சொல்கிறான். அங்கே காத்திருக்கும் சாருவுடன் சந்தோஷமாய் இருக்கிறான். ஒரு பெரிய பணக்கார வீட்டுப் பையனை படு கொடூரமாய் அந்நியன் மேக்கப் போட்டுக் கொண்டு கொல்கிறான். அதே நேரத்தில் சாரு போலவே இருக்கும் அமலா பாலுக்கு அமெரிக்காவில் நிச்சயதார்த்தம் ஆகிறது. சென்னையில் தன் கம்பெனி பொறுப்பை ஏற்கவரும் லதா என்கிற அமெரிக்க அமலாபால், அதர்வாவைப் பார்த்து ஆச்சர்யபடுகிறார். ஒரு கொலை முயற்சிக்கு பிறகு, அதர்வாவை மனநல மருத்துவரான ஜெயப்பிரகாஷை விட்டு செக் செய்ய வைக்கும் போது அவர் சாரு என்கிற பெண்ணை உயிருக்கு உயிராய் காதலிப்பதாய் சொல்கிறார். லதா என்கிற அமலா பால் அப்படி இருக்கவே முடியாது ஏனென்றால் அந்த சாரு என்கிற சாருலதா நான் தான் என்கிறார். அதன் பிறகு என்ன நடந்தது என்பதை முடிந்தால் பொறுமையுடன் வெள்ளித்திரையில் பார்த்துக் கொள்ளவும்.

கதை என்று பார்த்தால் நல்ல முயற்சிதான். ஏற்கனவே பார்த்திபனின் 'குடைக்குள் மழை'யில் முயற்சி செய்ததுதான். ஆனால் அதை திரைக்கதையாக்கிய விதத்தில் தான் அத்துணை சொதப்பல்களும். சுவாரஸ்ய பின்னலாய் அமைந்திருக்க வேண்டிய படம் உயிரில்லாமல் போனதற்கு காரணம் திரைக்கதைதான். ஒன்று சாருவுடன் காதல் கொண்ட எபிசோட் நன்றாக இருந்திருக்க வேண்டும். அல்லது தற்போதைய எபிசோட் அசத்தலாய் இருந்திருக்க வேண்டும். அல்லது முடிச்சுக்களை போடும்போதாவது அழுத்தமாய் போட்டிருக்க வேண்டும்.

அதர்வா ஆள் ஸ்மார்ட்டாக இருக்கிறார். நடிக்க முயற்சி செய்கிறார். ஓரளவுக்கு நன்றாக நடனம் ஆடுகிறார். ஆனால் பெண்கள் எல்லோரும் மயங்கி பின்னால் சுத்துவதாய் காட்டப்படும் காட்சிகள் எல்லாம் அவ்வளவு நம்பும்படியாய் இல்லை. அவ்வப்போது சிலுப்பிவிடப்பட்ட பூனை போல கோபமாக முறைத்துவிட்டு யாருடனோ சண்டை போடுகிறார். அதுவும் ஒற்றைக்கையை தரையில் ஊன்றி தலைகீழாக நின்றவாறு!! அடுத்தது அமலா பால். படம் முழுக்க நம்மை கலங்கடிக்க வேண்டிய கேரக்டராய் இருந்திருக்க வேண்டியவர் ஒட்டாமலேயே போய்விடுகிறார். அடடே... வட போச்சே....

நாசர், ஜெயப்பிரகாஷ், போன்றோர் நன்றாக செய்திருக்கிறார்கள் என்பதை எழுதாமலேயே புரிந்து கொள்ளலாம். ஆனால் ஜெயப்பிரகாஷ் போன்ற சிறந்த நடிகர்களை இப்படி வேஸ்ட் செய்யப்படுவது படுமோசம். சந்தானம் அவ்வப்போது வந்து கிச்சு கிச்சு மூட்டுகிறார் அவ்வளவே.

ஜி.வி.பிரகாஷ்குமாரின் இசையில் நிறைய ஆங்கிலப் பாடல்களின் தாக்கம். சுனந்தா, கண்கள் நீயே, ஆகிய பாடல்கள் ஓகே. தாமரையின் வரிகளில் கண்கள் நீயே அருமை. பின்னணியிசை இரைச்சலாய்த்தான் இருக்கிறது. படம் நெடுக 'ஆஹா ஹ..ஹ..ஹா..ஹ..ஹா..' என்று பின்னணியில் ஒரு பெண் குரல் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. நமக்கு ரொமாண்டிக் மூட் வரவழைக்க முயற்சி செய்றாங்களாம்.... விக்ரமன் படத்துல 'லா லா' பாடினாலே கிண்டல் செய்கிறோம். அதையே கொஞ்சம் ஹைடெக்கா மாத்தி ஸ்டைலிஷா பாடினா நம்ம பொறுத்துக்கணுமா? நெவெர்......

ஒளிப்பதிவு ஓகே. பல இடங்களில் கௌதம் மேனன் படங்களைப் போல எடிட்டிங் ஸ்டைல் இந்தப்படத்திற்கு ஒத்துவரவில்லை.

எழுதி இயக்கியவர் எல்ரெட் குமார். கதை விஷயத்தில் ஓகே என்றாலும், திரைக்கதை வசனத்தில் பெரிய கோட்டை விட்டபடியால் படம் பார்பவர்களுக்கு குழப்பம் ஏற்படுத்தியது மட்டுமே மிஞ்சுகிறது. ஏற்கனவே வேறு ஒரு இயக்குனரை வைத்து கால்வாசி படம் முடித்துவிட்டு, அவருக்கு சரியாய் வேலை தெரியவில்லை என்று இவரே டைரக்டராய் பொறுப்பேற்று முடித்திருக்கிறார். ஒருவேளை அந்த பழைய டைரக்டர் ஒழுங்கா பண்ணியிருப்பாரோ..?. படம் ஆரம்பித்ததிலிருந்து முடிச்சு மேல் முடிச்சுப் போட்டு உங்களை அசத்துகிறேன் பார் என்று நினைத்துக் கொண்டு ஏகப்பட்ட லாஜிக் ஓட்டைகளோடு குழப்பி விட்டிருப்பது வேதனை. சாரு பெயரில் எதற்காக தேவையில்லாமல் ஒரு குருட்டுப் பெண் பேச வேண்டும்? அதர்வாவின் மனநிலை பிரச்சனைக்கு காரணம் அம்மாவின் நிழலிலேயே வாழ்ந்தது தான் என்று ஒரு அரை மணி நேர கிராமத்து பாகத்தைக் காட்டுகிறார். அடித்துப் போட்டார் போல தூக்கம் வர ஆரம்பித்து விட்டது. முகத்தில் கலர் பெயிண்ட் அடித்துக் கொண்டு ஆளை கொன்று விட்டால் யாருக்கும் தெரியாதா? கொலை செய்யும் போது அவனது மனநிலை என்ன? திடீரென அமலாபாலுக்கு நிச்சயம் செய்த அமெரிக்க மாப்பிள்ளை ஹோமோ பார்ட்டி என்று ரெண்டு அரைகுறை வெள்ளைக்காரனை கொண்டு வந்து கொலை முயற்சி செய்வது எதற்கு? என்று கேள்வி மேல் கேள்வியாய் எழுந்து நம்மை குழப்பியெடுத்து, நம்மையும் மூன்று இரவு, பகல் நிலைக்குத்தி உட்கார வைத்துவிடுவார்கள் போலிருக்கிறது. எல்ரெட் Better luck next time!

- *அகிலன்*

# சினித்துளி


## அலெக்ஸ் பாண்டியன்...!



தொடர் வெற்றிகளைக் கொடுத்துக்கொண்டிருக்கும் கார்த்தி அடுத்து நடிக்கும் படத்திற்கு ரஜினியின் மிகப் பிரபலமான கதாபாத்திரங்களின் பெயர்களில் ஒன்றான 'அலெக்ஸ் பாண்டியன்' என்ற பெயரை வைத்துள்ளனர். தற்பொழுது நடித்துவரும் 'சகுனி' படத்தின் பின் சுராஜ் இயக்கத்தில் நடிக்கவிருக்கும் படத்திற்கு ரஜினி நடித்து வெற்றிப் பெற்றப் படமான 'மூன்றுமுகம்' படத்தில் ரஜினியின் பெயரான 'அலெக்ஸ் பாண்டியன்' என்ற பெயரை தலைப்பாக வைத்துள்ளனர்.

இப்படத்தில் கார்த்தியின் ஜோடியாக அனுஷ்கா நடிக்கிறார். ஏற்கெனவே ரஜினியின் படத் தலைப்புகளான படிக்காதவன், மாப்பிள்ளை போன்றவற்றை பயன்படுத்தி நாறடித்தவர் சுராஜ் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'ரஹ்மான்' இடத்தில் 'ராஜா'!



கௌதம் வாசுதேவ் மேனன் இயக்கும் படத்தில் இளையராஜா. ஆச்சரியமாக இருந்தாலும் அதுதான் உண்மை. ஹாரிஸ் ஜெயராஜுடனான கூட்டணி பிரிந்த பிறகு கௌதம் படத்துக்கு ரஹ்மான் இசையமைத்து வந்தார். விஜய்யின் ரோஹன் அத்தியாயம் ஒன்றுக்கு இசையமைக்க ஒத்துக் கொண்டவர் நீதானே என் பொன்வசந்தம் படத்துக்கு இசையமைக்க இயலாது என்று கைவிரித்து விட்டார் அங்கிங்கு சுற்றி இப்போ இசையமைக்க இளையராஜாவை அணுகியிருக்கிறாராம் கௌதம்.

கௌதம் படத்துக்கு இளையராஜா இசையமைப்பது இன்னும் உறுதியாகவில்லை. ஆனாலும் நீ தானே பொன் வசந்தம் திரை முன்னோட்டத்தில் இளையராஜாவின் இசையை வைத்து தயாரித்து வெளியிட்டும் விட்டார்கள்.

## கைவிடப்பட்ட 'துப்பாக்கி'!



கொலிவுட்டில் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில், கலைப்புலி தாணு தயாரிக்கும் துப்பாக்கியில் இளைய தளபதி நடிக்கிறார். துப்பாக்கி படப்பிடிப்பு மும்பையில் நடந்து வந்த நிலையில், தயாரிப்பாளர்-பெப்ஸி பிரச்சினை காரணமாக படப்பிடிப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் ஏ.ஆர்.முருகதாசும் குறும்படம் ஒன்றை தயாரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். இதனால் நடைபெற்று வந்த துப்பாக்கி படப்பிடிப்பு கைவிடப்பட்டுள்ளது.

## 'கர்ணன்'...



1960களில் நடிகர் திலகத்தின் நடிப்பில் மாபெரும் வெற்றி பெற்ற சரித்திர படமான கர்ணன் படம், மீண்டும் புதுப்பொலிவுடன் டிஜிட்டல் முறையில் தயாராகியுள்ளது. பி.ஆர்.பந்தலு இயக்கத்தில், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், முத்துராமன், அசோகன், என்.டி. ராமாராவ், சாவித்திரி, தேவிகா, நம்பியார் உள்ளிட்ட ஏகப்பட்ட திரை ஜாம்பவான்கள் நடிப்பில் வெளியான படம் கர்ணன். இதில் கர்ணனாக நடிகர் திலகம் நடித்திருந்தார்.

புதுப்பொலிவுடன் உருவாக்கப்பட்டுள்ள கர்ணன் படத்தின் முன்னோட்டக் காட்சிகள் வருகிற பிப்ரவரி 21ம் தேதி வெளியாக இருக்கிறது. தொடர்ந்து படத்தை உலகம் முழுவதும் வெளியிட இருக்கின்றனர்.






# GT MOBILE

**Pay less talk more**

# £10 Free Credit

## with £20 top-up

**Sri Lanka Landline 7p /min**

**Mobile 11p /min**

No connection charge

| Top-up | £5 | £10 | £20 |
|---|---|---|---|
| FREE minutes & texts* GT to GT | 100 | 300 | 750 |

**UK** Landline 3p /min · Mobile 9p /min

www.gtmobile.co.uk For more information: 020 7132 0303 Top-up available: Sainsbury's Costcutter BOOKER

# Southall Travel

*Redefining Travel*

*Why travel with*
## Southall Travel?

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
## சவுத்ஹோல் டிராவல்
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk